# ஜீவநதி



பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்

**கலை இலக்கிய மாத சஞ்சிகை**

சித்திரை – 2011

60/=

# நதியினுள்ளே...

## கவிதைகள்


அ.பௌநந்தி - 06
முல்லை வீரகுட்டி - 13
வெலிப்பன்னை அத்தாஸ் -18
கமல சுதர்சன் - 24
வே.ஐ.வரதராஜன் - 24
இ.ஜீவகாருண்யன் -24
சீ.என்.துரைராஜா -25
செல்லக்குட்டி கணேசன் - 25
ஷெல்லிதாசன் - 28
மகிழ்நன் - 36
கு.றஜீபன் - 41
வெ.துஷ்யந்தன் - 44
த.ஜெயசீலன் - 44


## சிறுகதைகள்


தெணியான் - 07
அன்புமணி - 19
றாதிகா - 29
அரியாலையூர் சி.சிவதாசன் - 37


## கட்டுரைகள்


எஸ்.சந்திரபோஸ் - 03
அருள் தந்தை இராசேந்திரம் ஸ்ரலின் - 14
யுகாயினி - 22
கீதா கணேஸ் - 26
தி.ஞானசேகரன் - 31
பேருவளை றபீக் மொஹிடீன்- 39


## இரசனைக் குறிப்பு


க.பரணீதரன் - 45


## நூல் அறிமுகக் குறிப்புகள்


த.கலாமணி
அர்ச்சுனன்


## கலை இலக்கிய நிகழ்வு

## பேசும் இதயங்கள்

# ஜீவநதி

2011 சித்திரை இதழ் - 31

**பிரதம ஆசிரியர்**
கலாமணி பரணீதரன்

**துணை ஆசிரியர்**
வெற்றிவேல் துஷ்யந்தன்

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி



**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.



**ஆலோசகர் குழு:**
திரு.தெணியான்
திரு.கி.நடராஜா



**தொலைபேசி** : 0775991949
0212262225

E-mail : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank
Nelliady
A/C - 8108021808
CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள். பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும் படைப்புகளைச் செம்மைப்படுத்த ஆசிரியருக்கு உரிமை உண்டு.

- ஆசிரியர்


ஜீவநதி
(கலை இலக்கிய மாத சஞ்சிகை)

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-

## இயற்கையின் சமநிலையைப் பேணுவோம்!

இயற்கை மீண்டுமொருமுறை சீறிச் சினந்துள்ளது. சுனாமி அனர்த்தத்தினால் யப்பானில் இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளன என்ற துயரச் செய்தி மனித குலம் முழுமைக்குமே அச்சம் தருவதாக உள்ளது. இதேவேளை பூமியதிர்வை அடுத்து, யப்பானிலுள்ள நான்கு அணு உலைகள் வெடித்து கதிர்வீச்சுக் கசிவு ஏற்பட்டிருப்ப தானது யப்பானை மாத்திரமன்றி அண்டைய அயல் நாடுகளையும் அச்சுறுத்தலுக்குள்ளாக்கி இருக்கின்றது.

இன்றைய விஞ்ஞான, தொழில்நுட்ப, இலத்திரனியல் வளர்ச்சிகள் யாவும் மானிட வல்லமையின் சாட்சியங்கள் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், இந்த முன்னேற்றங்கள் யாவும் மனித வாழ்வைச் சிக்கல் நிறைந்ததாக மாற்றி, மனித குலத்துக்கே பேரழிவை ஏற்படுத்தக்கூடிய அணுவாயுதங்களின் உற்பத்திக்கும் ஏவுகணைப் பரிசோதனைகளுக்கும் வழிகோலி யுள்ளன. இரசாயனக்குண்டுகளின் உற்பத்தியும் அணுவாயுதங் களின் பெருக்கமும் மனித வாழ்வைச் சூறையாடவே பயன் படுத்தப்பட்டு வருகின்றன. இதனால் மனித குலத்தின் அவல ஒலி எங்கும் எப்போதும் கேட்டுக் கொண்டே இருக்கிறது.

இயற்கையின் சமநிலையைக் குலைக்கும் செயல் நடவடிக்கைகளால் மானிட வல்லமை மேற்கிளம்பும்போது, மானிட வாழ்வின் நிச்சயமற்ற தன்மையை உணர்த்துவதாய் இயற்கை சீறிச்சினந்து உயிர்களைப் பலி கொள்ளும் என்பதையே அண்மைக்கால இயற்கை அனர்த்தங்கள் நிரூபிக்கின்றன. இயற்கையின் சமநிலையைப் பேணும் வகையில் மனித வர்க்கம் தனது நடவடிக்கைகளைக் கட்டுப் படுத்திக் கொள்ளாத வரை இயற்கை அனர்த்தங்கள் தொடரும்.

இயற்கை அனர்த்தங்களினால் விளைந்த அவலங்கள் போன்றே யுத்த அனர்த்தங்களால் மக்களின் வாழ்வு சூறையாடப்படும் வேளைகளிலும் மானிட அவலக்குரல் ஓமமாக ஓங்கி ஒலித்து வருகின்றது என்பதையும் சகலரும் உணர்ந்து கொள்ள வேண்டும். இவற்றை உணர்த்தும் இலக்கியங்களைப் படைக்க உலக இலக்கியவாதிகள் அனைவரும் ஓரணியில் திரளவேண்டும்.

– க.பரணீதரன்
பிரதமஆசிரியர்



எஸ்.சந்திரபோஸ்

# மலையக இலக்கியச் செம்மல் தெளிவத்தை ஜோசப்

மலையக மக்களின் வாழ்வியலை இலக்கிய மாக்கி ஈழத்தமிழ் இலக்கியத்தில் தலைநிமிர்ந்து நிற்பவர் தெளிவத்தை ஜோசப். படைப்பாளியும் விமர்சகருமான திரு.மு. நித்தியானந்தன் தெளிவத்தை ஜோசப்பின் "நாமிருக்கும் நாடே" என்னும் சிறு கதைத் தொகுதிக்கு வழங்கிய முன்னுரையில், "தாங்களே பாதையும் வெட்டி பயணமும் போக வேண்டிய மலையக இலக்கியச் சூழலை கவனத்தில் கொண்டால் தெளிவத்தை ஜோசப் ஒரு சாதனையாளர் என்பதில் சந்தேகம் இல்லை" என்று குறிப்பிடுகின்றார். இவரது கூற்றுக்கு அமைவாக பாதை வெட்டி இலக்கியப் பயணம் போன மலையகப்படைப்பாளிகளுள் தெளிவத்தை ஜோசப் முதன்மையாளராக வெற்றிக்கம்பத்தை தொட்டு நிற்கின்றார். இவரது இலக்கியப் படைப்புக்கள் தனித்து "மலையக இலக்கியம்" என்ற பிரதேச எல்லையைத் தாண்டி ஈழத்து இலக்கியத்திற்கு வளமும் செழுமையும் சேர்க்கின்றன.

இக்காரணங்களினால், இலக்கிய ஞானி எஸ். பொன்னுத்துரை அவர்கள் "ஈழத்து இலக்கியத்துக்கு மலையக எழுத்துக்கள் புது இரத்தம் பாச்சும் வல்லமை கொண்டவை" என எதிர்வு கூறுகின்றார் இதே போன்று "தெளிவத்தை ஜோசப் என்ற படைப்பாளி மலையகத் திற்கு மட்டும் சொந்தமானவர் அல்ல. அவர் இலங்கை இலக்கியத்திற்குச் சொந்தமானவர். இவரது படைப்புக் கள் இலங்கை இலக்கியத்திற்குச் சொந்தமானவை. அவர் ஆரோக்கியமான இலங்கை எழுத்தாளர். 'இலங்கையின் சிறந்த படைப்பாளிகளில் ஒருவர்' என செங்கை யாழியான் குறிப்பிடுகின்றார். தெளிவத்தை ஜோசப் 16–02–1934ல் பதுளை மாவட்டம் ஊவாகட்டவளைத் தோட்டம் காலி – எல வில் சந்தன சாமிப்பிள்ளைக்கும் பரிபூரணம் என்பவர்களுக்கு மகனாகப் பிறந்தார். ஆரம்பக்கல்வியினை ஊவா கட்டவளை தோட்டப் பாடசாலையில் ஆசிரியராக இருந்த தமது தந்தை யாரிடமும் பின்னர் தமிழ் நாடு கும்ப கோணம் LITTLE FLOWER HIGH SCHOOLலிலும், பின்னர் இலங்கை திரும்பி, பதுளை ST.BEDE'S College இல் கற்று 1956முதல் 1964வரை தெளிவத்தை தோட்டப் பாடசாலை ஆசிரியராகப்பணி புரிந்தார்.

இக்காலத்தில் தான் இவர் எழுத்துத்துறையில் பிரவேசம் ஏற்பட்டது. இவரது முதல் சிறுகதையான "வாழைப்பழத்தோல்" சென்னையில் இருந்து வெளி வந்த உமா சஞ்சிகையில் வெளிவந்தது. இலங்கையில் வீரகேசரிப் பத்திரிகையில் தோட்டமஞ்சரி பக்கத்திலும் இவரது ஆக்கங்கள் வெளிவரத் தொடங்கிய கொழும்பு கே.வி. எஸ் மோகனின் கதம்பம் சஞ்சிகையிலும் இவரது ஆக்கங்கள் வெளிவந்தன. மலையகத்தில் வெளிவந்த மலைமுரசு சஞ்சிகையிலும் இவரது ஆக்கங்கள் வெளிவந்த போது 1963ம் ஆண்டு மலை முரசு சிறுகதைப் போட்டியில் முதல் பரிசினைப் பெற்றுக் கொண்டார். அத்துடன் அதே ஆண்டில் வீரகேசரி நடத்திய மலையக சிறுகதைப் போட்டியில் இவரது சிறந்த சிறுகதைகளில் ஒன்றான "பாட்டி சொன்ன கதை" முதல்ப்பரிசினைப் பெற்றது. இந்த சிறுகதைபற்றி கலாநிதி துரைமனோகரன் பின்வருமாறு கூறுகின்றார் "இலங்கைச் சிறுகதை துறையில் தமது சுவடுகளை ஆழமாக பதித்தவர்களில் ஒருவராகத் தெளிவத்தை விளங்குகின்றார். அவரது பல்வேறு சிறந்த சிறுகதைப் படைப்புக்களுள் ஒன்று "பாட்டி சொன்னகதை" இக்கதையில் ஒருபாட்டியும் அவளது பேத்தியுமே முக்கிய கதாபாத்திரங்கள். பக்கத்துவீட்டு பரமசிவத்தின் பிள்ளைகளுக்கு கதைசொல்லும் சாக்கில் தன் பேத்திக்கு கதை சொல்கிறாள். தனது மகளுக்கு நேர்ந்த கதி தன்னுடைய பேத்திக்கும் நிகழ்ந்து விடக் கூடாது என்ற ஆதங்கமே பாட்டி கதைசொல்லுவதற்கு காரணம். மகளை அநியாயமாக இழந்துவிட்டதான் பேத்தியையும் இழந்து விடக்கூடாது என்ற அக்கறையும் அவசரமும் பாட்டிகதை கூறிச் செல்கின்றது.

1965இல் வீரகேசரி நடத்திய சிறுகதைப் போட்டியிலும் "பழம் விழுந்தது" என்ற இவரது சிறுகதை முதல் பரிசினை பெற்றுக்கொண்டதன் மூலம் நாடறிந்த ஒரு எழுத்தாளர் ஆனார். பழம் விழுந்தது என்ற கதை பாட்டாளி வர்க்கத்தின் போராட்டவாழ்க்கையில்

"இல்லாமை" என்னும் நிலமை எப்படி உறவுகளை வஞ்சிக்க முற்படுகின்றன என்பதனை "இரண்டு நாளாவது கிழவியின் உயிரை நிறுத்தி வைத்து" அவளது ஓய்வூதியப் பணத்தை பெற்றுவிட ஓடித்திரிந்த வீரன் "கிழப்பழம் விழுந்து விட செய்வது அறியாது நிற்கின்றான்" எனக் கதை முடிகின்றது.

1979ல் சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்ற சிறுகதைத் தொகுதியான "நாமிருக்கும் நாடே" என்ற நூலில் இடம் பெறும் சிறுகதைகள் வெறும் கற்பனைக் கதைகளாக அல்லாமல் மலையக மக்களின் வாழ்க்கைக் கோர்வையாகக்காணப்படுகின்றது. இத்தொகுதியில் வரும் "தீட்டுரொட்டி" மலையக சமூகத்தில் சாதிய அமைப்பின் கட்டுக் கோப்பு பெருமளவு சிதைந்து போன நிலைமையிலும் சாதி உணர்வும் சாதி தீட்டும் இன்று ஆதிக்கம் செலுத்துவதை தெளிவாகக் காட்டுகின்றது. "மண்ணைத்தின்று" என்னும் சிறுகதை 1970களில் ஏற்பட்ட பட்டினி யுகத்தில் வருமானம் குறைந்த நிலமற்ற பெரும் தோட்டத் தொழிலாளிகள் 'சேமண்தண்டையும்' பாதைஓரங்களில் வளர்ந்த புல்லுக்கீரையையும் உணவாக உட்கொண்டு பட்டினிச் சாவை எதிர் நோக்கினர் என்பதையும் நகரத்தை நோக்கி உணவுக்காக வந்த இளம் பெண் களை காமுகர்கள் காசுக்காக ஆசை காட்டிய போது "நாயே பசிதாங்காட்டி மண்ணை திண்டுட்டுசெத்துப் போனாலும் போவேன்... இந்த நடத்தைக்கு வேறு ஆளைப்பாரு" என்று கதை கூறிச் செல்கின்றது.

அடுத்துக் "கூனல்" என்ற கதை ஸ்ரோரில் இருந்து இரவிரவாக தேயிலை மூட்டைகளை "டீமேக்கர்" அலுவலக ஊழியர்கள் கடத்தும் நிலையில் குடித்துப் பார்க்க எடுத்த நாலுஅவுன்சுபெனிங் தேயிலைக்காய் நாளெல்லாம் "ஸ்ரோரில்" நாயாய்ப் பாடுபடும் தொழிலாளியை வேலையைவிட்டு நிறுத்தி விடுகின்ற முரண்பாட்டுஅவலத்தை "கூனல்" அநாயசமாக சித்திரிக் கின்றது. இக் கதைபற்றி விமர்சகர் மு. நித்தியானந்தன் குறிப்பிடுமிடத்தில் ஈழத்துச் சிறுகதைகளில் தரமான பத்துக்கதைகளை தேர்ந்தெடுத்தால் "கூனல்" அதில் நிச்சயம் ஒன்றாகி இருக்கும் என்கின்றார்.

அடுத்து "மீன்கள்" என்ற சிறுகதை ஒரு அற்புத சித்திரிப்பு. காலமெல்லாம் "லயம்" என்ற ஒற்றை யறைக்குள் ஆறேழு பிள்ளைகளுடன் குடியிருக்கும் தோட்டத்தொளிலாளிகளின் அவலத்தைச் சொல்கிறது. இரவு பத்துமணிக்குமேல் வேலையில் இருந்து சற்று குடிபோதையில் வரும் குடும்பத்தலைவன் தன் மனைவி வழமையாக படுத்திருக்குமிடத்தில் அவளையே எதிர்பார்த்துச் சென்று தனது உடலைச் சாய்க்கின்றான் ஆசையின் நிமித்தம் அவளைத் துழாவிப் பார்க்குமிடத்து அவள் எழுப்பும் குரலின் மூலம் அவள் தன் மனைவியல்ல மகள் என்பதை அறிந்து, நடந்து விட்ட சம்பவத்தையொட்டி எழுந்த பதற்றத்துடனும் குற்ற உணர்வுடனும் கொட்டும் பனியையும் பொருட்படுத்தாது அறையை விட்டு வெளியேறுகின்றான். இந்த நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க பெரிய கங்காணிக்கு சாராயப் போத்தலை வாங்கிக் கொடுத்தாவது காலியாகும் இன்னுமொரு காம்பிராவை பெற்றுக் கொள்ள துடியாய்த்துடித்தவன் இறுதியில் அதுகூட நிறைவேறாது போனதைப் பார்த்து தரையில் பிடித்துப்போட்ட மீனாகத்துடிப்பதை கதை கூறிச் செல்கின்றது. அடுத்ததாக "நாமிருக்கும் நாடே..." என்னும் சிறுகதை குரூரமான சுரண்டலுக்கும் அடக்குமுறைக்கும் ஆளாகி நிர்கதி அடையும் தோட்டத் தொழிலாளர்களுள் ஒருவனான வீரமுத்து கிழவனின் ஆசை நிராசையாகிப் போனதை சித்திரிக்கும் கதையாக அமைகின்றது. தன் உழைப்பின் மூலம் சிறுகசிறுகச் சேர்த்த பணத்தில் இந்தியாவில் நிலம் வாங்கிய அவனால் அந் நிலத்தில் குடியேறி வாழ முடியாத "நாடற்ற பிரசை" ஆகின்ற அவலத்தைக் கூறுகின்றது வந்த நாட்டிலும் வாழ முடியாமலும் சொந்த நாட்டிற்குச் செல்ல முடியாது தவிக்கும் தொழிலாளர் துன்பங்களைக் கூறுகின்றது.

1960க்கு முன்னர் ஈழத்தின் அரச பதவிகளில் பெருமளவு யாழ்ப்பாணத்தவர்கள் அமர்ந்திருந்தனர் இது அவர்கள் பெற்ற கல்வியும், ஆங்கிலமொழி அறிவும் காரணமாக அமைந்தன. மலையகப் பிரதேசங்களிலும் ஆசிரியர்களாக, அரசாங்க உத்தியோகத்தர்களாக , பெரும் தோட்டங்களில் அலுவலக உத்தியோகத்தராக, வர்த்தகர்களாகப் பணி புரிந்தனர். இத்தகையோரில் பெரும்பான்மையான யாழ்ப்பாணத்தவர்களால் மலையக பாட்டாளி மக்களுக்குச் செய்யப்பட்ட பாரபட்சங்கள் தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகளில் சித்திரிக்கப்பட்டன இத்தகைய கதைகளுக்கு உதாரணமாக "நாமிருக்கும் நாடே..." சிறுகதைத் தொகுதியில் "சோதனை", "பாவசங் கீர்த்தனம்" அமைகின்றன. இதனால் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இலக்கியக்காரர்களின் வெறுப்புக்கும் ஆளானார்.

தெளிவத்தை யோசப் அரசியல் சகதியில் நுழைந்து விடாமலும் இலக்கிய அணிகளிலும் சேராமலும் ,தனித்துவம் பேணி மலையக இலக்கியத் திற்காகத் தம்மை அர்ப்பணித்து வாழ்பவர். இதனால் முற் போக்கு இலக்கியக்காரர் சிலரின் காள்புணர்வுக் கருத்துக்களுக்கு ஆளானவர். "முற்போக்கு இலக்கியம் என்பது எப்போதும் இடது சாரி இலக்கியமாக அமைந்ததும் இல்லை அமைய வேண்டியதும் இல்லை நாறிப் போன பழமைகளினின்று சமுதாயத்தை விடு விக்கும் நோக்குடனும் அறம் சார்ந்த விழுமியங் களுடனும் அமையும் படைப்புக்கள் முற்போக்கு இலக்கியமே என முற்போக்கு அணியினைச் சேர்ந்த பேராசிரியர் சி. சிவசேகரம் அவர்கள் குறிப்பிடுகின்றார்

இதே போன்றதொரு கருத்தினையே விமர்சகர் மு. நித்தியானந்தனும் முன் வைக்கின்றார். "மனித உறவுகளும் விழுமியங்களும் மதிப்பிழந்து சமூக இழை அறுந்து போன அதேவேளையில் பாட்டாளி வர்க்க உணர்வு பூரணமாக கருக்கட்டாத நிலையில் தோட்டத் தொழிலாளி இந்த சுரண்டல் அமைப்பிற்கு எதிராகத் தனியாகவே நின்று போராடுகின்றான் தனது நடவடிக்கைகளும், தனது தலைவிதியும் தானும் என்ற நிலையில் அவன் இந்த அமைப்போடு நடத்தும் பேராட்டம் கடுமையானது... தொழிலாளிகள் வர்க்க உணர்வு பெறும் ஒருகட்டத்தின் முன்நிபந்தனையாக "தன்னந்தனியாகும்" படி முறை (INDIVIDUA LISATION) அமைகிறது. இத்தன்னந்தனியாகும் படிமுறையின் விளிம்பில் ஜோசப்பின் கதைகளில் வரும் பாத்திரங்கள் உலவுவதை நாம் காணலாம். மற்றுமோர் விமர்சகரான கே.எஸ்.சிவகுமாரன் "எல்லாவற்றிலும் அரசியல் கலந்திருப்பது உண்மையே ஆயினும் வெறும் அரசியல் அடிப்படையில் கலையிலக்கியங்களை படித்துச்சுவைப்பதில் எனக்கு உடன்பாடு இல்லை நான் இலக்கியத்தின் சமூகப்பின்னனியில் அதன் உறுதிப் பொருளின் அடிப்படையில் நுகரவிரும்புகின்றேன்" என இலக்கியப்படைப்புக்கள் பற்றிய தமது கருத்தினை தெரிவிப்பதுடன் "தமிழ் இலக்கிய செய்திகள் தொடர்பான அறிவுக்களஞ்சியமாக தெளிவத்தை ஜோசப் விளங்கி வருகின்றார்" எனக்குறிப் பிடுகின்றார். ஜோசப்பின் சிறுகதைகள் ஒவ்வொன்றும் மலையக மக்களின் வாழ்வியல் யதார்த்தங்களை படம்பிடித்துக் காட்டுவதை பொறுக்கமுடியாத தோட்ட நிர்வாகிகள் மலையக பாட்டாளி வர்க்கத்திற்கு பாதகம் செய்த யாழ்ப்பாணத்தார், முதலாளிகள் போன்று இவரை நேரிலும் மறைமுகமாகவும் அச்சுறுத்தினர். "சோத்தாங்கை இருந்தால்தானே நீ எழுதுவாய்... வெட்டித்தொங்க விடுவோம்" என மொட்டைக்கடிதங்கள் எழுதினர். கல்லெறிந்து அவர் வசித்த வீட்டின் கண்ணாடிகளை உடைத்தனர். உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. இத்தகைய சம்பவங்களால் ஜோசப்பின் அண்ணன் குடும்பத்தவர்களின் ஆலோசனையை ஏற்று 1964ல் கொழும்பு சென்று "ஸ்டார் டொபி" நிறுவனத்தில் கணக்காய்வாளராய் பணிபுரிந்தார்.

கொழும்பு வாழ்க்கை இவரது இலக்கியப் பயணத்திற்கு பரந்த களம் அமைத்துக் கொடுத்தது சிறுகதைகள் நாவல்கள், குறுநாவல்கள், ஆய்வுகள், வானொலி தொலைக்காட்சி நாடகங்கள், திரைக்கதை உரையாடல் என பல துறைகளில் தமது பங்களிப்பை வழங்கியுள்ளார்.

இவரது சிறுகதைகள் அடங்கிய தொகுதி "நாமிருக்கும் நாடோ..." 1979ல் வெளிவந்தது. அவ்வாண்டிற்குரிய சாகித்திய மண்டலப்பரிசினைப் பெற்ற முதல் மலையகத் தமிழ் எழுத்தாளர் என்ற பெருமையினைப் பெற்றார்.

'காலங்கள் சாவதில்லை' என்ற இவரது நாவல் 1974ல் வீரகேசரி பிரசுரமாக வெளிவந்தது. அக்காலத்தில் கலைச்செல்விப் பத்திரிகை ஆசிரியரான சிவசரவணபவன் (சிற்பி) அவர்களால் இந் நாவல் சாகித்திய மண்டலப் பரிசுக்குத் தெரிவு செய்யப்பட்ட போதும் அப்போதைய இலங்கை முற்போக்கு இலக்கிய அணியினரின் கருத்துமுரண்பாடுகள் காரணமாகப் பரிசுபெறும் வாய்ப்பினை இழந்தது. இதை விட 'காதலினால் அல்ல' 1967லும் 'நாங்கள் பாவிகளாக இருக்கிறோம்'1996லும் வெளிவந்த இவரது நாவல்களாகும்.

1966ஆம் ஆண்டு கலைமகளில் வெளிவந்த "ஞாயிறு வந்தது" 1967ஆம் ஆண்டு "கதம்பம்" தீபாவளி மலரில் வெளிவந்த "பாலாயி", தினகரன் பத்திரிகையில் வெளிவந்த "மனம் வெளுக்க" என்னும் குறுநாவல் கள் மூன்றையும் தொகுத்து 1997ல் துரைவி பதிப்பக வெளியீடாக "பாலாயி" என்ற குறுநாவல்கள் அடங்கிய தொகுதியினை வெளியிட்டார். 1995ம் ஆண்டு "சுபமங்களா" சஞ்சிகை நடத்திய குருநாவல் போட்டியில் இவரது "குடைநிழல்" இரண்டாம் பரிசினைப் பெற்றது.

இம் மூன்று குறுநாவல்களிலும் சிறந்ததாகவும் நெஞ்சை அள்ளும் படைப்பாகவும் "பாலாயி" அமைந்துள்ளது. இக் குறுநாவல் குறள் வடிவம் தாங்கி விஸ்பரூபம் எடுத்து வாசிப்போரது நெஞ்சத்தை அள்ளுகிறது. ஆகர்சிக்கின்றது தெளிவத்தை ஜோசப் என்னும் அற்புத கலைஞனின் எழுத்தாற்றலையும் அவரது மானிடநேயத்தையும் பரந்து பட்ட சமூக நோக்கத்தையும் வரலாற்றுப் பார்வையையும் அல்லல் பட்டு ஆற்றாது அழுது கண்ணீர் வடிக்கும் அப்பாவிச் சீவன்கள் மீது கொண்டிருக்கும் பரிவினையும் பாசத்தினையும் தொழிலாளர்களை அத்தகைய நிலைக்களாக்கிய குரூரசக்திகளின் மீது கொண்டிருக்கும் வெஞ்சினத்தையும் நேரடியாகத் தாக்க முடியாதவிடத்து அவற்றை எழுத்து என்னும் சொல் ஈட்டியால் குத்திக் கிளறி தயவு தட்சனியமின்றி கண்டித்தும் நையாண்டி செய்தும் போலிகளைச் சுட்டெரித்து அசுர துணிச்சலுடனும் அசாத்திய திறமையுடனும் உண்மைகளைப் புலப்படுத்தும் பாங்கினையும் இக் குறுநாவலில் ஒருங்கே நாம் தரிசிக்க முடிகின்றது" என பேராசிரியர்.க.அருணாச்சலம் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

மலையக இலக்கியத்தில் தெளிவத்தை ஜோசப்பிற்கு இருந்த பற்றுதல் காரணமாக தனித்து படைப்பாளராக மட்டுமன்றி துரைவி பதிப்பகத்தின் வெளியீடுகளுக்கு தொகுப்பாசிரியராகப் பணியாற்றி 33கதைகளின் தொகுப்பாக மலையகச் சிறுகதைகள்

1997ல் வெளிவந்தது. மேலும் 55 சிறுகதைகளைத் தொகுத்து "உழைக்கப்பிறந்தவர்கள்" என்னும் நூலை வெளியிட்டார். பரிசு பெற்ற 15 சிறுகதைகளைத் தொகுத்து "பரிசு பெற்ற சிறுகதைகள்" என்ற தொகுதியை 1998ல் வெளியிட்டார். இவற்றை விட ஆய்வு நூல்களாக "இருபதாம் நூற்றாண்டு ஈழத்து இதழியலும் இலக்கியமும்", "மலையக நாவல் – வரலாறும் வளர்ச்சியும்", "மலையகச் சிறுகதை வரலாறு" என்னும் நூல்களை வெளியிட்டார். 2000ஆம் ஆண்டில் மலையகச் சிறுகதை வரலாற்று நூலுக்காக சாகித்திய மண்டலப் பரிசினையும், அவ்வாண்டிற்கான சம்பந்தன் விருதையும் பெற்றுக் கொண்டார்.

மலையக இலக்கியப் படைப்பாளர்களில் தம்மை மட்டுமே முன்னிலைப்படுத்தாது ஏனைய இலக்கியப் படைப்பாளிகளையும் அரவணைத்தும் அறிமுகப்படுத்தியும் வந்தார்.


வி.பி.கணேசனின் தயாரிப்பில் வெளிவந்த இலங்கைத் திரைப்படமான "புதிய காற்று" என்னும் படத்திற்கு 1974ல் திரைக்கதை உரையாடலை எழுதி இருந்தார். இத்திரைப்படம் எம்.ஜி.ஆரின் திரைப்பட பாணியில் அமைந்திருந்தபோதிலும் இலங்கையில் தயாரிக்கப்பட்ட தமிழ்ப் படங்களில் சிறந்த படங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

"சிறந்த பேச்சாளராக, விமர்சகராகவும் திகழும் தெளிவத்தை ஜோசப்பின் வாழ்வே ஒரு இலக்கிய வரலாறு தான். இலங்கையில் மலையக இலக்கியம் குறித்து ஒரு வெளிநாட்டவரோ அல்லது பல்கலைக் கழக மாணவனோ ஆராயப் புறப்படும்பொழுது அவர்களுக்கு உசாத்துணை ஆவணங்களாக இருப்பவை இவரது ஆய்வுகள் தான். இலங்கை இலக்கிய இதழ்கள் குறித்தும், சிங்கப்பூர் தமிழ் இலக்கிய வளர்ச்சி தொடர்பாகவும் விரிவாக எழுதி இருப்பவர் தெளிவத்தை ஜோசப்" என எழுத்தாளர் "முருகபூபதி" கூறுகின்றார்.

அண்மையில் தமது பவள விழாவினைக் கொண்டாடிய தெளிவத்தை ஜோசப் அவர்கள் மென்மேலும் தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்க்க வேண்டுமென எமது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

---

# தவிப்பு



மண்டைக்குள் ஏனோ
'கொறவணன்' புழுக்களின் குடைச்சல்
நிகழ்வுகளின்
கிறுக்கல்களும் கிண்டல்களும்...
பொதி சுமக்கிறது மனது.

பயிரைத் தின்னும் பாங்கில்
என்னைச் சுற்றிலும்
இயந்திர வேலிகள்
எனது கண்களுக்கும்
கடிவாளமிடப்பட்டன.
அடக்குமுறைகளின்
கடிநாய்க் கலைப்பு.
மோத நினைத்தும்
முடியாது போன நிலை.

தூண்டிலில் இருந்து தப்பி
வலையில் மாட்டிக் கொண்டன
உணர்வுக் குஞ்சுகள்.

வியாக்கியானம் செய்ய முடியாத
விடுகதையாக வேதனைகள்...
என்னைச் சுற்றிலும் இருள்
எல்லாம் தெரியும்
பிரக்ஞையில்
நான்!

எழப் பார்க்கிறேன்
மூச்சுத் திணறும்
முட்டுவருத்தக்காரன் போல்,
முள்முடி தரிக்கிறது வாழ்வு
உயிர்த்தெழலுக்கான வழியின்றி
இத்துப் போகிறேன்
இரக்கமற்றவர்கள் முன்
நாணத்தோடு நானும்.

– அ.பௌநந்தி



கடந்த நான்கு நாட்களாக ஊரில் எந்த ஒரு வீட்டிலும் அடுப்புப் புகையவில்லை.

அவன் வீட்டிலுந்தான்!

ஆனால் அவனுக்கு மாத்திரம் வயிறு புகைகிறது. அவன் குடும்பத்துக்கும்...!

அவன் படுத்துக்கிடந்த குடிசைக்குள் இருந்து எழுந்து வந்து, அதன் வாசல் தாழ்வாரத்துக்குக்கீழே குந்தி இருக்கின்றான். வெளிப்படலையை வெறித்து வெறித்துப் பார்த்த வண்ணம் காதுகளை அகலத்திறந்து வைத்துக் கொண்டு நீண்ட நேரம் அதில் கொக்காகக் கொடும் தவமியற்றுகின்றான்.

அங்கு வந்து குந்தும்போதே அவனுக்கு உள்ளூர நம்பிக்கை இருக்கவில்லை.

# வாழ்வதற்காகத்தான்

**தெணியான்**

அவனைத் தேவைப்படுகின்றவர்கள் முதல் நாளே வீடுவரை தேடிக் கொண்டுவந்து குரல்கொடுத்து விட்டுப் போவார்கள். அல்லது வழிதெரிவில் சந்திக்கும் போதும் சொல்லி வைப்பார்கள்.

"நல்லான் தோட்டத்திலெ வேலை கிடக்கு. வெள்ளாப்பிலெ வாவன்"

"விறகு கொத்தக்கிடக்கு... ஏழு மணிக்கு முன்னம் வாவன்"

"நல்லான் பத்துப்பனையிலெ ஓலை வெட்ட வேணும், எப்ப வரப்போகிறாய்! நாளைக்கு வா"

"நல்லதம்பி தென்னம்பிள்ளைக்குக் கிடங்கு வெட்டக்கிடக்கு"

"தம்பி அவசரமாகக் கக்கூசுக்குழி வெட்ட வேணும்"

"வேலி அடைக்கவேணும் வெய்யிலேறமுன்னம் முடிச்சுப் போடவேணும் நீ வந்தால் போதும். துணைக்கு நான் நிக்கிறன்"

இன்னவேலை என்றில்லை. என்ன வேலையாக இருந்தாலும் அதை அவன் மனம் வைத்துச் செய்வான். அதனால் அவனை வேலைக்கு அமர்த்துகிறவர்கள் தேடிக்கொண்டு வந்து விடுவார்கள். சிலசமயங்களில் பலர் வந்து நிற்பார்கள். முதலில் யாருடைய வேலையைச் செய்து கொடுப்பதெனக் குழம்பிப் போவான். எல்லாக் காலங்களிலும் இப்படி நெருக்கடி இருப்பதில்லை. மழைபெய்தால் வேலைகள் அதிகம் வந்து சேரும். அன்றாடம் வேலை செய்தால்தான் மனைவி, பிள்ளைகளின் கால்வயிறாவது நனையும். ஒருநாள் வேலை கிடைக்கவில்லை என்றால் அவர்கள் நாவும் நனையாது.

நேற்றைய தினம் அவனைத் தேடிக்கொண்டு யாரும் வரவில்லை. நேற்று முன்தினம் அதற்கு முதன்நாள்.... நான்கு நாட்கள் ஆகின்றன.

இன்றும் அவனுக்கு வேலை இல்லை
வீட்டில் அடுப்பு எரியப் போவதில்லை
வயிறுகள்தான் எரிந்து கொண்டிருக்கின்றன.

ஒன்றா, இரண்டா! அவன், மனைவி, ஆறுபிள்ளைகளின் வயிறுகள்.

ஐந்து பெண் பிறந்தால் அரசனும் ஆண்டியாவன் என்று சொல்லி இருக்கின்றார்கள். ஆறுபெண்களைப் பெற்று விட்ட அவன் என்னாவான்? ஒருவேளை அரசனாவானோ?

ஆறில் மூன்று வயதுக்கு வந்துவிட்ட குமர்கள்.

அவனுக்குத் திருமணம் நடந்தேறியது உலக அதிசயங்களில் ஒன்று.

அவன் வயது ஒத்தவர்கள் திருமணமாகி குழந்தைகள் பெற்ற பிறகும் ஊரில் அவனை ஒரு

மாப்பிள்ளையாக யாரும் கவனத்தில் கொள்ள வில்லை. உரிய பருவம் தப்பி முற்ற ஆரம்பிக்கும் வயதில் இரண்டு ஊர்தாண்டி அவனை மாப்பிள்ளை கேட்டுவந்தார்கள்.

பிறகென்ன! அவனுக்கு இராஜயோகம்தான்!

ஆனால் வந்தவர்கள் அவனுக்கு ஒரு இராஜ குமாரியைக் கொண்டு வரவில்லை. குசேல புத்திரியை மனைவியாகக் கொண்டு வந்து சேர்த்தார்கள்.

வாராமல் வந்த இராஜகுமாரிக்கு மாலைசூடி அவள் இராச்சியத்துக்கு அவன் இராஜாவாக வந்து சேர்ந்தான்.

குசேலசெல்வங்கள் வரிசையாக அவள் பெற்றுக் கொடுத்தாள். அதற்குமேல் இராச்சிய பாரம் தாங்காது என்று எண்ணி....

அந்தக் குசேலபுரியின் மன்னனான அவனுக்கு பொன்னும் பொருளும் அள்ளிக் கொடுக்க பாலிய பருவ நண்பன் கண்ணனாக யாருமில்லை.

பகலவன் துருதுருவென்று வானத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றான் நேரம் பத்துமணி கடந்திருக்கும். வெயில் எங்கும் சுள்ளென்று அடிக்கிறது.

அவன் இருந்த இடம் விட்டு எழுந்திருக்க இயல வில்லை சில மணி நேரமாகக்குந்திக் கொண்டிருக் கின்றான். மனைவியைப் பார்க்கின்றான். அவள் வீட்டுக்கு வெளியே போவதும் வருவதுமாக ஓடிக் கொண்டிருக்கின்றாள். யார் யாரிடம் கைநீட்டிக் கடன் கேட்டு அலைகின்றாளோ! பிள்ளைகள் வீட்டுக்கு வெளியே போய்பொதுக்கிணற்றில் குளித்துமுழுகிக் கொண்டு ஒவ்வொருவராகத் திரும்பிவந்து கொண்டி ருக்கின்றார்கள். கொண்டாட்டமொன்றுக்குப் போவ தற்குத் தயாராகப் புறப்பட்டுக்கொண்டிருப் பவர்கள் போலல்லவா தோன்றுகின்றார்கள்! தண்ணீரை அள்ளி உடலில் ஊற்றினால் உள்ள களைப்பு நீங்கி விடும். பசிக்களையும் பறந்துவிடும் என்று அறிந்து வைத்திருக்கிறார்கள். குளித்து சுத்தமாக இருக்க வேண்டும் என்பதில் தாய் எப்பொழுதும் அக்கறையாக இருப்பாள். மதியம் தானும் குளிக்க வேண்டுமென அவன் நினைத்துக் கொண்டான்.

சீனி இல்லாத சாயம் விட்ட தேநீரைக் காலையில் மனைவி தந்தாள். தொண்டைக்குழிக்குக் கீழே இறக்க முடியவில்லை. குமட்டிக் கொண்டு வந்தது. வேறு வழி இல்லாமல் உள்ளே இறக்கி விட்டான். இப்போது வயிறு காந்துகிறது. பற்றி எரிகிறது.

பிள்ளைகள் முகத்தை அவனால் நிமிர்ந்து பார்ப்பதற்கு முடியவில்லை. வயிற்றுக்கு இல்லாத பிள்ளைகள். உடுப்பதற்கு ஆன துணிமணிக்கு எங்கே போவது?

அடிவயிற்றில் கனலும் நெருப்பு எரிந்து புகைந்து கொண்டு நெஞ்சுவரை மேலெந்து குடலைப் புரட்டிக் கொண்டுவருகிறது. கண்கள் இருட்டுகின்றன. தலையில் மெல்லிய ஒரு கிறுக்கம் சரிந்து நிலத்தில் படுக்க வேண்டும் போலத் தோன்றுகின்றது.

பசிக்கும் சமயங்களில் எல்லாம் நிலத்தில் விழுந்து படுத்துக் கொண்டுவிட்டால் பசி தீர்ந்தா போகும்?

பிள்ளைகளை நினைத்து அவன் கண்கள் கலங்குகின்றன. மனம் வருந்திக் கொண்டு இப்படியே இருந்து காணப்போவது என்ன!

முதுகை வளைத்து கைகள் இரண்டையும் நிலத்தில் ஊன்றி மெல்ல எழுந்து கூரைமரத்தை ஒரு கையால்பிடித்தவாறு சில நிமிடங்கள் அசைவற்று அப்படிநின்று தன்னை நிதானமாக நிலைப்படுத்திய பிறகு, குடிசைக்குள்ளே திரும்பி வெட்டுக் கத்தியை கையில் எடுத்துக் கொண்டு குனிந்து முற்றத்துக்கு வருகின்றான்.

அடுக்களைக் கொட்டிலுக்குள் இருந்து வெளியே வந்து நிற்கும் மனைவி முகத்தை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. அவளைக் கண்டுகொண்டதாகக் காட்டிக்கொள்ளாது தனது சக்தியை எல்லாம் ஒன்று கூட்டி தலைகுனிந்த வண்ணம் மெல்ல நடந்து படலையைத் தாண்டி வெளியே வருகின்றான்.

இப்போது தெருவுக்கு வந்தாயிற்று. இனி, எங்கே போவது! சட்டென்று ஒரு முடிவுக்கு வருவதற்கு அவனால் முடியவில்லை. பிட்டுக்கு மண்சுமக்கச் சென்ற சிவனாரைப்போல "கூலிக்கு ஆள் வேணுமா?" எனத் தெருத்தெருவாக அவன் கூவிக் கொண்டு செல்ல முடியுமா? அப்படித்தான் கூவினாலும் அவனை அழைத்து வேலை கொடுக்க எந்தச் செம்மனச் செல்வி காத்திருக்கின்றாள்?

"ஊரைச் சுற்றி வந்தால் இரண்டு தென்னம் பிள்ளைகளில் ஏறித் தேங்காய் பறிக்கக் கிடைச்சால், நாலு தேங்காய். ஆனால், நாங்கள் தேங்காய் விற்கப் போனால் தவிச்ச முயல் அடிக்கப்பாக்குதுகள் குறைஞ்சது இருபது ரூபாவாப்பட எண்பது ரூபாக்காசு. பிள்ளைகளுக்கு ஒரு துண்டுபாணாவது வாயிலே வைக்கக்கிடைக்கும். கற்பனை பண்ணிக் கொண்டு கால்போன திக்கில் நடக்கின்றான்.

"பக்த அடியார்களே..! எல்லாம் வல்ல முருகப்பெருமான் திருவருளால் நாலாம் உபயகாரரின் மகேஸ்வரபூசை அதாவது அன்னதானம் இன்னும் சிறிது நேரத்தில் ஆரம்பமாக இருப்பதால் அனைத்து அடியார்களும் ஆலயத்துக்கு வருகை தந்து....

அவன் வீட்டுக்கு அண்மையில் அமைந்திருக்கும் ஆலயத்தில் இருந்து ஒலிபெருக்கி அறிவித்தல் காற்றலைகளில் மிதந்துவருகின்றது.

அவன் வாய்விட்டு அலட்சியமாக ஒருதடவை சிரித்துக் கொண்டு முழந்தாள்களைப் பெரிதாக



மடிக்காது கால்களைத் தூக்கித் தூக்கிப் போடும் இயல்பான தன் நடையை விரைவு படுத்து கின்றான்.

கிராமத்தில் அவன் வாழும் வரண்ட மேட்டு நிலப் பகுதியை விட்டு நீங்கி தென்னை, மா, பலா, செறிந்து வளர்ந்து பயனும் குளிர்நிழலும் கொடுக்கும் செழிப்பான பகுதிக்குள் நுழைந்து போய்க் கொண்டிருக்கின்றான்.

குடிசனங்கள் நெருக்க மாக வாழும் தெருக்களில் எல்லாம் சுற்றிச் சுற்றி வருகின்றான். கால்கள் உளை வெடுக்கின்றன வீதி ஓரத்து மரநிழலில் சற்று நேரம் தரித்திருந்து இருந்து களைப்பாறுகின்றான்.

அவனுக்குச் சுகமாக இருக்கிறது. உடலில் வடிந்து கொண்டிருக்கும் வியர்வையை இருகரங்களினாலும் துடைத்து விட்டுக் கொண்டு ஆழமாக மூச்சை இழுத்து விடுகின்றான்.

நிழலில் அமர்ந்து அந்தச் சுகத்தை வாழ்வில் அனுபவிப்பதற்கும் கொடுத்து வைத்திருக்கவேண்டும். என நெடுமூச்செறிந்த வண்ணம் நிமிர்ந்து மேலே பார்க்கின்றான். பொழுது உச்சியை நெருங்கிக் கொண்டிருக்கின்றது. 'இதிலே குந்திக்கொண்டிருந்தால் ஒண்டும் நடக்காது என நினைத்து கைகளை நிலத்தில் ஊன்றி மெல்ல எழுந்து கொடுங்கை நிமிர்த்திக் கொண்டு மெல்ல அடி எடுத்து வைக்கின்றான்.

இனி, என்ன செய்வது! அவன் இன்னும் புகுந்து வராத தெருக்கள் சில உண்டு. அந்தப் பாதையில் சென்று வீட்டுக்குப் போகலாம். மனதில் தீர்மானித்துக் கொண்டு தளர்ந்து ஆடிஆடி நடக்கின்றான்.

வெய்யோனின் பயங்கர வெப்பம் அவன் உடலைச் சுடுகிறது. அவனுக்குக்களை பசிக்களை; நடைக்களை; வெயிற்சுட்டகளை; நாவரண்டு கொண்டு வருகிறது. எதனையாவது உடனே பருகவேண்டும் போலத் தோன்றுகிறது என்ன பருகலாம்! தண்ணீர் தவிர. வெறும் வயிற்றில் தண்ணீர்பருகினால் வயிற்றைக் குமட்டிக் கொண்டு வரும்.

கையில் தூக்கி வைத்துக் கொண்டிருக்கும் கத்தி இப்போது பெரும் பாரமாகக் கனக்கிறது.

பாரமாக இருக்கின்றவைகளை எல்லாம் தூக்கி தூர வீசிவிடமுடியுமா?

கத்தியைத்தூக்கிச் சுமந்த வண்ணம் தாகத்தை அடக்கியவாறு முகம் வாடி வியர்க்க வியர்க்க மெல்ல நடக்கின்றான்.

வீடு போய் தாகத்துக்கு எதனையாவது குடிக்க வேணும் அங்கேயும் அப்படி என்னதான் கிடைக்கப் போகிறது? வெறும் தண்ணீரைத் தவிர!

இனி என்ன செய்வது! வீட்டுக்குப் போக வேண்டியதுதான்.

அவன் ஏமாற்றத்துடன் திரும்பி வீடு நோக்கி நடக்கின்றான். வீட்டில் இருந்து புறப்பட்டு வந்த வழியைத் தவிர்த்து வேறு பாதையில் சென்று கொண்டிருக்கின்றான்.

எதிரில் பரமசிவம் ஆசிரியரின் அரச மாளிகை போன்ற வீடு. அந்த வீட்டைச் சுற்றி தென்னை, பலா, மா, தோடை, தேசி, கொய்யா.... என எல்லாம் காசு காய்க்கும் மரங்களால் சூழ்ந்த சோலை. இவற்றோடு தோட்டந் துரவு. பென்சென், வெளிநாடுகளில் இருந்து இலட்சம் இலட்சமாகப் பிள்ளைகள் அனுப்பும் பணம், இத்தனையும் இருந்தும் வாத்தியாரை அவர் சொந்தப் பெயர் சுட்டிச்சொன்னால் யாருக்கும் தெரியவராது 'கஞ்சன்' என்றோ, 'கஞ்சன் பரமர்' என்றோ அல்லது 'கஞ்சன் வாத்தி' என்றோ சொன்னால்தான் அவரை இனங்கண்டு கொள்வார்கள்.

அவரிடம் வசமாக மாட்டிக் கொண்டுவிட்டால் போதும். அற்பக்கூலி கொடுத்து ஆயிரம் வேலைகள் செய்விக்காது ஆளைவிடமாட்டார்.

வெறுங்கையுடன் வீடுபோய்ச் சேர்ந்தாலும் இப்போது அவர் கண்களில் மரத்திரம் பட்டுவிடக்கூடாது.

வாத்தியார் வீடு தாண்டிப்போய்விட வேணும் என்னும் எண்ணத்துடன் சக்தியைக் கூட்டி வேகமாக நடக்க முயற்சிக்கின்றான்.

வாத்தியார் வீட்டுப் பெரிய 'கேற்'றைக் கடக்கும் சமயம் அந்தக் 'கேற்' திறந்து கொள்ளுகிறது.

"நல்லான்... என்னடா அப்பா... உன்னைத்தானே தேடிக் கொண்டிருக்கிறன்"

திரும்பிப்பார்க்கின்றான். வாத்தியார் நெற்றியில் தடித்த திருநீறு, சந்தனப்பொட்டு, உடலில் ஆங்காங்கே திரிபுண்டரப்பூச்சுடன் சைவப்பழமாக நின்று கொண்டிருக்கின்றார்.

எப்பொழுதும் 'அடா' உடன் முன்னே ஒரு 'என்ன' பின்னே ஒரு 'அப்பா' போட்டு வெகு தந்திரமாகவே அவனை அழைப்பது அவர் வழக்கம். 'உன்னைத் தேடிக் கொண்டிருக்கிறன்' என சந்திக்கும் சமயங்களில் எல்லாம் அவர் பசப்பாமல் இருக்கமாட்டார்.

அவன் திடுக்கிட்டுப்போனான். இந்தக் கஞ்சனிடம் அகப்பட்டுக் கொண்டேனே என்ற பதகளிப்புடன் "ஏன் ஐயா?" என்கிறான் மெல்லத்தரிவித்து நின்று.

"என்னடா அப்பா... அவசரப்படுகிறாய் போல கிடக்கு! எனக்கும் அவசரந்தான் ஒரு சின்னவேலை"

'என்னவேலை... சொல்லுங்கோ!"

"என்னடா அப்பா... கிணத்துப்படியிலை பிள்ளையைக் கிடத்துப் போட்டு வந்தவன்போல அந்தரப்படுகிறாய்! கிணத்தடித் தென்னங்கண்டிலே தேங்காய் பழுத்துக்கிடக்கு. பிள்ளை குட்டியள் பிழங்கிற இடம் தலையிலை கிலையிலை விழுந்து போனால்..."

"இரண்டு தேங்காய் கூலி குடுக்க மனமல்லாமல் கொக்கை கட்டி நிலத்தில் நிண்டு புடுங்கிற கஞ்சன்ரை கொக்கைத் தடி இப்ப நீளம் போதாமல் கிடக்குது போலெ. அவன் மனதில் நினைத்துக் கொள்ளுகின்றான்.

கஞ்சன் வாத்தியார் திரும்பி உள்ளே போகின்றார் முகத்தைச் சுழித்துக் கொண்டு அவன் பின்னால் தொடருகின்றான்.

அவர் காட்டிய தென்னையில் தவழ்ந்து தவழ்ந்து ஏறி தேங்காய்களை ஒவ்வொன்றாகப் பறித்து கீழே போடுகின்றான்.

"நல்லான் நல்ல முத்தல்களாகப் பாத்துப்புடுங்கு' வாத்தியார் கீழே இருந்து குரல் கொடுக்கிறார்.

"இளசு புட்டுக்கு நல்லது ஐயா!"

"என்ன பேய்க்கதை உது! இளசு கறிக்கு உதவாது எண்ட படியால்தான் உப்பிடி ஒரு சமாதானம் சொல்லுறவை" வாத்தியார் வாயில் இருந்து எரிச்சலோடு வார்த்தைகள் வெளிவருகின்றன.

அவன் மௌனமாகி விடுகின்றான்.

காரியம் சாதிக்க, சமாதானம் உருவாக மௌனம் ஏற்ற தொரு உடல்மொழி மூள் றோசா போலச்சற்றுச் சிவந்து குலை குலையாகத் தொங்கும் இளநீர்கள் அவனைப் பார்த்துக் கண்சிமிட்டுகின்றன. தாகம் பல மடங்காகி அவனைப் போட்டு வாட்டுகிறது. ஒரு இளநீரைப் பிடுங்கி கொத்திக் கெடித்தாலென்ன என ஒரு கணம் நினைக்கின்றான். கூலியாகக்கிடைக்கும் இரண்டு தேங்காய்களில் ஒன்று குறையும். நிமிர்ந்து மேலே கழுகுக்கண்களால் கஞ்சன் வாத்தியார் கவனித்துக் கொண்டு நிற்கிறார்.

அந்த எண்ணத்தை அவன் கைவிட்டுவிட்டு முற்றியதேங்காய்களைப் பார்த்துப்பார்த்து பிடுங்கிக் கீழே போடுகின்றான். பின்னர் மெல்ல சறுக்கிச் சறுக்கி இறங்கி வந்து நிலத்தில் கால்களை ஊன்றுகின்றான் அந்த நேரம்பார்த்து வாத்தியார் வீட்டுப்பக்கம் திரும்பி "என்ன சொல்லுறீர்... சரி..." என மனைவி சொல்லும் செய்திக்குத் தான் உடன் மறுமொழி சொல்வது போலப் பாசாங்கு பண்ணுகிறார். பின்னர் அவனைப் பார்த்து 'ஆச்சி இண்டைக்குக் கறிக்குத் தேங்காய் இல்லை எண்டு சொல்லுகிறா. கையோடை இரண்டு தேங்காய் உரிச்சுத்தந்து விட்டுப்போ' என்கிறார்.

அவனுக்குத் தெரியும், இன்று தான் மாட்டிக் கொண்டு விட்டது. மெல்ல நிலத்தில் குந்தி தேங்காய் ஒன்றை எடுத்து கத்தியால் வெட்டி உரிக்க ஆரம்பிக்கின்றான். கஞ்சன் வாத்தியார். அங்குமிங்கு மாகப்பரவிக்கிடக்கும் தேங்காய்களைத் தூக்கிவந்து அவன் முன் போட்டுக் கொண்டு அவன் கவனத்தைத் திசை திரும்பும் நோக்கத்துடன் நெருக்கமாகக் கதைகொடுக்கின்றார்.

'நல்லான் உங்கடை கோயிலிலே திருவிழா நடக்குது போலை..."

"இண்டைக்கு அஞ்சாந்திருவிழா"

"அதுதான் சரி. எங்கடை கோயிலுக்குள்ள வல்லடி வளக்காக வரப்போகிறமெண்டு நில்லாமல் நீங்கள் உங்களுக்கெண்டு கோயில்களைக் கட்டிக் கும்பிடுகிறது சரி. உங்கடை ஆக்களுக்கு இப்ப வெளி நாட்டுக்காசுவருகுது. அந்தக் காசை அவமாக்காமல் நல்லபெரியபெரிய கோயில்களைக்கட்டி கும்பா விசேகம் செய்கிறதெல்லாம் மிச்சம் நல்ல காரியம்"

நல்லதம்பி அலட்டிக்கொள்ளாமல் மௌன மாகத் தேங்காய்களை உரித்துப்போட்டுக் கொண்டிருக் கின்றான்.

"என்னடாப்பா... நான் உங்களுக்கு நல்லதைச் சொல்லிக் கொண்டிருக்கிறன் நீ பேசாமல் இருக்கிறாய்!"

"இதுக்கு நான் என்ன சொல்லுகிறது!" நிமிர்ந்து அவர் முகத்தைப் பார்த்துச் சொல்லி விட்டு பழையபடி குனிந்திருந்து தேங்காய்களை உரிக்கின்றான்.

இப்பொழுதுதான் அவன் முகத்தை அவதானித் தவர் போல நடித்து "என்னடாப்பா... உனக்கு முகம் நல்ல வாடிப்போச்சு உங்கடை கோயிலிலே திருவிழாத் துடங்கின நாள் தொடக்கம் அன்னதானம் குடுக்கிறான் கள் எண்டு கேள்வி . அது நல்ல காரியந்தானே! தின்னாமல் குடியாமல் கிடக்கிற சனம் பத்து நாளும் வயிறு முட்டத்தின்னலாம். அதைவிட்டிட்டு வீண் ஆடம்

பரங்கள் என்னத்துக்கு! உன்ரை பாடும் அப்ப பிழையில்லை"

"நாங்கள் போறதில்லை"

"ஏன் கோயில் காரன்களோடை ஏதும் கோபதாபமே!"

"இல்லை"

"அப்ப...?"

"நாங்கள் வேதம்"

"என்ன..?"

"நாங்கள் வேதம் சுவாமி சைவக்கோயிலுக்குப் போகக் கூடாதெண்டவர்.

"நல்லான்! என்ன கதைகதைக்கிறாய்? என்ன வந்தாலும் எங்கடை சமயத்தை விற்று பிழைக்கக் கூடாது. என்ன காரியம் செய்தனி நீ! எப்பவும் உன்ரை வாயிலை முருகா முருகா.. ஆற்றங்கரையானே... எண்டுதானே சொல்லிக் கொண்டிருக்கிற நீ ! மரத்திலே ஏறும் போதும் முருகா எண்டு சொல்லிப் போட்டுதான் முதல் காலெடுத்து வைப்பாய். சீ... இப்பிடிப் பிழையான வழியிலே போய்விட்டியே! நீ வேதத்துக்குப் போய் எவ்வளவு காலம்?" வாத்தியார் சற்றுச் சூடாக உரத்துப்பேசுகின்றார். சிறிது நேரம் தாமதித்து பின்னர் கேட்கின்றார்.

"எப்ப வேதத்திக்கு மாறினநீ?"

"ஒரு வரியமாகுது" நல்லதம்பி பொறுமை யாகப் பதில் கூறுகின்றான்.

"நீ ஒரு விளங்காத ஆள். உன்ரை பெண்டில்... பொன்னன்ரை மேள். அவள் படிச்ச பெட்டை... மதம்மாறச்சம்மதிச்சிருக்க மாட்டாளே!"

"அவவும் பிள்ளையளுந்தான் முதல் வேதத்துக்கு மாறினவை"

"ஓ..கோ..! என்ன தந்து ஏமாத்திறான்கள்?"

"இரண்டுகிழமைக் கொடுக்கால் அரிசி... மா... சீனி..."

"எவ்வளவு நாளைக்குப்போதும்?"

"ஒரு நாலைஞ்சு நாள்..."

"நாலைஞ்சு நாள் தின்னத் தீன் தாறான்கள் எண்டதுக்காக மதம் மாறிவிட்டியள்... என்ன! இப்ப நீ உண்மைக்கிறிஸ்தவனாகி விட்டாய்... என்ன! எங்கே ஒரு தோத்திரம் சொல்லு பாப்பம்!"

அவர் முகத்தைப் பார்த்தவண்ணம் அவன் வாய் திறக்காமல் இருக்கின்றான்.

"பாடன்ரா அப்பா...! சும்மா வாயை மூடிக்கொண்டிருக்கிறாய்!"

அவன் தொண்டையை மெல்லக் கனைத்துக் கொண்டு தலைகுனிந்து நிலத்தை நோக்கிய வண்ணம் அடித் தொண்டையினால் பாடுகின்றான்.

"தேவனைத் துதியுங்கள் எப்பொழுதும்
தேவனைத் துதியுங்கள்... ஆ...ஆ"

அவன் தொடர்ந்து பாடுவதற்கு அறியாது ஆ...ஆ... என்று இழுத்துக் கொண்டிருக்கின்றான்.

"என்ன நல்லான் மேலே பாடனடா அப்பா!"

"மறந்து போச்சு ஐயா"

"நான்பாடுகிறேன் கேள்!...

"அவர் வல்லமை விளங்கும் ஆகாயவிரிவை
பார்த்துத் துதித்திடுங்கள் – எப்பொழுதும்
தேவனைத் துதியுங்கள்...!

அவர் தொடர்ந்து பாடி முடிக்கின்றார். அவன் உள்ளத்தில் எழுந்த அதிசயத்தை அடக்கமுடியாமல் விழிகளை அகலத்திறந்தவண்ணம், "ஐயாவுக்கு கிறித்து தோத்திரம் எப்பிடித்தெரியும்?" என வினவுகின்றான்.

"எல்லாச் சமயங்களைப் பற்றியும் நான் படித்து வைச்சிருக்கிறேன்" பெருமையாகச் சொல்லிக் கொண்டு "சரி... வேறெ என்ன உதவி செய்கிறான்கள்?" சொல்லு

'பிள்ளையள் படிக்க உதவி செய்யினம்'

'நல்லான்.. என்ன சொன்னாலும் வயிற்றுத் தீனுக்காக மதம் மாறக்கூடாது. அதுசரி... அன்ன தானத்துக்கு நீங்கள் ஏன் போகிறதில்லை?"

"அஞ்ஞானிகளின்ரை கோயிலுக்குப் போகக் கூடா தெண்டு எங்கடை வேதச்சாமியார் கட்டாயமாகச் சொன்னவர்"

"எடே நல்லான்... என்னடா சொன்னநீ... என்னடா சொன்ன நீ... நாங்கள் எல்லாம் அஞ்ஞானியள் நீ வேதத்துக்கமாறி இப்ப மெய்ஞ்ஞானி ஆகிவிட்டாய். அப்படித்தானே! கதைக்கிறது ஆளை அறிஞ்சு கதைக்க வேணும். போடா போ... நீயும் உன்ரை வேதமும்..."

கதையோடு கதையாகக் கஞ்சன் வாத்தியார் வீட்டுத் தேங்காய்கள் இருபதும் உரித்து குவிந்துவிட்டன. நல்லதம்பி தனக்குரிய கூலி இரண்டு தேங்காய்களையும் எடுத்துப் பிணைத்துக் கொண்டு அவைகள் ஒரு கையிலும் மறுகையில் கத்தியமாக "வாறன்" எனச் சுருக்கமாகச் சொல்லி விட்டு நெஞ்சில் சுமையுடன் வீடு நோக்கி நடக்கின்றான்.

வீட்டுக் குடிசையின் தாழ்வாரத்தில் தேங்காய்களைத் தொப்பென்றுபோடுகின்றான். கத்தியையும் அங்கு வைத்தபின்னர் வீட்டை நோட்டமிடுகின்றான். யாரும் அங்கு இருப்பதாகத் தெரியவில்லை.

"பக்த அடியார்களே! அன்னதான நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அடியார்கள் அனைவரும்..." ஒலிபெருக்கியில் அறிவித்தல் வந்து கொண்டிருக்கின்றது.

"இஞ்சார்... எங்கே இருக்கிறாய்..." அவன் குரல்கொடுக்கின்றான்.

"நான் இஞ்சை இருக்கிறன்" அடுக்களைக் குள்ளே சேர்ந்து படுத்துக்கிடக்கும் அவளின் குரல்

கீனமான எழுகிறது.

அவன் அடுக்களைக்குள் நுழைந்து அவள் அருகில் அமர்ந்த வண்ணம் அவசரமாகக் கேட்கின்றான்.

"இஞ்சார்... நாங்கள் செய்தது சரியே!"

"என்னத்தைக் கேட்கிறியள்!"

"நான் வேண்டாம் வேண்டாமெண்டு சொல்ல நீதான் அவசரமாகப் பிள்ளையோடை வேதத்துக்கு மாறினநீ!"

"அதுக்கு இப்பென்ன வந்தது?"

"வாத்தியார் சொல்லுகிறார், வயிற்றுப்பாட்டுக் காக எங்கடை சமயத்தைவிட்டுப்போட்டு வேதத்துக்குப் போனது பிழையாம்"

"எந்த வாத்தியார்"

"கஞ்சன் வாத்தியார்"

"அவரோ... ஹா...ஹா..."

"என்னப்பா சும்மா சிரிக்கிறாய்!"

"வயித்துப்பாட்டுக்காக எங்களுக்கு முந்தி வேதத்துக்கு மாறினவர் அவர்தான்"

"உதென்னகதை! அவர் நல்ல சைவம்!

"இப்ப எல்லோ..! அந்தக் காலத்திலெ நல்லூர் ஆசிரியகலாசாலையிலை ஆசிரிய பயிற்சி பெறுகிறதுக்காக வேதத்துக்குமாறினவர். பயிற்சி முடிஞ்சு ஆசிரியராகப் பதவியும் பெற்று தன்ரை வயிறுவளர்த்தவர். பிறகுதான் திரும்பவும் திருநீறு பூசிக் கொண்டவர். இப்பவும் அந்தப் பென்ஸன் எடுக்கிறார். அவற்ரை வேதப்பேர் என்ன தெரியுமே!"

"எனக் கென்னடியாத்தை தெரியும்"

"செபஸ்யாம் பிள்ளை"

"செபஸ்யாம்பிள்ளையோ... செபஸ்ரியானோ!

"குறைஞ்ச சாதிக்காரன் வேதத்துக்கு மாறினால் தான் செபஸ்தியான்.. வேதக்காரன் எண்டாலும் பெரிய சாதிக்காரன் எண்டு பிரிச்சுக் காட்டுகிறதுக்காகத்தான் அந்தப் "பிள்ளை"யும் சேர்க்கிறது.

"எல்லாம் சரி நாங்கள் வேதத்துக்குமாறினது சரியே...! எனக்கு இப்ப குழப்பமாகக் கிடக்கு"

"உங்கை பெரியபெரிய ஆக்கள் எண்டு இருக்கிறவை கனபேர்பட்டம் பதவிக்காக வேதத்துக்கு மாறினவைதான். அவை செய்தால் சரி நாங்கள் செய்தால் பிழையே!"

"வேத்தத்துக்கு மாறித் தான் இப்ப நீ பட்டினி... நானும் பட்டினி. இல்லையெண்டால் உந்த அன்ன தானத்திலை நாலு நாளும் சாப்பிட்டிருக்கலாம். பிள்ளையள் எங்கே போய்விட்டதுகள்"

"..................."

"என்ன பேசாமல் இருக்கிறாய்!"

"அன்னதானத்துக்கு...."

"என்ன....? என்ன காரியம் பாத்தனீ? சுவாமி அறிஞ்சால்...." அவனுக்குச் சினம் பொங்கிக் கொண்டு வருகிறது.

"சும்மா கோபிக்காதையுங்கோ... எங்கடை சமயம் சரி இல்லை எண்டா நாங்கள் வேதத்துக்கு மாறினம்! வயிற்றுக்கு இல்லை எண்டதாலே... வறுமை யாலைதானே! சுவாமியார் என்ன சொல்லுகிறது? பசிக்கிற வயிற்றுக்குச் சோறு வேணும். கடவுள் ஒருவர்தான் மதங்களும் பெயர்களுந்தான் வேறு வேறு இல்லாத எங்களுக்கு மதம் ஒரு பிரச்சினை அல்ல... எங்களுக்கு முதல் எங்களுடைய வயிறு தான் பிரச்சினை. வயிறு நிறைஞ்சவன் என்னென்ன தத்துவமெல்லாமோ பேசுவான். அவன் பட்டினி கிடந்து பசியில் துடித்தாத்தான் எங்கடை நிலைமை விளங்கும்."

அவன் தலைகுனிந்திருந்த வண்ணம் சற்று நேரம் ஆழமாகச் சிந்திக்கின்றான். பின்னர் ஒரு முடிவுக்கு வந்தவனாக அவளைப் பாத்துக் கேட்கின்றான்.

நீ யேன் அன்னதானத்துக்குப் போகயில்லை!

"நீங்கள் பட்டினி கிடக்க நான் போய் எப்படிப் சாப்பிடுகிறது!"

"சரி எழும்பு போவம்!"

"எங்கே?"

"எங்கடை பசியைப்போக்க"


## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி - 60/= ஆண்டுச்சந்தா - 1000/= வெளிநாடு - $ 35U.S

மணியோடரை **அல்வாய் தபால் நிலையத்தில்** மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி

**K .Bharaneetharan, Kalaiaham , Alvai North west, Alvai.**

வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்

K.Bharaneetharan

Commercial Bank - Nelliady Branch

A/C No.- 8108021808 CCEYLKLY

முல்லைவீரக்குட்டி

# உன் நாமம் அர்ச்சிக்கப்படுவதாகும்...!

நீண்ட நெடு நாட்களின் பின்
நினைத்துக் கொண்டேன்....!
நீயிருக்கும் இடம் எனக்குத்
தெரியாதென்ற....,
காரணத்தால் நினைப்பொன்றே
நெஞ்சில் ஊரும்....!

எங்கோ ஓர் சந்துதனில்
உயிரைக் காத்துக்
கரந்திருப்பாய் கல்லினுட்
தேரையாக....!

என்றுயான் எண்ணியதாற்
தேடவில்லை....!
என்றாலும் உன் நினைவை
மீட்டிக் கொள்வேன்...!

முந்தாநாள் யுத்த முனைக்
குருதிச் சேற்றில்....,
குண்டு பட்டுக் காலொன்றை
இழந்தும் விட்ட...
சந்திரன்தான் மிக நொந்து
வந்து சேர்ந்தான்....!

சகல நிலைபரங்களையும்
தணலாய்ச் சொன்னான்....!

சமாதானக் கொடி ஏந்திச்
சகலரோடும் சரணடைய
வரும் போது சுடப்பட்டீராம்...!

பூமாதின் மீட்சிக்காய்
புறப்பட்டீர்கள்....,
புயல் அடிக்கும் ஏரி
நெருப்புக் கவிகள் தந்தீர்...!

தத்துவங்கள் கற்றவர் நீர்....,
சமாதானங்கள்....
சத்தியங்கள் தோற்குமிடம்
செத்துப் போகும்....!

என்பதனை ஏனுணரத்
தவறிப் போனீர்....?
ஏளனமாய் சுடப்பட்டு
உயிரை விட்டீர்....!
களமுனையிற் சாய்ந்திருந்தால்....
கவலை கொள்ளோம்....,
கபட நாடகத்தாலே
கரிக்கப் பட்டீர்....!

என்னுடலும் தகிக்கிறது....,
இனிய நண்பா....!
இன்றுனது பலமடல்கள்
உயிர்த் தெழுந்து....
எத்தனையோ நினைவுகளை
எடுத்துச் சொல்லி....
என்னுணர்வைச் சீண்டிற்று....!
நிஷமாய்ச் சொன்னேன்....!

கனவுகளாய் போவதற்கு
இலட்சியங்கள்....,
கற்பனையாற் பின்னவிட்ட
கதைகளல்ல....!

நிட்சயமாய் ஈடேறும்....,
காலம் மாறும்...!
அப்போது உன் நாமம்
அர்ச்சனைக்காய்....
எடுத்தோதப்படும் .... உண்மை...!
அதனால் நீயும் ....
இன்றமைதி பெற்றிடுக....!

நாளை அந்த ..... வீரம்புதைந்த....
மண்ணிடை இருந்தொரு
அக்கினிப் பூவாய்...
அவதரிப்பாயே....!



# உரையாடலில் மாற்றப்பட வேண்டியவை

அருள் தந்தை இராசேந்திரம் ஸ்ரலின்

உரையாடலின்போது அடிக்கடி நிகழும் தவறுகள் இங்கு சுட்டிக்காட்டப்படுவது இதனைத் தவிர்ப்பதற்காகவே. இவைபற்றிப் பெரும்பாலானோர் விழிப்புணர்வு கொண்டிருப்பதில்லை. அதாவது அவர்களை அறியாமலேயே இத்தவறுகளை இழைக்கின்றனர். சொந்த உரையாடல், பிறர் ஈடுபடும் உரையாடல் என்பனவற்றை அவதானித்ததிலிருந்து இக்கட்டுரை உருவாகுகின்றது.

## 1. தொடர்பாடல் முறைமை அறியாமை

### 1.1. உரையாடல் முறைமையை விளங்காது பேசல:

'சரியான வெக்கையாக இருக்கு.' 'சந்தைக்குப் போறீர்போல'... என்பன போன்ற உரையாடல்கள் அவர்கள் நம்முடன் தொடர்பாடலை ஆரம்பிக்க விரும்புகின்றார்கள் என்பதன் வெளிப்பாடேயாகும். இதனைச் சிலர் புரிந்து கொள்வதில்லை. இதனால் 'என்ன தெரியாத மாதிரிக் கேட்கிறார்' என்று தவறாகப் புரிந்து பேசுவதுண்டு.

### 1.2. நோக்கம் தெரியாது பேசுதல்:

சிலருக்குத் தம் பிரச்சினையை இன்னொருவருக்குச் சொல்லும் தேவை மாத்திரமே உண்டு என்பதைப் பலர் கருத்தில் எடுப்பதில்லை. இதனால் பிறர் தம் உடல்நலமின்மை அல்லது பிரச்சினையைச் சொல்ல ஆரம்பித்த உடனேயே 'நீங்கள் இப்பிடிச் செய்தால் நல்லது' என்ற பாணியில் பேச ஆரம்பிக்கின்றனர். தன் மூட்டு வலிபற்றி ஒருவர் பேச ஆரம்பித்தால் உடனே எந்த உடற்குணமாக்குநரிடம் அல்லது உடற்குணமாக்கலகத்துக்குப் போவது நல்லது என்று பதில்கூற ஆரம்பித்துவிடுகின்றனர். இவை தொடர்பாக ஆலோசனை கேட்க வரும்போது அத்தகைய தகவல் கொடுப்பதே பொருத்தமானது. இவ்வாறு தாம் நடந்துகொள்ளும்போது தன் பிரச்சினை கூறவந்தவர் அதற்குச் செவிசாய்க்கின்றாரா, சும்மா தலையாட்டுகின்றாரா என்று அவதானித்துச் செயற்படுவது சிறந்தது.

### 1.3. பொய்களுக்கிடையே வேறுபாடு அறியாமை:

பொய்களுக்கிடையே உள்ள வேறுபாடை அறிந்திருப்பது அவசியமான உரையாடல் திறனாகும். பொய்யை இரண்டாகப் பிரிக்கின்றனர். ஒன்று வெள்ளைப் பொய் மற்றது கறுப்புப் பொய். வெள்ளைப் பொய்யை ஆங்கிலத்தில் white lie என்பார்கள். இது எவரையும் பெரிதாகப் பாதிக்காதது. பிறரைப் பாதிக்கும் பொய்யை malicious lie என்பர். இத்தகைய பொய் பாரதூரமான தீய விளைவுகளை உருவாக்க வல்லது. இது நிச்சயம் தவிர்க்கப்படவேண்டியது

சிலர் தம் 'முகத்தைக் காத்துக்கொள்ள,' அல்லது உண்மை சொன்னால் இன்னொருவர் பாதிக்கப்படுவார், அல்லது இருவரிடையேயும் பிரச்சினை எழலாம் என்பதால் வெள்ளைப் பொய் சொல்வதுண்டு. பொறாமை கொண்டோர், சந்தேகம் கொண்டோர், எடுத்ததிற்கொல்லாம் சண்டை பிடிப்போர் போன்றோருக்குப் பிறர் இத்தகைய பொய் சொல்வதுண்டு. பொய் சொல்ல வேணும் என்பது இங்கு நோக்கமாக இருப்பதில்லை. வீண் பிரச்சினையைத் தவிர்ப்பதே

நோக்கமாகின்றது. ஆனால் வெள்ளைப் பொய்யைக் கேட்பவர், "எனக்கென்ன பொய்யா சொல்லுறாய்." " நீ பொய் சொல்லுற ஆள். உன்னை நம்பேலாது." என்ற தோறணையில் தாக்குதல் தொடுக்கின்றனர்.

## 2. பேச அனுமதிக்காமை

### 2.1. குறுக்கிட்டுக் குழப்பல்:

சமூக உரையாடலில் இடம்பெறும் தவறுகளில் அடிக்கடி நிகழ்வது இது. ஒருவர் தான் கூறத் தொடங்கியதை முடிப்பதற்கு முன்னதாக மற்றவர் தான் கூறவிரும்புவதை ஆரம்பிப்பதுவே இதுவாகும். இது முதலாம் நபர் கூறியதோடு தொடர்பானதாக அமையலாம் அல்லது முற்றிலும் வித்தியாசமான ஒன்றாகவும் அமையலாம். இதனால் பிறரின் கதையை முழுமையாகக் கேட்டு ஆழமாகப் புரிந்து நடந்துகொள்ளும் வாய்ப்பு அற்றுப்போகின்றது. குறுக்கிட்டுக் குழப்புவதை எவரும் விரும்புவதில்லை. தம் கதையைக் கூறி முடிப்பதையே விரும்புகின்றனர் என்பதை உணர்ந்து செயற்படுவது நல்லது.

சில சந்தர்ப்பங்களில் அன்பான ஒருவரைக் காணும்போது அவருக்குத் தம் அனுபவங்களைச் சொல்லும் உந்தல் ஒவ்வொருவருக்கும் உண்டு. இதனை பிள்ளைகள் பெற்றோர் உறவில் காணமுடியும். பெற்றோரைக் கண்ட உடனே ஒவ்வொருவரும் தத்தம் கதையைக் கூறவே ஆவல் கொண்டிருப்பர். அக்கட்டத்தில் அவர்கள் கதைப்பதற்குச் சற்று அனுமதித்த பின் ஒவ்வொருவராகக் கூறுமாறு கேட்கலாம்.

### 2.2. பிறரைப் பேச அனுமதிக்காமை:

கணவன் மனைவியிடையே அல்லது கணவன் மனைவி இருவரும் இன்னொருவருடன் பேசும்போது இது அடிக்கடி நிகழ்வதுண்டு. 'பொறு. என்னைக் கதைக்க விடு.' என்ற வேண்டுகோள் இதன் வெளிப்பாடேயாகும். இவர்களில் யார் உறவாதிக்கம் செலுத்துகின்றாரோ அவர் மற்ற வரை பேச அனுமதிக்காது தன் கதை கூறுவதிலேயே கருத்தாயிருப்பர். இதனால் துணையாள் தான் ஓரங்கட்டப்பட்டதாக, ஒதுக்கி விடப்பட்டதாக உணருவார் என்பதைத் தெரிந்து அவர்களும் பேச வாய்ப்புக்கொடுக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

### 2.2. பிறருக்காகக் கதைப்பது:

இறப்புத் துயர், உடல்நலமின்மையால் வருந்து வோர் தம் துயரை எடுத்துக்கூற அனுமதிப்பது அவர்களைக் குணமாக்கும் ஒரு ஊடகமாக அமைகின்றது. ஆனால் இத்தகைய துன்ப அனுபவத்தை ஒருவர் சொல்ல ஆரம்பிக்கும் முன்னரே இன்னொருவர் குறுக்கிட்டு அவருக்காகக் கதைக்க ஆரம்பித்து விடுகின்றனர். இதனால் அவர்கள் தம் மனத்துயரை வெளியில் கொட்டும் வாய்ப்பு அழிக்கப்படுகின்றது என்பதைப் பலர் உணர்வதில்லை.

## 3. சுயம் பகிரல்

### 3.1. பொருத்தமின்றி ஒத்த அனுபவத்தை பகிரல்:

ஒருவர் தன் அனுபவத்தைக் கூறிக்கொண்டிருக்கும்போது அது நம் சொந்த அனுபவங்களை நினைவூட்டுகின்றது. இவ்வேளையில் கதையை ஆரம்பித்தவர் முடிக்கும் முன்னரே சிலர் 'எனக்கும் இப்பிடித்தான்...' என்று தம் கதையை ஆரம்பிக்கின்றனர். இதனால் அவர்கள் தான் செவிமடுக்கப்பட்டதான, புரிந்துகொள்ளப்பட்டதான உணர்வை பெற்றுக்கொள்வதில்லை. இக்கட்டத்தில் நம் சொந்த அனுபவங்களைவிடக் கதை கூறுபவரின் விடயத்தில் கவனம் செலுத்துவது நல்ல பழக்கமாக அமையும்.

### 3.2. சுயம்பற்றிய பேச்சு:

சிலர் உரையாடல் ஆரம்பித்துச் சில நிமிடங்கள் கழிந்தவுடன் தம்மைப்பற்றியே பேச ஆரம்பித்துவிடுகின்றனர். இது தம்மைப் பற்றிப் புழுகிறதாக பெரும்பாலும் அமைகின்றது. வேறு சந்தர்ப்பங்களில் தம் திட்டங்கள் அல்லது செயற்பாடுகள் பற்றியதாக அமைவதுண்டு. கொஞ்சநேரம் கேட்க இது வியப்பை ஏற்படுத்தலாம். தம் சாதனைகள், மகிழ்ச்சியான அனுபவங்கள், தம் 'அந்தக்கால' அனுபவங்களை ரசித்து விபரித்தல் சிலருக்குச் சலிப்பானது. இது மிகையான பாராட்டுத் தேவை அல்லது தன்னை மிக உயர்வாகக் கருதும் மனப்பாங்கால் இடம் பெறுகின்றதாகக் கருதுகின்றேன். ஆனால் பிறரும் தம் 'சாதனைகள்' பற்றிக் கூறுவதற்கு வாய்ப்பு அளித்தால் நன்றாக அமையும். நம்மைப்பற்றி மாத்திரம் தொடர்ந்து கதைத்துக் கொண்டிருப்பது நிச்சயம் பிறருக்குச் சலிப்பை ஏற்படுத்திவிடும். இதனால் பிறர் நம்மை விலக்குவர் அல்லது சகித்துக்கொள்வர். இதனைச் சரியாக புரிந்து செயற்படுவது நல்லது. அன்பானவருக்குப் புழுகுவது வேறு, சமூக உரையாடலின்போது புழுகுவது

வேறு என்பது இங்கு கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

### 3.3. சொந்தச் சிந்தனைகள், அவதானிப்புகளைக் கூறல்:

சிலர் தமது சில சிந்தனைகள், அவதானிப்புகள், நுட்பங்கள் என்பனவற்றைத் தன் விலைமதிக்க முடியாத பொக்கிசமாகக் கருதுவர். இதனால் இதனை எவருக்கும் சொல்வதில் அலாதிப்பிரியம். இவ்விடயத்தைக் கதைக்க ஆரம்பித்தால் அவர்கள் அதிலேயே மூழ்கித் தொடர்வர். இதனால் பிறர் பேச வாய்ப்பு இழக்கப்படுகின்றது. கேட்பவருக்குச் சலிப்புத் தட்டும். தன் முன்னிருப்பவர் இவற்றைக் கேட்க விரும்புகின்றாரா என்பதை நிச்சயப்படுத்தி பின்னர் இதில் இறங்குவதே நல்லது. ஏனெனில் சில சந்தர்ப்பங்களில் இது பொருத்தமானதே

## 4. உரியவருக்கு வெளிப்படுத்தாமை

### 4.1. ஆள்மாறிச் சொல்லல்:

சிலர் தாம் இன்னொருவரால் புரியப்பட வில்லையென உணரும்போது அதை அவருக்கே விளக்காது வேறு ஆட்களுக்குச் சொல்லிக் கொண்டிருப்பர். மனத்துயரைக் குறைக்க இவ்வாறு செய்வதில் தவறில்லை. தனக்கு ஒரு பிரச்சினை ஏற்படும்போது குறிப்பாக இன்னொரு உறவில் பிரச்சினை ஏற்படும்போது அவருடன் பேசித் தீர்க்காது தாம் சந்திக்கும் எல்லோருக்கும் முறை யிடுகின்றனர். இது அவர்கள் உறவுப் பிரச்சினை தீர்க்கும் ஆற்றலில் வளர்வதற்குத் தடையாகி விடுகின்றது. ஒப்பாரி தொடர்ச்சியாகக் கேட்கக் கூடிய ஒன்று அல்ல என்பதைப் புரிந்து நடக்க வேண்டும் எனவே எதை எவரிடம் சொல்வது பொருத்தமானது எனும் அறிவு கற்றுக்கொள்ளப் பட வேண்டிய ஒன்று.

### 4.2. பொருத்தமற்ற சுயவெளிப்படுத்தல்:

சிலர் தாம் வறுமையிலிருந்து மீண்டு உயர்ந்தவர்கள் என்பதை சந்திக்கும் எவருக்கும் சொல்லுவர். இவ்வாறே தம் குறைகள் பற்றி தேவையின்றிப் பிறருக்கு வெளிப்படுத்துவதும் அமைகின்றது. இதனை என்ன நோக்கோடு செய்கின்றேன்? இதனால் யார் பயனடைகின்றனர்? போன்ற கேள்விகள்மூலம் சுயஆய்வு செய்வது நல்லது. என் முன்னே இருப்பவர் இதைக் கேட்க விரும்புகின்றாரா என்றறிந்து செயற்படுவதே பொருத்தமானது.

## 5. மிகைப்படுத்தல்கள்

### 5.1. மிகை விளக்கம் அளித்தல்:

சிலருக்குத் தான் சொல்வதை பிறர் விளங்கிக்கொள்ளவில்லையென்ற தேவையற்ற எண்ணம் தோன்றிவிடுகின்றது. இதனால் அவர்கள் விடயம் தெரிந்தவர்களுக்கும் அக்குவேறு ஆணிவேறாக விளக்க முயல்கின்றனர். கேட்ப வருக்கு எப்ப இவர் நிறுத்துவாரோ என்று படும். சிறுபிள்ளைக்கு அல்லது துறைக்குப் புதியவருக்கு இத்தகைய விளக்கம் தேவைப்படலாம். ஆனால் விளங்கும் ஆற்றல் கொண்டவர்களுக்கு இது அவசியமற்றது.

### 5.2. வீண் விபரிப்பு:

தம் சொந்த அனுபவங்களை மிகையாக விபரிப்பது சலிப்பூட்டும் விடயம் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். தாழிச்சுக் கதைப்பது சிலருக்குப் பிடித்ததாக அமையலாம். சிலரக மனிதர் தாம் கேட்கும் விடயம் விபரமாகக் கூறப்படுவதை விரும்புகின்றனர். அத்தகை யோருக்கு இது பொருத்தமானது. ஆனால் பலர் 'உடனடியாய் விசயத்துக்கு வரவேணும்' என்றே விரும்புகின்றனர். யாருக்கு விபரித்துக் கூறுவது, யாருக்குச் சுருக்கமாகக் கூறுவது என்பதைத் தேர்ந்து தெரிவது பொருத்தமானது.

### 5.3. கொல்ல தெருவில் ஊசி விற்றல்:

சிலர் தொடர்பாட விரும்பும்போது தன் முன்னிருப்பவர் ஈடுபட்டுள்ள துறையில் தனக்கும் 'விசயம் தெரியும்' என்று காட்ட முயல்வதுண்டு. இது உரையாடலில் விரும்பத்தகாத உணர்ச்சிக் சூழலையே உருவாக்கும். ஒரு துறையில் தேர்ச்சி யுள்ளவருக்கு அவர் துறை தொடர்பான விடயம் தனக்குத் தெரியும் என்று காட்ட முயல்வது அவசிய மற்ற ஒன்று. அவரிடமிருந்து நல்ல விடயங்களை அறிய முயல்வதே நல்ல மனப்பாங்கு.

## 6. தவறான உதவுதல் முறை

### 6.1. அவரசப்பட்டுப் புத்திமதி கூறல்:

ஒருவர் தன் பிரச்சினையைக் கூறும்போது அவருக்கு அதைத் தீர்க்கத் தெரியுமா இல்லையா

என்று கூட யோசிக்காமல் 'இப்பிடிச் செய்தால் நல்லது' என்ற முறையில் பதில் கூற ஆரம்பிக் கின்றனர். இக்கட்டத்தில் தன் பிரச்சினையைத் தீர்க்க அவர் என்னென்ன முயற்சிகளை ஏற்கனவே கடைப்பிடித்துள்ளார் என்பதை அறிய முயன்ற பின்னர் கூறும் விடயமே அவருக்குப் பொருத்தமாக அமையும்.

### 6.2. எப்பிடிச் செய்தால் நல்லது என்று கூறல:

ஒருவர் தான் என்ன விடயங்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார் என்று சொல்லி முடிக்கு முன்னரே 'நீங்கள் இப்பிடி இப்பிச் செய்தால் நல்லது' என்று அறிவுரை கூற ஆரம்பித்தல் இன்னொரு தவறாக அமைகின்றது. ஆலோசனை கேட்டுவரும்போது இவ்வாறு செய்வது பொருத்தமானது. ஆனால் ஏனைய சந்தர்ப்பங்களில் அவர்கள் கேடகும்போது மாத்திரம் சொல்வதே நல்லது. 'நான் உன்னைவிட விசயம் தெரிந்த ஆள்' என்ற உயர்வு மனப்பான்மை இவர்களை அறியாமல் செயற்படுகின்றதை இவர்கள் உணர்வதில்லை. சிலருக்கு, எல்லோ ருக்கும் நல்லது நடக்க வேணும் என்று கருதி உதவும் நல்ல மனப்பான்மை உண்டு. ஆனால் இதில் நிதானம் தேவை. மற்ற நபர் நம்மிடமிருந்து ஆலோசனையை எதிர்பார்க்கின்றாரா அல்லது தன் செயற்பாட்டைப் பகிர விரும்புகின்றாரா என்று அறிந்து செயற்படுவது நல்லது. அனுபவ மில்லா ஒருவர் புதிய அனுபவம் ஒன்றிற்குள் நுழைகின்றபோது அவர்களுக்கு அறிவுரை தேவைப்படுவதுண்டு. அப்போது சொல்லும் கருத்துகள் அவர்கள் மனதில் ஆழப்பதிந்து அவர்கள் சிறப்பாகச் செயற்பட உதவும். ஆனால் இது வேறு.

## 7.பிறர்நிலை விளங்காமை

### 7.1. இழுத்துப் பிடித்துக் கதைத்தல்:

சிலர் தாம் சொல்ல வேண்டியதை உடனேயே சொல்லி முடித்துவிடத் துடிப்பவர்கள். இவர்கள் மற்றவர்களின் நேரப்பிரச்சினை, அவசரங்கள் பற்றிச் சிந்திப்பதில்லை. 'நான் அவசரமாய் போய்க்கொண்டிருக்கிறன்." "எனக்கு முக்கிய வேலைகள் இருக்கு" என்று சொன்னாலும் கூட விடமாட்டார்கள். இது நல்லதல்ல. பிறரின் நிலையறிந்து கூறவேண்டியதைக் கூறக் கற்றுக்கொள்வது முக்கியமான ஒரு விடயம்.

### 7.2. தெரிவித்தும் திருப்பக்கூறல்:

சிலர் தம் கதையை இரண்டாம் தடவை கூறும்போது, "நீங்கள் இதை முந்திச் சொன்ன னியள்.' என்று திருப்பத் திருப்பக் கூறியும் அதைக் கவனத்தில் எடுக்காது தம் கதையைக் கூறிக் கொண்டிருப்பர். இதனால் இவர்கள் பெரும்பாலும் விலக்கப்படுவார்கள் என்பதே உண்மை

### 7.3. விவாதத்தில் ஈடுபடல்:

சிலருக்கு சமூக உரையாடலின்போது எது கதைப்பது எது கதைக்காது விடுவது என்று புரிவதில்லை. இத்தகைய சூழலையெல்லாம் இவர்கள் விவாத மேடையாக்கி விடுகின்றனர். இதனைக் கூடஇருப்போர் விரும்புவதில்லை என்பதைத் தெரிந்து நடக்க வேண்டும்.

## 8.நல்லது காணத் தவறுதல்

### 8.1. குறை சுட்டிக்காட்ட அல்ல திருத்த அவசரப்படல்:

நான் சிலரைக் காகம் என்றே நினைப்பதுண்டு. இவர்களுக்கு எங்கு பார்த்தாலும் குப்பை, அழுகல் தான் உடனே கண்ணில் படும், பிறரிலை இருக்கும் நல்லது தெரியாது. இதனால் இவர்களால் பிறர் நல்லது செய்யும்போது பாராட்ட முடிவதில்லை. பிறமொழி பேசும்போது யாரும் தவறுவிட்டால் சிலர் உடனே அதைத்திருத்த உடனே முயற்சிப்பர் உரையாடல் முடிந்த பின்னர் அதைப் பண்போடு சுட்டிகாட்டி பிறருக்கு உதவலாம். ஆனால் பிறர் முன் அவர் அவமான மடையாது பார்த்துக் கொள்வது முக்கியம். ஒரு பிள்ளைக்கு பல் மிதப்பு. இதைக் கண்ட ஒருவர் பிறர் முன் "நீங்கள் கிளிப் போடலாமே.' என்றார். அப்பிள்ளை கூனிக்குறுகினதை அவதானித்தேன்.

### 8.2. ஊத்தைப் பகிடி:

ஊத்தைப் பகிடியைப் பண்புள்ள எவரும் விரும்புவதில்லை. பிறர் மத்தியில் பிரபல்யத்தை விரும்புவோர், பலரால் தான் விரும்பப்பட வேண்டும் என்ற தேவை மிகையாக உள்ளோர், பாலியல் நோக்கம் கொண்டோர் இதில் ஈடுபடு கின்றனர். கேட்போரில் சிலர் உண்மையாக 'ருசித்து' சிரிக்கக்கூடும். ஆனால் பிறர் இத்தகை யோர் பற்றி உள்ளூர தவறான கண்ணோட்டமே கொண்டிருப்பர்.

### 8.3. நக்கல்:

மட்டம் தட்டிப்பேசப்படுவதை, தான் செய்தது அல்லது எடுத்த தீர்மானம் தவறானது

என்று கூறப்படுவதை எவரும் விரும்புவதில்லை. ஆனால் இதை உணராது நடக்கின்றனா். இத்தகை யோரைப் பிறா் வெறுக்கின்றனா் அல்லது சகித்துக் கொள்கின்றனா். ஒருவா் மற்றவா்களை "புத்தியில் லாதவா்" என்ற தோறணையில் நக்கல் அடிக்கும் பழக்கம் உடையவா். இவரைத் திருத்துவதற்கு அவா்கள் அவருக்குச் சூட்டிய பெயா் 'புத்திக்காரன்'. அதோடு அவா் இப்பழக்கத்தை குறைக்க ஆரம்பித்தாா்.

### 8.4. பொறாமைக் கதை:

பொறாமைப் பட்டுக் கதைப்பவா்களை யாா்தான் விரும்புவாா்கள்?. பிறா் நன்றாக இருந்தால் அல்லது சிறப்பாக எதுவும் செய்தால் தன் உயரம் குறைந்துவிட்டதாகச் சிலா் உணருகின்றனா். இவா்களின் தாழ்வான சுயமதிப்பீடே இதற்குக் காரணம். பொறாமையால் கதைப்பவா்களை யாரும் விரும்புவதில்லை என்பதை உணா்ந்து நடப்பது நல்லது. இவா்களை 'நஞ்சன்' என்றும் சொல்லுவா்.

சமூக உரையாடல்களை அவதானிப்பது ஒரு நல்ல பழக்கமாக அமையும். ஏனெனில் உரையாடலின்போது சிலா் விடுகின்ற தவறுகள் எவ்வாறு உறவுகளை ஆழப்படுத்துவதற்குத் தடை யாகின்றது என்பதை அறிந்துகொள்ள வாய்ப்பாக அமையும். உரையாடல்கள் பழக்கப்பட்டுப் போவதால் அவற்றில் நிகழும் தவறுகளை நாம் அவதானிப்பதில்லை. அவை பிறரைப் பாதிப்பதாக அமையும்போதும் சிலா் பொறுமையோடு சகித்துக் கொள்கின்றனா். சிலா் எரிச்சலடைந்து சுட்டிக் காட்டிவிடுகின்றனா். இன்னும் சிலா் 'பின்னாலை' கதைப்பதில் ஈடுபட்டு நமது நற் பெயரைக் கெடுப்பதாக அமைந்து விடுகின்றன. மேற்குறிப் பிட்ட விடயங்கள் வாசகா்களைக் கருத்தில் கொண்டு எழுதப்பட்டாலும் சில இலக்கிய வாதிகளின் படைப்புகளுக்கும் பொருந்தும்



# இனிது

*தம் மக்கள் மழலை மொழி பெற்றாா்க்கும் இனிது*
*தயவுடன் ஒப்பிட்டுச் சொன்னவா் வள்ளுவா் பெருமான்*
*யாழ் இனிது குழல் இனிது எனினும் தம் உயிா்*
*மழலையின் மொழியை தாம் தாய் தந்தையா்க்கு மிக இனிது.*

*இஃதே போல் கண்ணுக்கினிமை காண்பதில் உளது*
*இன்பம் என்பதும் இனிமைகளால் அடைதல் தாம்*
*பூக்கள் இனியன பூப்போன்ற முகங்களும் இனியன*
*பூரண சந்திரன், கடல்,சோலை,வான் இனியனவாம்*

*மனதிற்கினிமை மகிழ்ச்சி தருவன வெல்லாம்*
*மாா்பு தட்டி வீறாப்பும் பேசி இனிமை காணல் ஆகா*
*இதமாய்ச் சொல்வது இனிது இன் சொல்உரைத்தல் அது*
*இதனையும் வள்ளுவா் விண்டுரைத்தான் காண்கின்றோம்.*

*வாழ்வின் ஒவ்வோரமைதியிலும் இனிமை உண்டன்றோ?*
*வாழும் சமூக அமைப்பில் ஒற்றுமை பேணல் இனிது*
*ஒருவருக் கொருவா் உபகாரம் புரிதலும் இனிதே*
*ஒருவரை ஒருவா் அறிந்து புரிந்து வாழ்தலும் இனிது.*

*மனம் பொருந்தி ஆண்- பெண் இருவா் கரம் பிடித்தே*
*குணமறிந்து இல்வாழ்வில் ஒன்றிணைதல் இனிது*
*மனம் கொண்டு ஆசிரியரைப் பணிந்து கல்வி பெறல் இனிது*
*மானம் மரியாதை பேணித்தற்காத்துக் கொள்ளல் இனிது*

*எளியாரைக்காணின் வசதியுற்றோா் வாாி வழங்கல் இனிது*
*களிப்புறச் செய்தே வருவிருந்து உபசாித்தல் இனிது*
*சலிப்பின்றிப் பொதுப்பணிகள் பாா்த்திடுதல் இனிது*
*சா்க்கரைப் பாகு கற்கண்டு நாவிற்குத்தானும் இனிது.*

வெளிப்பண்ணை - அத்தாஸ்



அன்புமணி

# காட்போட் கனவான்



நீண்டநாட்களுக்குப் பிறகு அக்காவிடமிருந்து கடிதம் வந்திருந்தது.

"என்னைக் கிழக்குப் பிராந்தியத்துக்குப் பொறுப்பாளராப் போட்டிருக்கிறார்கள். அடிக்கடி மட்டக்களப்புக்கு வந்து தங்கியிருக்க வேண்டும். சுமாரான ஒரு வீடு வாடகைக்கு ஏற்பாடு செய்யவும் – பரமேஸ்வரி.

எனக்குக் கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. மட்டக்களப்பு டவுனில் வீடு வாடகைக்கு ஏற்பாடு செய்வதென்றால் லேசான காரியமா?

தெரிந்தவர்கள் பலரிடம் சொல்லி வைத்தேன்.

நானும் வீடு தேடும் படலத்தை ஆரம்பித்தேன். ஒன்று இருந்தால் இன்னொன்று இல்லை. அழகான வீடு, ஆனால் வாகனம் விட இடமில்லை. நல்ல வீடு, ஆனால் பாத்றூம் ஒழுங்கில்லை. இப்படி ஒவ்வொரு வீட்டிலும் ஏதோ ஒரு குறை இருந்தது. நானும் ஓடி ஓடிக் களைத்து விட்டேன். அந்தச் சந்தர்ப்பத்தில் தான் பத்மநாதன் என்னைத் தேடி வந்தார்.

"வாடகைக்கு வீடு தேடுகிறீர்களாம்"

"ஆமாம், ஆனால் ஒன்றும் நன்றாக அமையவில்லை"

"தாமரைக்கேணி எப்படி"

"பரவாயில்லை"

"நான் இருக்கும் வீட்டில் பாதி காலியாக இருக்கிறது. தனியான கிணறு, தனியான ஹட்டர் பம்ப், குளியல் அறை, ஒரு பெரிய ஹோல், இரண்டு பெரியஅறை, தனியான கிச்சன் அறை.

நல்லதாகத்தான் படுகிறது.

"வாடகை – அட்வான்ஸ் எப்படி?"

"பரவாயில்ல 1½லட்சம்.மாத வாடகை 5000/-

"வாங்க இப்பவே போய்ப்பார்க்கலாம்."

போய்ப் பார்த்தேன் வசதிகள் குறைவாக இருந்தாலும் வீடு பரவாயில்லை

அக்காவுக்கு அறிவித்தேன். எடுக்கச் சொன்னாள். ஒரு லோயரைப் பிடித்து அக்ரீமென்ட் எழுதி முடித்துவிட்டேன். அக்கா வந்து அட்வான்ஸ் தருவதாகக் கூறினா, பத்மநாதனும் அதை ஏற்றுக் கொண்டார்.

இரண்டொரு மாதம் கடந்திருக்கும் பத்மநாதன் வந்தார். "தம்பி உங்கட அக்காட கொழும்பு முகவரியும், டெலிபோன் நம்பரும் தேவைப்படுகிறது தரமுடியுமா'

"ஏன் என்ன அவசரம்?"

"குடும்பத்தோடு, கொழும்புக்குப் போகிறேன் போய்ப் பார்க்கலாமெண்டு தான்..."

"அப்படியா? அதுக்கென்ன இந்தாங்க இந்தத் துண்டில் அட்ரெஸ், டெலிபோன் நம்பர் எல்லாம் இருக்கிறது."

"தாங்ஸ்" பத்மநாதன் துண்டை வாங்கிக் கொண்டு போய்விட்டார்.

பத்மநாதன் பரமேஸ்வரியின் கொழும்பு விலாசத்தைத் தேடிக் கண்டுபிடித்து, மனைவியுடன் போய்ச் சேர்ந்தார்.

மட்டக்களப்பு வீடு பிடித்திருக்கிறதா? அடிக்கடி மட்டக்களப்புக்கு வந்து போறது சிரமமாக இல்லையா? மட்டக்களப்புக்கு இடமாற்றம் எடுத்துக் கொண்டு வந்தால் என்ன? போன்ற மாமூல் கேள்விகளைக் கேட்ட பின் சப்ஜெட்டுக்கு வந்தார் பத்மநாதன்.

"உங்களிட்ட ஒரு முக்கியமான உதவியை எதிர்பார்த்து வந்திருக்கிறேன்."

"என்ன சொல்லுங்கள்!"

"என் மனைவிக்கு கிட்னி ட்ரபிள். ஒபரேஷன் செய்ய வேண்டும். இவட அக்கா லண்டனில் இருக்கிறா.

நீங்க கொழும்புக்குப் போங்க. நான் உங்கள் கணக்குக்கு பணம் அனுப்புகிறேன். என்று சொல்லியிருந்தார். அவர் பேச்சைக் கேட்டு நாங்களும் கொழும்புக்கு வந்து விட்டோம். திங்கள் கிழமையிலிருந்து பாங்குக்குப் போறதும் வாறதுமா அலையிறம் பணம் வந்து சேரவில்லை. காலையில் சொல்றா உடனடியாகப் பணம் அனுப்ப முடியாதாம். ஒரு கிழமை செல்லுமாம். ஆனால் இவவுக்கு ஒப்பரேஷன் உடனடியாகச் செய்ய வேண்டுமெண்டு டொக்டர் சொல்றார்."

"கிட்னி ஒபரேஷன் என்டால் பெரிய தொகைப் பணம் தேவைப்படுமோ"

"ஆமாம் பெருந்தொகைதான் தேவைப்படுகிறது"

"எவ்வளவு"

"அதிகம் இல்ல — ஒரு ஒண்ணரை லட்சம் போல"

பரமேஸ்வரி திகைத்தாள்

ஒண்ணரை லட்சம் பணத்தை ஒருவர் வந்து எவ்வளவு சிம்பிளாகக் கேட்கிறார்.

சற்று நேரம் மௌனம் நிலவியது பரமேஸ்வரி மௌனத்தைக் கலைத்தாள்.

"இதில் நான் என்ன செய்ய வேண்டும்?"

"அந்தப் பணத்தை நீங்கள் கடனாகக் கொடுத்து உதவ முடிந்தால்..."

"அவ்வளவு பெரிய தொகைக்கு நான் எங்கே போவேன். நீங்கள் வேறு யாரையும் தான் பாக்க வேணும்"

"நீங்க அப்பிடிச் சொல்லப்படாது. கொழும்பில் எங்களுக்கு நண்பர்கள் இருக்கிறார்கள் தான் ஆனால் இவ்வளவு பெரிய தொகையைத் தரக்கூடியவர்கள் யாருமில்லை."

"அதைப் போலத்தான் நானும் அவ்வளவு பெரிய தொகையைக் கடனாகத் தரக்கூடிய நிலையில் நான் இல்லை"

"நீங்க அப்படிச் சொல்லக்கூடாது. உங்களால் நிச்சயமாக முடியும். ஒரு ஊரில் பிறந்தவங்க நாம். பரஸ்பரம் உதவி செய்வது வழக்கம் இல்லையா?"

பரமேஸ்வரிக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. எந்தவிதமான ஈடும் இல்லாமல் திடீரென்று வந்து ஒன்றரை லட்சம் கடனாகக் கேட்ப தென்றால் இவனுக்கு என்ன துணிச்சல் இருக்க வேண்டும்?

"பணம் எல்லாம் தரமுடியாது. போங்க வெளியே தன்னை மறந்து கத்திவிட்டாள். பரமேஸ்வரி. உள்ளே சென்று கதவைப் படீரென்று சாத்திக் கொண்டாள்."

அன்று முழுக்க பரமேஸ்வரிக்கு ஒரு வேலையும் செய்ய முடியவில்லை.

வங்கியின் பிரதேச முகாமையாளராகத் தான் இருப்பதால் தான், தன்னிடம் வந்திருக்கிறார்கள் நிர்த்தாட்சண்யமாக வெளியே போகச் சொல்லி விட்டோம். அவர்கள் இனி எங்கே போவார்கள்? ஒரு கடிதம் வாங்கிக் கொண்டு பணத்தைக் கொடுத்திருக்கலாமோ?

திரும்பத் திரும்ப இந்த விடயமே அவள் மண்டையைக் குடைந்து கொண்டிருந்தது. நிலை கொள்ளாமல் தவித்தாள். இரவு முழுக்க அவளுக்குத் தூக்கமில்லை.

காலையில் எழுந்ததும் முதல் வேலையாக மட்டக்களப்புக்குப் போன் செய்து பத்மநாதன் தம்பதியினரின் கொழும்பு டெலிபோன் நம்பரைப் பெற்று அவர்களுடன் ஆறுதலாகக் கதைக்க வேண்டும் என நீண்ட நேரம் யோசித்த படியே தூங்கிப்போனாள் பரமேஸ்வரி.

காலையில் எழுந்ததும் முதல் வேலையாகத் தம்பிக்குப் போன் செய்தாள். ஆனால் என்ன துரதிர்ஷ்டம் அவனுக்குப் பத்மநாதன் தம்பதிகளுடைய கொழும்பு தொலைபேசி நம்பர் தெரிந்திருக்கவில்லை.

ஒருவாறு தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டு அலுவலகம் செல்லப்புறப்பட்டாள்.

சரியாக அந்தநேரம் பார்த்துக் கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தார்கள் பத்மநாதன் தம்பதிகள்.

பரமேஸ்வரி நிம்மதியாக மூச்சுவிட்டாள்.

"அம்மா நேற்று முழுக்க எங்கும் ஓடிப் பார்த்து விட்டோம். பணம் கிடைக்கல்லா அதுதான் திரும்பவும் உங்களிட்ட வந்திருக்கிறம்."

"ஆனாலும் நீங்கள் எதிர்பார்க்கும் தொகை பெரிது ஒரு பிடியும் இல்லாமல். அத்தொகையை நான் எப்படிக் கொடுப்பது?"

"வேண்டுமானால் வீட்டுக்குரிய அட்வான்ஸ் பணத்துடன் இதையும் சேர்த்துக் கொள்ளுங்கள் அம்மா. மட்டக்களப்புக்குப் போனதும் எப்படியாவது திரட்டி உங்கள் பணத்தைக் கொடுத்துவிடுகிறோம். அல்லது நீங்கள் கேட்கிற பிணையை எழுதிக் கொடுத்து விடுகிறோம்."

"சரி பின்னேரம் வாருங்கள்" என்றாள், பரமேஸ்வரி. பின்னேரம் அவர்கள் வந்தார்கள். ஒரு பிணையும் இல்லாமல் ஒன்றறை லட்சம் பணம் கை மாறிவிட்டது."

பத்மநாதன் தம்பதிகள் வெற்றிப் புன்னகையுடன் தாங்கள் தங்கியிருந்த ஓட்டலுக்குத் திரும்பினார்கள்.

அடுத்த முறை மட்டக்களப்புக்கு வந்த போது அக்கா என்னிடம் இந்த விபரங்களைக் கூறினாள். விறைத்துப் போனேன். இப்படியும் ஒரு ஏமாளி உலகத்தில் இருக்க முடியுமா?

இரண்டு வாரம் கழித்து பத்மநாதன் தம்பதிகள் ஜாலியாக மட்டக்களப்புக்குத் திரும்பினார்கள். 1½ லட்சம் கடன் தொகை அவர்களுக்கு மறந்தேவிட்டது.

லண்டன் உறவினரிடமும் அதைப் பெற்றுக் கொடுக்கவில்லை.

கேட்டால், தருவோம், தருவோம் எனக் கிளிப்பிள்ளை பாடம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஒன்றரை லட்சம் பணத்துக்கு ஈடாக அவர்கள் எதையும் எழுதிக் கொடுக்கவில்லை.

உள்ளூரில் விசாரித்ததில், இப்படி அவர்கள் நிறையப்பேரிடம் பணம் வாங்கியிருப்பது தெரியவந்தது. பரமேஸ்வரி பத்திரகாளியானாள்.
"நான் இப்பவே போலீசுக்குப் போகிறேன். இதற்கு ஒரு முடிவு சொல்லாவிட்டால், என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது" என்று கத்தினாள்."

"கொஞ்சம் பொறுமையாக இருங்க அம்மா. வாற கிழமை எப்படியும் எனக்குப் பணம் வந்து சேரும் அதில் உங்கள் கடனை அடைப்பதுதான் எங்கள் முதல் வேலை" என்றார் பத்மநாதன்.

அடுத்த வாரம் பத்மநாதன் வீடு பூட்டிக் கிடந்தது அவர்கள் குடும்பத்துடன் கொழும்புக்குச் சென்றுவிட்ட தாகப் பக்கத்து வீட்டுக்காரர் சொன்னார்.

பரமேஸ்வரி அதிர்ந்து போனாள்.

உடனே போலீசுக்குப் போன் செய்தாள். ஏ.எஸ்.பி உடனே பதில் கூறினார்.

"மேடம்! ஆளை லேசாக மடக்கிப் பிடித்துவிடலாம்."

கடனுக்காக அவர் அடகு வைத்த வளவு உறுதியைக் கொண்டு வருங்கள். இன்றைக்கே அவனை அரெஸ்ட் செய்ய ஏற்பாடு செய்கிறேன்" என்றார்.

"வந்து... வந்து"

"என்ன தயங்கிறீங்க?"

"நான் அப்பணத்துக்கு அடகாக எதையும் பெற்றுக் கொள்ளவில்லை சேர்."

"அடகு எதுவும் பெற்றுக் கொள்ளாமலா அவ்வளவு பெரிய தொகையைக் கடனாகக் கொடுத்தீர்கள்?" அப்படியானால் புறெ நோட் ஏதாவது வாங்கியிருக்கிறீங்களா?

"அது கூட வாங்கவில்லை!"

"ஐயையோ! புறெ நோட் கூட வாங்காமலா. சேச்சே! அப்படியானால் அவனிடம் பணம் பெற்றுக் கொண்டதாக கடிதம் ஏதாவது வாங்கினீர்களா?"

"அதுவும் வாங்கவில்லை சேர்"
"மைகோட்! வங்கியில் ஆர்.எம்.மாக இருக்கிறீங்க, அப்படி எந்தவித பிடியும் இல்லாமல் ஒன்றரை லட்சம் பணத்தைத் தூக்கிக் கொடுத்திருக்கிறீர்களே!"

"எல்லாம் ஒரு நம்பிக்கையில்தான் சேர், கொடுத்தேன்"

"நம்பிக்கை காலை வாரிவிட்டது பார்த்தீங்களா?"

"எப்படியாவது நீங்கதான் சேர் என் பணத்தை மீட்டுக் கொடுக்க வேண்டும்."

"சரி முயற்சிக்கிறேன் அவனுடைய கொழும்பு அட்ரசைக் குடுங்க"

"அதுவும் இல்ல ஸேர்: இரவோடு இரவாகச் சொல்லாமல் கொள்ளாமல் போய்விட்டான்."

"சரி பார்க்கிறேன் நீங்க சொன்ன விபரங்களைக் கொழும்பு போலீஸ்க்கு அனுப்பிப் பார்க்கிறேன். ஆள் அகப்பட்டால் உங்கள் அதிர்ஷ்டம்!"

"முழு முயற்சி செய்து பாருங்க சேர்"

"ஓ.கே! ஓ.கே!"

மறுமுனையில் டெலிபோன் வைக்கும் சத்தம் கேட்டது. நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன.

பத்ம நாதனைப்பற்றிய எவ்வித தகவலும் கிடைக்கவில்லை. இரண்டு வாரம் கழிந்தது. திடீரென்று ஒரு நாள் திடீரென்று மட்டக்களப்பு போலீஸ் ஸ்டேசனிலிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. பரமேஸ்வரி போனை எடுத்தாள்.

"மேடம்! அந்த ஆளின் பெயர் பத்மநாதன் தானே மனைவி பேர் தேவகி மட்டக்களப்பு – தாமரைக் கேணியைச் சேர்ந்தவர்கள் சரிதானே?"

"யேஸ் சேர்"

"கே! கே! இருவரும் பிடிபட்டுட்டாங்க வெள்ளவத்தை, போலீசில் இருக்கிறாங்க, விசாரணை நடக்கிறது. பெயிலில் எடுக்க யாரும் முன்வராவிட்டால் ஜெயிலில ரிமான்ட் பண்ணுவம், ரெண்டு கிழமைக்கு வெளியே வரமுடியாது.

"எப்படி சேர் பிடிபட்டாங்க?"

"உங்களைப் போல, கொழும்பிலையும் பலரிட்ட இவங்க கடன் வாங்கியிருக்கிறங்க. அவர்களில் ஒருவன் போலீசில் முறைப்பாடு செய்திருக்கிறான். புறே நோட் வச்சிருக்கான். லபக்கென்று புடிச்சிட்டாங்க."

"அவன்ட மனைவி தேவகி, கொழும்பில எங்கேயோ ரீச் பண்றதாகச் சொன்னாங்க"

"அதெல்லாம் வெறும் உடான்ஸ். பணம் வாங்கித் திருப்பிக் கொடுக்காத குற்றச் சாட்டில அவவை எப்பவோ இன்ரெடிக்ற் பண்ணிட்டாங்க."

"அப்போ என் பணம்...?"

"விசாரணை முடிவில் தெரியவரும். பணம் கட்டாவிட்டால் வீட்டை ஜப்தி செய்வாங்க"

"தாங்யூ சேர்"

பரமேஸ்வரி நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

**நூல் அறிமுகத்திற்கு தங்கள் நூல்களை அனுப்புபவர்கள் தங்கள் நூலின் இரு பிரதிகளை அனுப்ப வேண்டும்**

# கலாசாரத் தேய்வுக்குக் காரணம் பெண்ணுரிமையா?

**யுகாயினி**


குடும்பமென்ற அலகே மனித நாகரீகத்தை உருவாக்கியது என்பார் ஒரு சாரார். குடும்ப அலகு தான் மனித உரிமைகளைப் பறித்தெடுத்தது என்போர் இன்னொருசாரார். பொது உடமைவாதிகள் குடும்ப அலகின் வரவே சுரண்டல் மிக்கதான வர்க்க பேதமுடைய சமுதாயத்திற்கு வித்திட்டது என்று கூறுவர். தனிமனித சொத்துடமை குடும்ப அலகாலேயே ஏற்பட்டதொன்று ஆண்கள் தமது சொத்துக்களை தமது சந்ததி யினருக்கே வேண்டும் என்ற ஆதங்கத்தினாலேயே சம உரிமையுடன் வாழ்ந்த பெண்ணை தமது செத்துடமை யாக்கினான் என்றும் மார்க்சிய வாதிகள் கூறுகின்றனர்.

பெண்ணொரு பிள்ளை பெறும் கருவியாக்கப் பட்டு ஆண்களால் ஆதிக்கம் செலுத்தப்படும் நிலையை குடும்ப அலகே ஏற்படுத்தியது. இதன் ஒரு அங்கமாகவே ஒரு தலைப் பட்சமான கற்பு எனும் மாயை ஏற்படுத்தப் பட்டது. இந்த விடயத்தை ஒழுங்கமைத்தோடு தொடர்பு படுத்தி ஒருத்திக்கு ஒருவனாக பெண் கட்டுப்படுத்தப் பட்டாள். இதன் மூலமே நிலவுடமை வாதிகளின் சொத்துக்கள் அவர்களது பரம்பரையினருக்கே சென்றிட உறுதி செய்யப்பட்டது. பெண்ணின் பாலியல் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்திய ஆண்வர்க்கம் தாம் மட்டும் பாலியல் சுதந்திரத்துடன் வாழ்ந்தார்கள் இதன் விளைவாகவே பாலியல் தொழிலாளர்கள் உருவாக்கப்பட்டார்கள்.

எது எப்படியோ இன்றைய உலகில் குடும்பமென்ற அலகு தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது. குடும்பம் தான் மனித வாழ்வின் ஆதாரம் ஒரு சமூகத்தின் கலாச்சாரத்தின் கட்டமைப்பென்றாகி விட்டது.

இந்த குடும்ப அலகின் வரவு பெண்களின் சுதந்திரத்தை கட்டுப்படுத்தி உரிமைகளை பறித்தொடுத்துள்ளமையை மறுக்கமுடியாது பல ஆண்டுகள் பாரம்பரியமாக தொடர்ந்து வரும் இந்த குடும்ப அலகின் வரவின் பின்னர் மனிதன் கட்டுப்பாடாக வாழவும் வளர்ச்சி உறவும் வாய்ப்பு ஏற்பட்டதை எல்லோரும் ஏற்றுக்கொள்வர்.

இதனால் ஏற்பட்ட நன்மைகள் ஒருபுறம் இருக்க பெண் அடக்கி ஒடுக்கப்படவும் உரிமைகளை இழந்து துன்பத்தில் வாழவும் நேரிட்டது. சட்டத்தை உருவாக்கிய ஆண்வர்க்கம் தமக்கேற்றவாறே அதை கட்டமைத்தனர். சட்டங்களால் மட்டுமன்றி கலாச்சார பண்பாட்டு அம்சங்களாலும் பெண்ணை இரண்டாந் தரப் பிரஜையாக வடிவமைத்தனர். பால் பேதமான அணுகுமுறைகளுடன் தொடர்ந்த குடும்ப அலகுக்குள் பெண் வெறும் உடமையாக, பாலியல் பதுமையா, ஆணுக்காக தன்னையே தியாகம் செய்வதே நியதி என்பதாக, ஊதியமற்ற உழைப்பாளியாக உருவாக்கப்பட்டாள். பெண் எப்பொழுதும் தாழ்ந்தவளாகவும், ஆணுக்கு



அடங்கி ஒடுங்குபவளாகவும் குடும்பத்துள் வாழும் நிலை ஏற்பட்டது. எது சரி, எது பிழை என்பதெல்லாம் நாம் கட்டமைத்த சட்டத்தினால் தான் தீர்மானிக்கப் படுகிறது. இவற்றில் பல பொது அம்சங்கள் நியாய பூர்வமானவையாக இருந்தாலும், சில அபத்தமாக உள்ளமையையும் காணலாம். பொதுவாக பெண் தொடர்பான பாரம்பரிய அனுகுமுறைகளிலும், கலாச்சார அம்சங்களினும் பாரிய பாரபட்சத்தை அவதானிக்கலாம்.

பிள்ளை பெறுதல் என்ற மகத்தான ஒரு செயற் பாட்டை வைத்துக் கொண்டு, பாலியல் ஒழுக்கம் தொடர் பான விடயத்தை பெண்ணுக்கு பாதகமான முறையில் கட்டமைத்துள்ளமையானது ஆணாதிக்கத்தின் கபடச் செயற்பாடே. பெண், மேலெழுந்து தனக்கு நிகராக வரக் கூடாது என்பதற்காகவே, அவளது கல்வி உரிமையை மறுத்து, வெளியுலக அறிவை முடக்கி,அடுப்படியில்சிறை வைத்தார்கள். அடக்குமுறைக்கு உள்ளாகும் எவரும் கிளர்ந்து எழுந்து போராடவே செய்வார்கள் என்பதற்க மையவே கடந்த நூற்றாண்டில் பெண்ணிய சிந்தனைகள் தலைதூக்கின. விடுதலை, சுதந்திரம், சமத்துவம் என சிந்திக்கத் தலைப்பட்ட பெண் ஆணாதிக் கத்தை ஆட்டம் காண வைக்க ஆரம்பித்த போது அவளுக்கு எதிராக 'ஒழுக்கம்' என்ற ஆயுதத்தையே வெகு சுலபமாக ஆணாதிக்கத்தால் பிரயோகிக்க முடிந்தது. விழித்தெழும் பெண்ணினால் கலாச்சாரத் தேய்வு என்று கூச்சல் போட்ட ஆணாதிக்கம் தமது பக்க தவறுகளை சுபைமாக அடக்கி வாசிக்க, அவர்களால் ஏற்படுத்தப்பட்ட கலாச்சார ஒழுக்க விதிகள் கை கொடுத்தன.

இன்றைய நவீன உலகில் குடும்ப அலகை உடைத்தெறிவது என்பது அசாத்தியமானது மட்டுமல்ல, பாதகமான அம்சமுமாகும். குடும்ப அலகுக்குள்ளேயே இருந்து கொண்டு மேலெழவேண்டிய கட்டாயம் பெண்ணுக்கு! அவர்கள் இயன்றவரை பால் சமத்துவத் திற்காகப் போராடுகிறார்கள். முடியாத பட்சத்தில் இவ்வுலகை உடைத்து வெளியேறவும் தலைப் பட்டுள்ளார்கள் (விவாகரத்து – பிரிந்து போதல்).


பெண்ணுரிமை வாதங்கள் இன்று தாராளமாக மேலெழுந்து வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது. இதை கட்டுக்கடங்காத உரிமை என ஆணாதிக்கவாதிகள் குறிப்பிடுகிறார்கள். அதே வேளை தாம் அனுபவிக்கின்ற கட்டுக்கடங்காத அளப்பரிய உரிமைகள் பற்றி அவர்கள் மூச்சு விடுவதேயில்லை. கலாச்சாரத் தேய்வுக்கும், மனித நாகரிக சிலதவுக்கும் பெண்ணிலை வாதத்தையே காரணமாக குற்றச் சாட்டும் இவர்கள், தாம் மாறினால் இவற்றைக் காப்பாற்றலாம் என்று எண்ணவில்லை.

பெண்ணுரிமை என்பது குடும்பத்தை மீறிய தனிநபர் உரிமையாகி, கணவனுக்கு மதிப்பளிக்காத, கட்டுப்படாத நிலையை பெண்ணியவாதிகள் ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிடும் ஆண் வர்க்கம், தாம் மனைவியருக்கு மதிப்பளிக்கிறார்களா என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆதிக்க மனப்பான்மை யிலேயே இன்னமும் ஆண்கள் மூழ்கியுள்ளமையும் இன்றைய மனித நாகரிக வீழ்ச்சிக்கு வித்திடுகிறது. இன்றைய பெண்கள் ஆடம்பரம், கவர்ச்சி, பாலியல் உரிமை போன்ற எண்ணங்களில் மூழ்கியிருப்பதாக சுட்டு விரல் காண்பிக்கும் ஆணினத்தை நோக்கி ஏனைய நான்கு விரல்களும் சுட்டி நிற்கின்றன. காலம் காலமாக ஆண் வர்க்கம் இவற்றில் தானே மூழ்கியுள்ளது? இதைத் தானே விரும்புகிறது?

அந்தரங்கங்களை அம்பலமாக்கக் கூடாது என்பதற்கான சமூகக் கட்டுப்பாடு மூலம் குடும்ப கௌரவத்தை எமது முன்னோர்கள் வகுத்துள்ளனர். (மன்னிக்கவும். ஆண்கள் வகுத்துள்ளனர்.) ஆனால் ஆண்களே அதை மீறிச் செயற்படுகின்றனர். பாலுறவுகள் பற்றி பகிரங்கமாக பேசப்படும் நிலை உருவாகி யுள்ளதாக குற்றஞ்சாட்டும் ஆண்கள் காலம் காலமாக தம்மிடையே இவை பற்றி கூடிக் கதைத்து வருகின்ற அதே வேளை, பெண்கள் மூச்சு விட முடியாத கட்டுப்பாடான நிலையே இருந்து வந்தது. ஒட்டு மொத்தமாக இன்றைய சமூகம் சரிவுப் பாதையில் செல்வது உண்மை தான். எனினும் அதற்குக் காரணம் பெண்களோ, பெண்ணுரிமை வாதிகளோ மட்டுமல்ல. ஒட்டு மொத்தமான உலகமும் தான். உலகமயமும் இலத்திரனியல் உபகரண வரவும் முக்கிய காரணம் எனலாம்.

பெண்ணுரிமை என்ற கருத்தின் மூலமாக பெண்கள் எதையும் தவறு, வெட்கம் என எடுத்துக் கொள்ளாத நிலைப்பாட்டால் விபச்சாரம் கூட ஒரு தொழிலாகப் பார்க்கப்படுகின்றதான நிலை பற்றி பார்ப்போமானால், முன்னரே இவை இருந்த விடயம் தான். இந்த தொழில் உருவாக்கத்திற்குக் காரணமே இச்சை வெறி கொண்டு அலையும் ஆண்கள் தான் என்பதை ஆணாதிக்கம் இலகுவாக மறந்து விடுகிறது அல்லது மறைத்து விடுகிறது.

விவாகரத்தும், சேர்ந்து வாழல் முறையும் கூட அடிமைத்தனம் மிக்க குடும்ப அலகினால் தான் ஏற்பட்டதேயன்றி, பெண்ணியவாதிகளால் அல்ல. இதில் கூட இருபாலரும் பங்காளிகளே. எமது வாழ்க்கை முறையில் ஆன்மீகம், சமுதாயம் என பல வரம்புகள் இடப்பட்டிருந்தாலும், அவற்றிலும் பால் பேதமாக பெண்களின் உரிமைகள் பின்தள்ளப்பட்டிருந்தன. சுகமான திருமண பந்தம் சுமையாகப் போனதும், மனித குலத்தின் மிக மிக உயர்ந்த அமைப்பான குடும்பம் கேள்விக் குறியானதும் பெண்ணியவாதிகளால் அல்ல. பெண்ணுரிமையை மறுத்த ஆணாதிக்கத்தினாலேயே!



# இருப்பும் இழப்பும்!

அழுகின்ற ஒலியோடு,
ஒரு ஜீவன் உதயமாகிறது,
சுற்றமெல்லாம் மகிழ்ந்து கொண்டாடுகிறோம்.
ஆட்டமெல்லாம் அகாலத்துள் அடங்கி
ஓர் ஜீவன் மறைகின்றது,
சூழ்ந்திருந்து அழுது புலம்புகிறோம்.
வரவில் மகிழ்வதும்
செலவில் அவலிப்பதும் இயல்பு.
ஆனால் இப்போதெல்லாம்...
இருப்புக்களில் இழ(வு)ப்புக்கள் இயல்பாகியதால்
மனம் வெறுமையில்
உறைந்தது என்று சொல்லவா?
இவற்றை சகஜமாக ஏற்கும்
நிலையிலுள்ளது என்பதா?
நீ...ண்...ட மௌனம் பதிலாகிறது!

– கமலசுதர்சன்

# வெற்றுப் பக்கங்கள்

உனக்கும் எனக்குமான
இடைவெளிகள்,
நீண்டு கொண்டேயிருக்கின்றன;
முன் முடிவுகளுடனான, உன்
அனுகுதல்கள் என்னை
எரிச்சலடையச் செய்கின்றன
பிரதி தினமும் உன் எத்தனங்கள்
வீணாகிப் போகும்போது
ஏற்படும் ஏமாற்றங்கள்
அக்கினியாய் உருவகிக்கும்;
உன் எழுதுகருவியின் தன்மை
வீரியமற்றுப் போவதனால்
உருவாக்கமில்லாமல்
வெற்றுப் பக்கங்களே
இறுதியில் மிஞ்சும்.
உன் எண்ணக் கருக்கள்
வாழ்வின் நீட்சியில்
பதிவழிந்த சுவடுகளாய்
வெறிதாகிப் போகும்.

– வே.ஐ.வரதராஜன்

கவிதை அல்ல

# இனி என்னாகுமோ?

ஆடு, மாடு, தோட்டம்
வீடு, வளவு
என்றிருந்த வாழ்வு
போனது.

வெட்டவெளியே
விடுதலையானது.

நாடோடிகளாய்
கூடு விட்டு கூடு பாய்ந்து
வாழும் வித்தை
புதை குழிகள்
கற்றுக் கொடுத்த
பாடம்.

இன்று
எம் வீதி
இவ்வாறானது.

இனி
என்னாகுமோ?


– இ.ஜீவகாருண்யன்



# முகவரியைத் தேடுகின்றேன்

'நான் வாழ்ந்த பிரதேசம்
நாதி யற்ற நிலை
ஏன் என்று கேட்டால்
எல்லாம் யுத்த சூழ்நிலையால்
வீண் வம்பு வார்த்தை
விதண்டா வாத போக்கு
கூன் குறுடு செவிடு
கொத்தடிமையாய் பின் செல்ல
ஊன் உறக்கம் உறவுகள்
ஒரு சேர கைவிட்டே
நாட்டை விட்டு நடைப்பிணமாய்
கால் கடுக்கும் காலம்வரை
கோட்டை கொத்தளம் மாடி
வேல்பிடித்தே வாழ்ந்து விட்ட
வெறும் கையுடன் வெளியேறல்
நாம் செய்த பாவமென்ன
கொள்ளை அடித்தோமா இல்லை
கொடும் கொலைதான் செய்தோமா
உள்ளத்தால் ஊது செய்தோமா
உண்மைக்கு இடைஞ்சல் புரிந்தோமா
வான்படையால் அழிக்கப் பட்டு
வாழாது நாம் செய்தபாவம்?
ஓடோட விரட்டப் பட்டோம்
ஒருவரும் தேடும் நாதியற்று
நாடுவிட்டு நாடு சென்று
நாம் வாழலாமென்றால் இங்கு
சாதிச் சண்டை சமயச்சண்டை
இனச் சண்டை குலச்சண்டை
எப்படி தான் வாழலாம்
நாட்டை விட்டு சென்ற நாம்
திரும்பி வந்து அதிகாரிகள்
ஆக்கிய சட்டத்தின் ஆணைப்படியே
முகவரியை தேடுகின்றோம்...
சீரும் சிறப்புமாய் செந்நெல்
கரும்பு வாழை கத்தரி
வெங்காயம் வேம்பு மாவென
விதவிதமான பயிர்கள் காண
விளையும் பூமிகாண இன்பம்,
கல்லும் முள்ளும் காய்ந்தவிறகும்
பள்ளம் படுகுளி பார்ப்பதற்கு கண் கூசும்
சாம்பல் மேடாய் சந்ததியில்லா
சுடுகாடு போல் சுமைநிறை பூமியாய்
அதிகாரிகள் வழி காட்டலில்
அலைகின்றோம் அல்லும் பகலும்
முகவரியை தேடி அலைகின்றோம்
எப்போது காண்போம் எம்முகவரியை.'

- சீ.என்.துரைராஜா (திருகோணமலை)



செல்லக்குட்டி கணேசனின்

## துளிப்பா

(1)
போதி மரம்
அருகில், வதை கூடம்
சோஸலிசக் குடியரசு.

(2)
பூவின் கனவு அர்ச்சனை
பறித்தேன் கனவு மலர் வளையம்
கலாசாரம்.

(3)
தேர் பற்றிய கனவில் மக்கள்
தூக்கத்தில் இறைவன்
தாய் வயிற்றில் பசி.

(4)
கோபுர தரிசனம்
கொட்டை எழுத்தில் "உபயம்"
ஆசீர்வாதம்.



# புலம்பெயர் தமிழ்இலக்கியம் பற்றிய சில எண்ணக்கருக்கள்

– கீதாகணேஷ்

எதை நாம் வேண்டாம் என ஒதுக்கி விடுகின்றோமோ அதை ஏற்கவேண்டிய நிர்ப்பந்த நிலைகள் எம் வாழ்வோடு ஒன்றித்து விட்ட ஒன்றாக விளங்குகின்றது. இத்தகைய சம்பவங்கள் எம் வாழ்வில் பல உள. அந்தவகையில் எமது பண்பாட்டில், அதாவது தமிழர்க்கேயுரிய தனித்துவப் பண்பாடு என்று கூறுப வற்றுள் புலம் பெயர்ந்து வாழ்தலென்பது ஆரம்ப காலங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகக் காணப் படவில்லை. அதாவது புலம் பெயர்தல் என்ற நிலை இல்லாது, பொருள் வயிற் புரிதல் என்ற நிலையே தொன்மைக்காலத்தில் கானப்பட்டது. இதனைத் தொல் காப்பியப் பொருளதிகார அகத்திணையியற் சூத்திரம்,

"பொருள்வயின் பிரிதலும் அவர்வயின் உரித்தே
உயர்ந்தோர் பொருள்வயின் ஒழுக்கத்தான".

பொருள்வயிற் பிரிதல் நிலத்தலைமைகளுக் குரிய ஒழுக்கமாகவும், உயர்ந்தோர் பொருள்வயிற் பிரிவராயின் அது அறமாகும் எனக் கூறுகின்றது. எனவே பொருள் தேடும் பொருட்டு பிரிதலே அக்கால வழக்காறாயிருந்தது.(இது அக்காலத் தலைவனுக்குரிய அகஒழுக்கமாகக் கூறப்பட்டாலும் அதனூடாக தமிழர் வழக்காறினை அறிய முடிகின்றது). இதனை வழக்கி லுள்ள "திரைகடலோடியும் திரவியம் தேடு" என்ற எமது முதுமொழியே கூறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சிலப்பதிகாரத்தில் "பதியெழு அறியாப் பழங்குடி" எனக் கோவலன்–கண்ணகி குடிச்சிறப்புக் கூறப்படுகின்றமையானது, எமது பண்பாட்டில் நிலையான குடிச்சிறப்பிற்கிருந்த சிறப்பினை எடுத்துக் காட்டுகின்றது. எனவே பொருள்வயிற் பிரிதற் பொருட்டு திரைகடல் கடந்ததை ஏற்று, புலம் பெயர்தலை ஏற்காத நம் பண்பாட்டில் காலப் போக்கில் அரசியற் சூழ்நிலைகளால் எமது மக்கள் வேற்று நாடுகளுக்கு அகதி அந்தஸ்த்துக் கோரிக்குடியேறிப் புலம்பெயர் சமூகமாக வாழ்கின்றனர். 1950களில் ஆரம்பித்த தமிழர் களின் புலம்பெயர்வு அரசியற் சூழ்நிலைகளின் உச்ச நிலையால் 1983,84களில் அதிகளவில் புலம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டமை தெளிவு.

இவ்வாறு புலம்பெயர்ந்து வாழும் சமூகத்தினர் புலம் பெயர் தமிழர் எனப்படு கின்றனர். இவர்கள் தமது அடையாளங்களைப் பேணும் பொருட்டும் தமது உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்துவதற்காகவும் இலக்கியத்தை பயன்படுத்துகின்றனர். இச்சமூகத்தினர், தாம் குடியேறிய நாடுகளில் தாம் அனுபவித்தவற்றை படைப்புக்களால் வெளிப்படுத்துகின்றனர். இதுவே, புலம் பெயர் தமிழ் இலக்கியம் என அழைக்கப்படுகின்றது. தமிழ் இலக்கிய வரலாற்றில் இருபதாம் நூற்றாண்டி லிருந்து புலம்பெயர் இலக்கியம் என்ற ஒரு வகையும் இணைந்து கொண்டது. புலம்பெயர் சமூகத்தில் உள்ளவர்கள் அனைவரும் படைப்பாளர்களாக இல்லா விடினும், தங்கள் அனுபவங்களைப் படைப்பு களூடாக வெளிப்படுத்தி புலம் பெயர் சமூகத்தின் நிலையை வெளிக்கொனருகின்றனர். இவர்கள் தங்கள் அனுபவங் களைக் கவிதை, சிறுகதை, நாவல் என்ற புனைபடைப்பு களூடாக வெளிப்படுத்துகின்றனர். அந்த வகையில் புலம் பெயர் தமிழ்ச் சமூகப் படைப்பாளிகளை ஒன்றிணைக் கும் முகமாக சர்வதேச தமிழ் புலம்பெயர் படைப்பாளி களின் சிறுகதைகளைத் தொகுத்து இந்திரா பார்த்தசாரதி, எஸ்.பொ இணைந்து 'பனியும் பனையும்' என்ற முதலாவது சிறுகதைத் தொகுப்பினை வெளியிட்டு புலம் பெயர் இலக்கிய வளர்ச்சிக்கு வித்திட்டனர். அது தொடக்கம் இவ்வாண்டு ஜனவரி மாதம் வெளியிடப்பட்ட 'முகங்கள்' சிறுகதைத் தொகுப்பு கள் வரை பல படைப்புகள் வெளி வந்துள்ளமை புலம்பெயர் இலக்கிய வளர்ச்சி நிலையை எடுத்துக்காட்டுகின்றது.

புலம்பெயர் இலக்கியங்களூடாக அவர்கள் தாம் வாழும் சூழலின் அனுபவங்களையும் தம் சொந்த மண்ணின் நினைவுகளையும் மீட்டிப்பார்க்கின்றனர். எல்லாம் இழந்த பின்னும் சிறுகதையில்

"...நினைவுகள் தழும்பி பல சமயம் அதுவும் அழும். அம்மா, வீடு, ஜிம்மி. என்னை அழவைக்க வேறு எதுவும் தேவையே இல்லை. என் மேல் யார் கை பட்டாலும் பாய்ந்து கடிக்கும் ஜிம்மி. அம்மா சொல்லுவா நீ ஜிம்மி வேணுமெண்டு ஜிம்மிட்ட கடி வாங்கினனி தானே அதனாலதான் உனக்கு ஆர் அடிச்சாலும் அவையளை கடிக்குது எங்கட றோட்டில உள்ள எல்லாரும் சொல்லுகினம்"

"இது நாய் இல்ல கடவுள்"

"ஓம் நானும் அப்பிடியேசொல்லுறன் எண்டு அம்மாவும் சொல்லுவா."

என்று தான் வளர்த்த நாயின் நினைவுகளையே மறக்காத இவர்கள் தம் உறவுகளைப் பற்றிய மீட்டல்கள் கனதியாகவே இருக்கும். புலம்பெயர்ந்து தாம் வாழும் நாட்டில் அனுபவிக்கும் இன்னல்களை 'பனியும் பனையும்' தொடக்கம் 'முகங்கள்' வரையுமான தொகுதி களுடாக எங்களோடு பகிர்ந்து கொள்கின்றனர். உதாரணமாக 'பனியும் பனையும்' தொகுதியின் முகமிழந்த மனிதர்கள் சிறுகதையில்,

"...ஏர்போர்ட் வெள்ளைக்கார இளம் பெண்கள், வண்ண வண்ண வாகனங்கள், உயர்ந்து நின்ற கட்டடங்கள் மத்தியில் பஞ்சுப் பொதிகளிடையே நான் மிதந்து கொண்டிருந்தேன். கட்டிலில் அண்ணாவைக் காணவில்லை. கீழே எட்டிப் பார்த்தேன். வீடு கூட்டிக் கொண்டிருந்தான். சோம்பல் முறித்து விட்டு பல்லுத்தீட்டிய படியே ஜன்னலை மெதுவாய்த் திறந்தேன். நாய்க் கூட்டிற்குள் நுழைந்து யாரோ அது செய்து வைத்திருந்த அசிங்கத்தை சுத்தம் பண்ணிக் கொண்டிருந்தார்கள். அந்தா வெளியால வாறது அது... அண்ணாதான்.

கீழே இறங்கி வந்தேன் அண்ணா கழிவு நீர் வாய்க்காலை சுத்தம் செய்து கொண்டு நின்றான்.

வீட்டிலே சாப்பிட்ட கோப்பை கழுவாத அண்ணா அவர்கள் சாப்பிட்ட கோப்பையைக் கழுவிக் கொண்டிருந்தான்."

என ஆசிரியர் கூறுவதும் 'முகங்கள்' தொகுதியில் 'எல்லாம் இழந்த பின்னும்' சிறுகதையில்,

"பிள்ளைகளை இறுதிக்காலம் வரையும் காணாது ஏக்கத்துடன் இறந்த அத்தனை அம்மாவைப் பற்றிய நினைவுகளும் என்னை ஆக்கிரமித்துக் கொண்டிருக்க. என் கையிலிருந்த பூனையின் கோப்பை என்னை அறியாமலே விழுந்து சிதறியது. ஒருகணம் நடுங்கிப்போனேன் வெள்ளைக்காரியின் உள்ளிருந்து பிடரியைச் சிலுப்பிக் கொண்டு சிங்கம் எழுப்பியது. என் உயிர் சிங்கத்தின் கோரப்பற்களுக்குள் அகப்பட்டுத் துடிக்கும் காட்சி கண்முன்னே விரிந்தது" என்று தொடர்கிறது அக்கதை.

இரு நூற்றாண்டுகளாக அடிப்படையில் ஒத்த கருப்பொருட்களையே கொண்டிருக்கும் புலம்பெயர் படைப்புக்களை எதிர்கால சந்ததியிடமிருந்து எதிர்பார்க்க முடியுமா? இங்குதான் புலம்பெயர் இலக்கியத்தின் வளர்ச்சி தீர்மானிக்கப்பட வேண்டியதாகின்றது.

ஒவ்வொரு படைப்பினூடாகவும், படைப்பாளி, தன் அனுபவங்களைப் பிரசவிக்கின்றான். அவ்வாறு தான் புலம்பெயர் படைப்பாளிகளும் தம் அனுபவங் களைப் படைப்பாக்குகின்றனர். படைப் பாளி தான் அனுபவித்த சொந்த அனுபவங் களையும் தான் வாழும் சமூகத்தில் காணும் அனுபவங்களையும் படைப்பு களுடாக வெளிப்படுத்துவான். புலம்பெயர் தமிழ் இலக்கியங்கள் என நாம் இன்று காண்கின்ற இலக்கியங்களைப் போன்று எதிர்காலத்தில் அதாவது மூன்றாவது தலைமுறையிடம் ஒரு புலம்பெயர் தமிழ் இலக்கியத்தை எதிர்பார்க்கலாமா? என்ற வினா எழுகின்றது. புலம்பெயர் சமூகத்தின் எதிர்கால சந்ததியிடமிருந்து இலக்கியப் படைப்பாளிகள் உருவாகுவார்கள். ஆனால்புலம்பெயர் தமிழ் இலக்கியப் படைப்பாளிகள் உருவாகுவார்களா? என்பது ஐயத்திற்கிடமே. புலம்பெயர் தமிழ் இலக்கியம் என்ற இலக்கியவகை உள்ளடக்கம் மற்றும் வெளிப்படுத்தலுக்கான மொழியால், இவர்களிட மிருந்து விட்டுவிடுதலையாகும் சாத்தியக்கூறுகள் அதிகம். ஏனெனில் புலம்பெயர் தமிழ் இலக்கியத்தில் சொந்த மண் பற்றிய நினைவுகளும் புலம்பெயர் நாட்டில் பெற்ற அனுபவங்களுமே கருப்பொருள். சிறு பராயத்தில் புலம்பெயர்ந்து சென்ற, வெளிநாடுகளில் பிறந்த எம் சந்ததியினருக்கு இவை பற்றய சிந்தனை இருக்காது. இருக்க வேண்டிய அவசியமும் இல்லை. எனினும் புலம்பெயர் தமிழ் படைப்பாளிகளின் படைப்பாக்கத்திற்கான உட்பொருள் வேறுபடினும் அவற்றை வெளிப்படுத்தலுக்கான மொழி நிலையில் விலகி நிற்கவேண்டி ஏற்படும். ஏனெனில் புலம்பெயர் தமிழ்ச்சமூகத்தினரின் தாய் மொழி நிகழ்கால, எதிர்கால சமூகத்திற்கு தாய்மொழியாக இருக்க முடியாது. இன்றுள்ள இலக்கிய ஆர்வலர்களால் தமிழ்மொழி இளந்தலை முறையினர்க்குக் கற்பிக்கப்பட்டாலும் அக்கற்பித்தலூடான அறிவியல் மூலம் தமிழ் மொழியாலான இலக்கியப் படைப்பாக்கத்தினை எதிர்பார்க்கலாமா?

புலம்பெயர் தமிழ்சமூகத்தின் எதிர்கால சமூதாயம் தன் மூதாதையர் பற்றியோ தமது அனுபவங்கள் பற்றியோ படைப்புகளுடாக வெளிக் கொணரும் அவாக் கொண்டிருப்பின் அவர்களின் தாய் மொழியிலேயே படைப்பாக்கப்படும். புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தினரிடம் இங்குள்ள இலக்கிய ஆர்வலர்கள் எதிர்பார்ப்பது, "பிள்ளைகளின் அனுபவங்களை தமிழ் மொழியில் இல்லாவிடினும் அவர்களின் தாய் மொழியிலாயினும் எழுதுங்கள் என உங்கள் இளம் தலை முறைக்குக் கூறுங்கள்" என்கின்றனர். இளந்தலை முறையினர் அவ்வாறு படைப்புக்களை வெளிக் கொணர்வாராயின் அது புலம்பெயர் தமிழ் இலக்கிய மாகக் கொள்ளப்படுமா? அல்லது புலம்பெயர் இலக்கி யம் என்பதற்கு இன்றளவில் கூறப்படும் வரையறை விரிவு பெறுமா? என்பது கேள்விக் குறியே இத்தனை மாற்றங்களைக் கொணர்ந்த கால ஓட்டம் எதிர் காலத்

திலும் இவ்விலக்கியத்துறையிலும் வளர்ச்சி ரீதியான மாற்றங்களை ஏற்படுத்துமென எதிர்பார்க்கலாம்.

புலம் பெயர் தமிழ் சமூகத்தினரின் இலக்கியப் படைப்புகளுக்கப்பால் அவர்களின் இலக்கிய வளர்ச்சியை உறுதிப்படுத்துவதாக, தமிழ் எழுத்தாளர்களை ஒன்றிணைத்து முதலாவது சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு இவ்வாண்டு ஜனவரி மாதம் கொழும்பில் புலம்பெயர் எழுத்தாளர் முருகபூபதி அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டு புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் இலக்கிய தாகத்தை தீர்ப்பதாயமைந்தது. இவ்வாறு வெளிப்படும் புலம் பெயர் தமிழ்ச்சமூகத்தின் இலக்கிய ஆர்வமும் அதனூடான வளர்ச்சியும் எதுவரை என்பது ஐயப்பாடு. இவ் ஐயப்பாட்டின் போது எம் நினைவுகளுக்கு வருவது தமிழ் இலக்கிய வரலாற்றுக் காலப் பகுப்புக்களான இயற்கை நெறிக்கால இலக்கியம், பக்தி இலக்கியக்காலம் என்ற காலப்பகுப்புக்களே. இப்பகுப்பு முறைமையானது அவ்வக்கால இலக்கியங்களில் அதிகமாக எழுச்சி பெற்ற இலக்கியங்களின் அடிப்படையிலேயே இக்காலப் பகுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றைத் தொடர்ந்து பிற்காலங்களில் அற இலக்கியங்களும் பக்தி இலக்கியங்களும் வெளிவருகின்றன. அவ்வாறாயின் இருபதாம் இருபத்தோராம் நூற்றாண்டுகளில் தமிழின் இலக்கிய ரீதியான காலப்பகுப்பில் புலம் பெயர் இலக்கியக்காலம் என்ற பகுப்பு முறையூடாகவே புலம்பெயர்தமிழ் இலக்கிய வளர்ச்சியினையும் நோக்க முடியும்.

---

# நோட்டுக்களின் நோட்டம்


*மதிப்பிறங்கி*
*மரியாதை முகவரியை*
*இழந்து தவிக்கும்*
*மனித உரிமைகளைப்போல*
*கரன்சி நோட்டுக்களின்*
*மதிப்புக்களும்*
*கடுகதிவேகத்தில் சரிந்தபடி!*

*காணாமற் போய்விட்ட*
*நீதியாக*
*சதங்களின் சலசலப்பை*
*உண்டியல்களில் கூட*
*காணமுடியவில்லை*

*துடுப்பாட்டத்தில் மட்டும்*
*சதம் - தனது பெயர்*
*உச்சரிக்கப்படுவதைக் கேட்டு*
*உள்ளூர ஆனந்தப்படுகிறது!*

*ஆனாலும்...*
*"சதத்துக்கு உதவாதவன் என*
*தனது நாமத்தை*
*மோசடிக் காரனுடன் இணைத்து*
*முணுமுணுப்பதை அது*
*முழு மூச்சுடன் ஆட்சேபிக்கிறது!*

*"எனக்கும் ஒரு*
*பொற்காலம் இருந்தது*
*பொருட்களை வாங்கி*
*சனங்கள்*
*புளகாங்கிதம் கொள்ள" என*



*சதம் தனது ஆதி கால*
*பெருமைகளை இரைமீட்டியபடி*
*எங்கோ அறியாத மூலையில்!*

*ஒன்று இரண்டு ஐந்து*
*நோட்டுக்கள்*
*ஒழித்துக் கொண்ட இடம்*
*தேடப்படுகிறது!*
*பத்து இருபது ஐம்பது*
*நூறுடன் ஐந்நூறும்*
*தனது சகோதர உறவுகளின்*
*சங்கட நிலையை*
*எதிர் கொண்டு கலங்கி*
*கசங்கிப் போய் விட்டன!*

*ஆயிரமான மயில் நோட்டின்*
*ஆட்டமும் உரு மாறியபோதும்*
*சந்தைக்குப் போனால்*
*ஒரு பொலித்தீன் பையில்*
*அடக்கமாகி விடுகிறது!*

*அழகழகான*
*நவமானநோட்டுக்கள்*
*உருவத்திலும்... ஏன்*
*உள்ளடக்கத்திலும்*
*உதயமானாலும்...*
*வருங்காலம்*
*இலட்சத்தையும் நோட்டாக்கி*
*இலட்சணத்தை இழந்து*
*நொந்து போகலாம்!*

**- ஷெல்லிதாசன்**



# எத்தனங்கள்

றாதிகா

பல்கலைக்கழகம் வந்து மூன்றாண்டு களாகிறது. அதற்கிடையில் எத்தனையோ காதலர்கள் உருவாகி விட்டநிலையில் இன்னும் நான் ஒரு நண்பியைக் கூடத் தேர்ந்தெடுக்காமல் தனியனாய்...

இவ்வளவு காலமும் இருந்திட்டன் இனித்தான் பிறன்ட்ஸ்சிப்பா?என்னைப் பொறுத்த வரை அது ஏனோ அலட்சியமாகத் தெரிந்தது. இதற்கு என் வீட்டுச் சூழலும் காரணம் என்றே கூறலாம். அநேகமாக வீடு சென்று வருவதெல்லாம் தனியாகத்தான். அதனால் எங்கு தனியாகச் சென்றாலும் சமாளிக்கக் கூடியவளாய் மாறிவிட்டேன். என்னுள் ஒரு துணிச்சல் சுயமாகவே வளர்ந்ததை என்னால் உணரமுடிந்தது. இலகுவான வேலைகளுக்குக் கூட உடனே தம் காதலனுக்கோ ஆண்நண்பனுக்கோ ஏவி விடும் என் வயதொத்த மாணவர்களே என்னுடன் அதிகம் படித்தவர்கள். எனக்கு யாருடனும் பழகத் தெரியாது என்ற எண்ணமே சக மாணவிகளுக்கு உருவாகிவிட்டது. ஏன்? ஒரு நேரம் அன்றி சாப்பாடு இல்லையென்று சொல்லி விட்டால் கூட வெளியில் சென்று எடுக்கத் தெரியாதவர்களாக...

பல்கலைக்கழக விரிவுரை மண்டபம் தவிர எந்தப் படியும் ஏறாதவர்களைப்போலவே அநேகமானோர். ஆனால் எங்கேயும் ஒரு ரோங்நம்பர் கிடைத்து விட்டால் போதும் தொப்புள் கொடி உறவு போன்று அவர்கள் செவிகளில் தொங்கும் 'கெட்செற்'.

ஏன் இப்படி இருக்கிறார்கள்?

பல்கலைக்கழகம் என்பதற்காக இப்படித்தான் இருக்க வேண்டுமா?

பணம் இருந்தால் இப்படித்தான் செலவழிக்க வேண்டுமா?

இறுதி வரை நான் விடை காண முடியாத வினாவாக என்னுள் இருக்கிறது. ஏன்? வீண் வம்பு பேசுவதைக் கேட்டு அலுத்துக் கொண்ட கல்லாசனங்கள் மௌனமாய்ப் படிப்பதைக் கிரகிக்கும் நூலகச் சுவர்கள் மீது பொறாமை கொள்ளும். பொறாமையின் வெளிப்பாடாக "நீ ஒரு புத்தகப் பூச்சி" என்று திட்டுவதில் அவை ஓர் ஆத்ம திருப்தியையும் கண்டன.

"ராஜிக்கு ஆக்களோட பழகத் தெரியாது ஒரு நோட்ஸ் கூட தரமாட்டாள். தனியாக படிச்சு கிளாஸ் அடிக்க வேணும் என்ற நினைப்பு. சாமம் இரண்டு, மூன்று மணிக்கெல்லாம் எழும்பிப் படிப்பாளாம்."

என்னைப் பற்றி அவர்கள் இப்படிக் கதைத்துக் கொள்வது என் செவிகளுக்கு எட்டும். நான் ஒருபோதும் நானாகச் சென்று இப்படிப் படியுங்கள் இதை வாசித்தால் எங்கள் பாடங்களுக்கு உதவும் என்று கூறுவதில்லை. ஏன்? முதலாம் வருடத்தில் குறூப் ஸ்ரடி என்று சொல்லி கும்மாளம் அடித்தது எனக்கு அத்துப்படி. என்ன செய்வது? தனியாக ஒருஅறை எடுத்துப் படிப்பதற்கும் எனக்கு வசதி இல்லை. நானாக விலகி இருப்பதே எனக்கு நல்லதாகப்பட்டது.

அவர்களைப் போலவே என்னோடும் என் கல்வியோடும் போட்டி போடும் வறுமை இப்போது என் தங்கச்சியையும் பதம் பார்க்க ஆரம்பித்திருப்பது அவளுடைய மருத்துவப் படிப்புக்குத் தேவையான செலவுகளை எண்ணும் போது தெளிவாகியது. யூனிவசிற்றிக்கு வரமுதல் படிப்புச் செலவை நினைச்சு நானும் கொஞ்சம் பயந்தனான்தான். அப்போதெல்லாம் வறுமை என் நிரந்தரப் பகைவனாகிவிடும். நல்ல நண்பரைவிட பகைவர் மூலம்தான் நாம் முன்னேற முடியும் என்ற உண்மை என் வாழ் விலும் நிஜமாகிக் கொண்டிருக்கிறது. வறுமை என்னை நேரடியாகத் துன்பப்படுத்தினாலும் அதன் ஆழ்மனம் என்னை முன்னேற்ற வேண்டும் என்று துடித்தது. இன்று நான் கற்பிக்கும் மாணவச் செல்வங்கள் மூலம் தெரிந்தது. என் கிராமத்தில்

உள்ள மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக நான் 'ரியூசன்' வகுப்பு எடுப்பதன் மூலம் எனக்கும் சிறிது வருமானம் கிடைத்தது. வார இறுதி நாட்களில் நான் றூமில் நின்று செலவழிப்பதை விட வீட்டிற்குச் சென்று வருவது எல்லா வகையிலும் நன்மையாய்த் தெரிந்தது. நான் கற்பிக்கத் தொடங்கி ஒருவருடமாகிறது. இருபத்தைந்து பிள்ளைகளுக்கு நான் நன்றாகக் கற்பித்து வருகிறேன் என்ற நம்பிக்கை, அதிகரித்துவரும் அவர்களது பரீட்சைப் புள்ளிகளில் உறுதியாகும்.

என் இப்போதைய இலட்சியமெல்லாம் மருத்துவபீடத்திற்குத் தெரிவாகியிருக்கும் தங்கச்சியைப் படிப்பிக்க வேண்டும் என்பதே.

* * *

என் சிந்தனையோட்டத்தினால் இன்றைய பயணம் வழமைக்கு மாறாக ஒருமணித்தியாலமள விற்கு நீடித்ததும் தெரியவில்லை. வீட்டிற்கு வர ஆறு மணிக்கும் மேலாகி விட்டது. சமையலறைக்குச் சென்ற எனக்கு அன்றைய தினம் சமையல் நடை பெறாததை ஒழுங்காக அடுக்கிவைக்கப்பட்டிருந்த சமையற் பாத்தி ரங்கள் பறைசாற்றின. அம்மாவைக் காணவில்லை.

"தேனு! அம்மா எங்க?"

"அக்கா வந்திட்டியா?"

திருப்தியாகச் சாப்பிடாத களை அவள் முகத்திலும் தெரிந்தது.

"ராசன் அங்கிள், வீட்ட வெங்காயம் ஆய வரச் சொன்னவர் அதுதான் போயிட்டா."

"என்ன! ராசன் அங்கிள் வீட்டயோ? அவரின்ர மகள் என்ரை 'பச் மேற்' எண்டு தெரியாதா?" அவள் கதைக்கிற கொழுப்புக் கதையளுக்கு இன்னும் எண்ணெய் ஊத்துற மாதிரி."

வந்த களை தீராது கண்ணீர் வழிய நின்றேன்.

"அப்பாவுக்கும் நாலு நாளா வேலை இல்ல அக்கா அங்கிள் வந்து கேட்டாப் போல போனவ நெடுகலும் இல்லத்தானே."

களைப்பு நீங்க முகத்தைக் கழுவிக் கொண்டி ருந்த எனக்கு அவள் வார்த்தைகள் மனதை ஆற்றுப் படுத்தினாலும் மறுபுறம் உள்ளத்தைக் கத்தியால் குத்திக் கழித்தது போன்றிருந்தது எனதும் என்குடும்ப நிலையும்.

இரண்டு மாதமாகக் கொடுத்து முடிக்கப்படாத சாப்பாட்டு அன்ரியின் பணத்தை இந்த மாதத்துடன் கொடுத்து முடிக்கலாம் என்ற நினைப்பு அலாரமாய் அடித்துக் கொண்டிருக்க, அம்மா வேலைக்குப் போனது சரியாகப்பட்டது. "துவாரகா வந்து ஒன்றும் சொல்லாமல் விட்டாச் சரி.சொன்னாலும் என்ன? அம்மா ஏதேன் களவெடுக்கவா போனவ?"

பஸ்சில் வாசித்து முடிக்கப்படாத புத்தகத்தை படுத்திருந்தே வாசித்த நான் எப்போது தூங்கிப் போனேன் என்று தெரியவில்லை. ஜன்னலூடாக மெதுவாய் எட்டிப் பார்த்த போதுதான் இரவு சாப்பிடாமலே தூங்கியது நினைவிற்கு வந்தது.

வீட்டு வேலைகளைச் செய்து முடித்து வகுப்பிற்கு ஆயதமாகியபோது, அம்மா காலைச் சாப்பாட்டுடன்...

வீட்டிற்கு வரும் போதெல்லாம் பிட்டும் சீனியும் சாப்பிட்ட எனக்கு இன்று பிட்டும் வெங்காயப் பொரியலும் அதனோடு சேர்த்து பொரித்த மிளகாயும் சாப்பிட நன்றாக இருந்தது.

பிள்ளைகள் வகுப்பிற்கு வரத் தொடங்கவே நானும் வகுப்பிற்கு ஆயத்தமானேன். இன்று ஐந்து புதிய மாணவர்கள் வந்திருந்தார்கள்.

"ரீச்சர் நல்லா படிப்பிக்கிறீங்க என்று வீட்ட சொன்னவ."வேணுஜா கீச்சிட்டாள்.

"ரீச்சர் நீங்க ஒவ்வொரு நாளும் படிப்பிப்பீங்களா? இது சாருவின் கேள்வி.

"ரீச்சரும் படிக்க வேணும். நீங்க ஐஞ்சாம் ஆண்டுக்கு வர நான் உங்களுக்கு ஒவ்வொரு நாளும் கிளாஸ் எடுப்பன்."

அவர்களோடு உரையாடிக்கொண்டிருக்கவே வீட்டுப் படலையில் யாரோ அழைத்தது கேட்டது. வேணுஜாவின் அப்பா ஆட்டோவில் பெட்டிகளோடு…..

"ராஜி எங்கட கிராமத்துக்கே நீங்க எடுத்துக் காட்டா இருக்கிறீங்கள். வேணுஜா இப்போதெல்லாம் புத்தகத்தோடதான். நல்லாப் படிக்கிறாள்.இந்தக் காலத்தில கொம்பியூட்டரும் தேவையாயிருக்கு கிழம நாட்களில உங்கட தங்கச்சி கொம்பியூட்டரப் படிப்பிக் கலாம். சின்னப் பிள்ளையள விட பெரியாக்களுக்கு முக்கியம். உங்களுக்கும் ஒரு வருமானம்தானே. இப்படி ஊக்கமான பிள்ளையள நாங்கதான் ஊக்கப் படுத்த வேணும் எதுக்குமே ஒரு எத்தனம் தேவைதான்."


என்னை ஒரு மாதிரியாகப் பார்க்கும் என் சக மாணவிகளும், அவர்களைப் போலவே என்னைத் துன்பப்படுத்தும் வறுமையும் என் முன்னேற்றத்துக்கான எத்தனங்களாய் என்னுள் ஓடிக்கொண்டிருந்த போது அங்கிளின் வார்த்தைகளும் எத்தனம் தான் என்றன.

சீனி வாங்கக் கடைக்குச் சென்ற தங்கச்சி வரும்வரை ஒருவாறாய் அங்கிளோடு கதைத்துக் கொண்டிருந்த நான் சமையலறையில் தேநீர் எடுத்து வரச்சென்றபோது,

"கடைக்கார அங்கிள் கடன் முடிக்கேல்லயெண்டு கடன் தர மாட்டாராம்."

தங்கச்சி மெதுவாய்க் கூறிக் கொண்டிருந்தாள். சுவரோடு ஒட்டியவாறு கண்ணீர் நிறைந்த முகத்துடன் இருந்த அம்மாவின் அருகில், என்னை மொய்த்துக் கிடந்த வறுமையைப் போல் எறும்புகளால் ஆக்கிரமிக் கப்பட்டிருந்த சீனிப்போத்தலும் உருண்டு கொண்டு கிடந்தது.

# எனது இலக்கியத் தடம்



15

தி.ஞானசேகரன்

## 1996ல் வெளிவந்த சிறந்த நாவலுக்கான 'விபவி' சுதந்திர இலக்கிய விழா விருதினைப் பெற்ற 'கவ்வாத்து'

மலையகத்தின் பிரபல எழுத்தாளரான சாரல்நாடன் 1994ல் நான் தொழில் புரிந்துகொண்டிருந்த 'நியூபீகொக்' பெருந்தோட்டத்திற்கு தேயிலைத் தொழிற்சாலைப் பொறுப்பதிகாரியாக மாற்றலாகி வந்தார் என்பதனையும் அவரது தூண்டுதலாலேயே 'லயத்துச் சிறைகள்' என்ற நாவலை நான் எழுதியதாகவும் சென்ற அத்தியாயத்தில் குறிப்பிட்டிருந்தேன்.

அத்தகையதொரு தூண்டுதல் முயற்சி மீண்டும் இடம் பெற்றது. இலங்கை தேசிய கலை இலக்கியப் பேரவையும் தமிழக 'சுபமங்களா' இதழும் இணைந்து இலங்கை எழுத்தாளர்களுக்கென ஒரு குறுநாவல் போட்டியை நடத்தியது. அதற்கான விளம்பரத்தை சாரல்நாடன் என்னிடம் காட்டி, "நீங்கள் இந்தப் போட்டியில் பங்குபற்றவேண்டும். அதற்காக மலையகப் பின்னணியில் ஒரு குறுநாவலை எழுத வேண்டும்" என்றார். அத்தோடு தானும் இந்தப் போட்டிக்கு எழுதப்போவதாகவும் எழுத்தாள நண்பர்களான புலோலியூர் க. சதாசிவம், மல்லிகை சி. குமார் ஆகியோருக்கும் வேறுசில எழுத்தாளர்களுக்கும் இந்தப் போட்டிவிதிகளை அனுப்பி அவர்களையும் போட்டியில் கலந்து கொள்ளுமாறு தான் கேட்டிருப்பதாகவும் எப்படியும் மலையகத்தைப் பிரதிபலிக்கும் ஒரு குறுநாவலாவது இந்தப் போட்டியில் பரிசு பெற்று மலையகத்துக்குப் பெருமை சேர்க்கவேண்டுமெனத் தான் விரும்புவதாகவும் குறிப்பிட்டார்.

போட்டியில் பத்துக் குறுநாவல்களுக்குப் பரிசளிப்பதாக அறிவித்திருந்தார்கள். எனவே முயற்சி செய்தால் பரிசுபெறும் வாய்ப்பும் அதிகமுள்ளது எனவும் உற்சாகமூட்டினார்.

அவரது வேண்டுகோளை நான் ஏற்றுக் கொண்டேன். ஆனால் எதைப்பற்றி எழுதுவது?

மலையகத்தில் நான் தொழில் செய்த காலத்தில் குள்ளநரிபோன்று காரியமாற்றும் ஓர் உத்தியோகத்தரைக் கவனித்து வந்திருக்கிறேன். அவர் ஒரு 'கண்டக்டர்'. தோட்டத் தொழிலாளர்களின் வார்த்தைகளில் கூறுவதானால் "கண்டாக்கையா". தோட்டத்தின் ஒரு டிவிசனுக்கு அவர் பொறுப்பாக விருந்தார். அந்த டிவிசனில் இடம்பெறும் சகலவேலைகளும் அவரது பொறுப்பிலேதான் நடைபெறும்.

மலையில் தேயிலைச் செடிகளை நாட்டுதல், முள்ளுக் குத்துதல், புல்லுப் புடுங்குதல், உரம்போடுதல், கொழுந்தெடுத்தல், கவ்வாத்து வெட்டுதல் போன்ற இன்னும் பலவேலைகள் அவரது பொறுப்பிலே நடைபெறும். தோட்டத்துரைக்கு இவர் வலக்கரம் போல் இயங்குவார். துரையும் இவர் சொல்வதைத்தான் கேட்பார்.

இவரைப் பகைத்துக்கொண்டு தொழிலாளர் எவரும் தோட்டத்தில் இருக்க முடியாது. இவர் நினைத்தால் வேலை செய்த ஒரு தொழிலாளிக்கு அவரது வேலையில் குற்றம் கண்டுபிடித்து "பேர்" நிற்பாட்டலாம். அதாவது அன்றைய வேதனத்தை இல்லாமல் செய்து விடலாம். அவர் நினைத்தால் வேலைக்கு வராத ஒருவருக்குப் பேர் போடலாம். அதாவது வேலைக்கு வராத ஒருவருக்கு வேதனம் கிடைக்கச் செய்யலாம். தனது கையாட்களாக இயங்கும் தொழிலாளர்களுக்கு சுலபமான வேலைகளைக் கொடுக்கலாம். ஏனையோருக்கு கடினமான வேலைகளைக் கொடுத்துக் கஷ்டப் படுத்தலாம். இவர், தான் நினைத்தவற்றையே செய்வார். தொழிலாளர்களின் ஒற்றுமையைக் குலைத்துச் சின்னாபின்னமாக்குவார். அவர்களைச் சிறு சிறு குழுக்களாக இயங்கச் செய்வார். பிரித்தாளும் தந்திரத்தில் மகா சூரனாக இருப்பார்.

இவருக்கு ஐந்தாம் படையொன்றும் தொழிலாளர்களுடையே இயங்கும். லயத்தில் இவருக்கெதிரான அல்லது நிர்வாகத்திற் கெதிரான சதியேதும் நடந்தால் உடனுக்குடன் அவருக்குத் தகவல் வந்துவிடும். தோட்டத்தில் ஒரு தொழிற்சங்கம் மட்டுமே இருந்தால் அதனைப் பிளவு படுத்தி பல தொழிற்சங்கங்கள் தோன்றுவதற்கு வகைசெய்வதோடு தொழிற் சங்கங்களிடையே போட்டிபொறாமைகளையும் ஏற்படுத்திவிடுவார்.

தோட்டத்துரைக்கு தொழிலாளர்களின் நடவடிக்கைகள் பற்றிக் கூறுபவரும் இவர்தான். தோட்டம் அமைதியாக இயங்கிக்கொண்டிருந்தாலும், தொழி லாளர்கள் வேலைநிறுத்தத்தில் குதிக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாகவும் அதனை முன்கூட்டியே முறியடிக்கத் தான் முயற்சிகள் மேற்கொண்டி ருப்பதாகவும் கூறி துரையைக் கலங்கடிக்கக் கூடிய வல்லமையும் இவருக்கு உண்டு.

தோட்டத்தில் வேலை நிறுத்தம் ஏற்பட்டால் அதனை முறியடிக்கக் கூடிய வல்லோன் இவர் என்பதால் துரையும் இவருக்கு மடக்கம்!

எனக்குப் பரிச்சயமான கண்டக்டர் பற்றியே மேலே குறிப்பிட்டேன். இத்தகைய உத்தியோகத்தர்கள் சகலதோட்டங்களிலும் இருப்பார்கள். இவர்கள் தொழிலாளர்களின் ஒற்றுமையைக் குலைத்துக் கொண்டே இருப்பார்கள். இலாபகரமாகத் தோட்டத்தை நடத்துவதற்கும் தங்களுடைய இருப்பைத் தக்க வைக்கவும் இத்தகைய இயக்கம் இன்றியமையாதது என்று இவர்கள் கருதுகிறார்கள்.

சில சிறிய டிவிசன்களில் கண்டக்டர் என்ற பதவி இருக்காது. அதற்குப் பதிலாக கணக்குப்பிள்ளை இருப்பார். கணக்குப்பிள்ளையும் இத்தகைய இயல்புடை யவராகவே இருப்பார்.

இப்படியான ஒரு சூழ்நிலையில் தோட்டங் களில் ஏற்படும் வேலை நிறுத்தங்கள் பெரும்பாலும் தோல்வியிலேயே முடிந்துவிடுகின்றன. இதன்காரண மாக நீண்டகாலமாகத் தோட்டத்தொழிலாளர்கள் எதிர்நோக்கும் சம்பளப் பற்றாக்குறை, வேலைநாட்கள் குறைப்பு, வீட்டுப் பிரச்சினை, சுகாதாரப்பிரச்சினை போன்றவற்றிற்கு தீர்வுகாணமுடியாமல் பின்னடைவுகள் தொடர்ந்தவண்ணம் இருக்கின்றன.

தோட்டங்களிலே ஏன் புதிய சங்கங்கள் தோன்றுகின்றன? தோட்டத் தொழிற்சங்கங்களிடையே ஏன் போட்டி பூசல்கள் தோன்றுகின்றன? அதனால் தொழிலாளர்களுக்கு ஏற்படுகின்ற பின்னடைவுகள் யாவை? இந்தப் பிரச்சினைகளின் ஆணிவேர் எது? இவற்றுக்கான காரண காரியத்தொடர்புகளை ஆராய்ந்து அவற்றை வெளிக்கொணரும் வகையில் குறுநாவலை எழுத முடிவு செய்தேன்.

இந்தப் பின்னணியில் எழுதப்பட்டதே "கவ்வாத்து" என்ற குறுநாவல்.

"கவ்வாத்து" என்றால் என்ன?

இதனை விளங்கிக் கொள்வதற்கு மலைய கத்தின் மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் இந்தக் குறுநாவலுக்கு எழுதிய விமர்சனத்தின் ஒருபகுதியைக் கீழே தருகிறேன்:

"கவ்வாத்து" என்பது தேயிலையின் வளர்ச்சியை பயன்கருதி வெட்டிவிடுதல்.

கவ்வாத்து வெட்டப்படாவிட்டால் தேயிலைச் செடி தென்னை பலா மரங்கள் போல் வானொட்ட வளர்ந்து நிற்கும். வான்முட்ட தேயிலைச் செடி வளர்ந் தால் அல்லது வளர விட்டால் என்னவாகும்? எந்தக் குறிக்கோளுக்காக அது பயிரிடப்பட்டதோ அது இழக்கப் படும். அதே போல் தேயிலையில் பாடுபடும் இந்தத் தொழிலாளர் கூட்டத்தையும் மற்றவர்களைப் போல வளர விட்டால் என்னவாகும்? அவர்களும் கைக் கடங்கியே இருக்க வேண்டும். அப்போதுதான் பிரயோசனப்படுவார்கள் என்பது அவர்களிடம் வேலை வாங்குபவர்களின் எதிர்பார்ப்பு.

தங்களது பயன் கருதி வளர்ச்சியைக் கத்திரிக்கும் ஒரு செயலைக் குறியீடாகக் கொண்டே இந்த நாவலுக்கான பிரச்சினை கவ்வாத்து மலையில் உருவாகிறதாக ஆசிரியர் சித்திரித்திருக்கக் கூடும் என்று நான் கருதுகிறேன்.

"கவ்வாத்து" என்னும் இச்சிறு நாவல் முதலாளித்துவம் அதனுடைய வாழ்வை நீடித்துக் கொள்வதற்காக தொழிற்சங்கப் பேதங்களைப் பயன்படுத்தி தங்கள் உரிமைக்காகப் போராடுவதற்காக அணிதிரளும் மக்களை, அவர்களுடைய ஒற்றுமையை குலைத்துவிடும் யுக்தியைக் காட்டுகிறது... (39)என எழுதிச் செல்கிறார்.

1935ல் தொழிற்சங்கச் சட்டம் மலையகத்தில் அமுலுக்கு வந்தபோதும், தோட்டங்களில் தொழிற் சங்கங்களை அனுமதிக்க அப்போதிருந்த வெள்ளைக் காரத் துரைமார் அனுமதிக்கத் தயாராய் இல்லை. மலையக எழுத்தாளர் சி. வி வேலுப்பிள்ளை "வீடற்ற வன்" என்றொரு நாவல் எழுதியிருக்கிறார். அந்த நாவ லில் தொழிற்சங்கங்களை இவர்கள் எவ்வாறு முளை யிலே கிள்ளிவிட்டார்கள் என்பதனைக் காண்கிறோம்.

கவ்வாத்து நாவலில் எவ்வாறு தொழிற் சங்கங்களைப் பெருக்கி தொழிலாளர்களிடையே அவர்களது வேற்றுமைகளைக் கட்டி எழுப்பி போட்டி பூசல்களை உண்டாக்கி சம்பந்தப் பட்ட மக்களின் பலத்தை வலுவிழக்கச் செய்து போராட்ட உணர்வினை மழுங்கச் செய்து அடிப்படை உரிமைகளையே இழக்க வழிகோலும் அவலத்தைக் காண்கிறோம்.

நீண்ட நெடுங்காலமாகவே தோட்டத் தொழி லாளர்களை அடிமைகளாகக் கருதுவதும் அவர்களைப் பலவழிகளிலும் சுரண்டுவதும் மனிதாபிமானமற்ற முறைகளில் நடத்துவதும், அவர்களது வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடும் முயற்சிகளும் நடந்துவந்திருக் கின்றன என்பதை மலையகப்படைப்புகள் காட்டுகின்றன.

ஒரு காலகட்டத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து சென்றவர்களே தேயிலைத்தோட்டங்களில் அதிகமான முக்கிய பதவிகளில் இருந்திருக்கிறார்கள்.

"யாழ்ப்பாணத்து மண் காலை மட்டுமே சுடும்; மனிதர்கள் மனதையே சுடுவார்கள்" என்று கலைமகளில் வெளியான 'பாபசங்கீர்த்தனம்' என்ற சிறுகதையில் எழுதியிருக்கிறார் தெளிவத்தை ஜோசப்.

'சோதனை' என்ற மல்லிகைக் கதையில் யாழ்ப்பாணத்து வாத்தி தோட்டத்துச் சிறார்களின் கல்வியை எவ்வாறு மழுங்கடிக்கிறார் என எழுதியிருக்கிறார்.

தெளிவத்தை இவற்றை எழுதும்போது யாழ்ப்பாணத்துக்கு வந்திருக்கவில்லை. தோட்டத்தில் யாழ்ப்பாணத்து உத்தியோகத்தர்களின் செயற்பாடு களைக் கவனித்துவிட்டே எழுதியிருக்கிறார். அவர் முதன்முதலில் யாழ்ப்பாணத்திற்கு வந்தது, தனது முதலாவது சிறுகதைத் தொகுதியான "நாம் இருக்கும் நாடே..." சிறுகதைத் தொகுதியின் வெளியீட்டின் போதுதான். கவிஞர் இ.முருகையன் தலைமையில் நடைபெற்ற அவ்விழாவில் பேராசிரியர் கைலாசபதி விமர்சன உரை நிகழ்த்துகையில் "யாழ்ப்பாணத்து வாத்தி தெளிவத்தைக்கு வில்லன்" எனக் குறிப்பிட்டா ராம். தொடர்ந்து பேசிய டொமினிக் ஜீவா, அதனை மறுதலித்து "யாழ்ப்பாணத்து வாத்தி தெளிவத்தைக்கு மட்டுமல்ல எங்களுக்கும் வில்லன்தான். உழைக்கும் மக்களுக்கும் வில்லன்தான்" என ஆணித்தரமாகக் கூறியதாக அறிய முடிகிறது.(40)

ஜோசப் ஆரம்பத்தில் தெளிவத்தை என்னும் தோட்டத்தில் ஆசிரியராக இருந்தவர். இதன் காரண மாகவே தனது பெயருடன் தெளிவத்தையையும் இணைத்துக் கொண்டவர். தோட்டத்து வாத்தியாராக இவர் இருந்த காலத்தில் எழுதிய கதைகள், தோட்டத்து மக்கள் பற்றிய இவரது படைப்புகள் அந்த மக்களைச் சீண்டிச் சீற்றம் கொள்ளச் செய்தன. உத்தியோகத்தர்கள் பற்றிய கதைகள் அவர்களை முகம் திருப்பிக்கொள்ள வைத்தன. தெளிவத்தையில் இருக்க முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டதால் 1964ல் கொழும்புக்கு வந்து சேர்ந்தார் ஜோசப்.(41)

இன்னுமொரு உதாரணத்தையும் பார்க்கலாம்..

யாழ்ப்பாணம் மகாஜனாக் கல்லூரியில் கல்வி கற்று பின்னர் 1941ல் ஈழகேசரி பத்திரிகை ஆசிரியர் களில் ஒருவராக இருந்த அ.செ.முருகானந்தன் "காளி முத்துவின் பிரஜாவுரிமை" என்றொரு மலையகச் சிறுகதை எழுதியிருக்கிறார். அதில் கீழ்க்கண்டவாறு ஒரு பந்தி வருகிறது:

"ஐயா எனக்கு ஒரு குழந்தை பிறந்திருக்கு. கருப்பையா என்று பெயர் வச்சிருக்கோம். எழுதிக் கொள்ளுங்கோ எஜமான்" என்று தோட்டசூப்ரன்டன் கந்தோரில்போய் ஆசையோடு (காளிமுத்து) சொல்லும்போதே, அங்கிருக்கும் யாழ்ப்பாணத்துக் கிளார்க் துரை "என்னடா அது, கருப்பு ஐயா? எப்போடா ஐயாவானே? சின்ன காளிமுத்து என்று சொல்லடா என்று அதட்டி, 'சி.கா.' மட்டும்போட்டு விஷயத்தை முடித்துவிடுவார். இந்த நிர்வாக லட்சணத்தில் அங்கே பிறப்புப் பத்திரங்களா இருக்கும். ஆனால் பதிவு உத்தியோகத்தர்கள் என்னவோ பிறப்புப் பத்திரங்களைக் கேட்கத்தான் செய்கிறார்கள். அத்தாட்சி கொண்டுவா என்று கூச்சல்போடத்தான் போட்டார்கள்"(42)

இது யாழ்ப்பாணத்து எழுத்தாளர் ஒருவரின் பார்வை.

தோட்டங்களில் முன்னர் வெள்ளைக்காரத் துரைமார் இருந்தார்கள். இப்போ கறுப்புத் துரைமார் இருக்கிறார்கள். முன்பு யாழ்ப்பாணத்து உத்தியோகத் தர்கள் இருந்தார்கள். இப்போ மண்ணின் மைந்தர்கள் இருக்கிறார்கள். ஆனால் தொழிலாளர்களோ அன்றும் இன்றும் 'கிள்ளுக் கீரை'களாகத்தான் இருக்கிறார்கள்.

சுபமங்களா நடத்திய போட்டியில் கவ்வாத்து குறுநாவலுக்கு பாராட்டுப் பரிசு கிடைத்தது. சாரல் நாடனின் தூண்டுதல்தான் இந்தக் குறுநாவலை எழுத வைத்தது என்பதை ஆரம்பத்திலேயே குறிப்பிட்டேன். சாரல்நாடனுடைய தொடர்பு பரஸ்பரம் எங்களிருவ ருக்கும் நன்மை அளித்திருக்கிறது என்றே கருதுகிறேன்.

அவர் ஞானம் 24ஆவது இதழில் எழுதிய "எனது எழுத்துலகம்" என்ற கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: "என்னுடைய புசல்லாவை வாழ்க்கை மிகக் குறுகிய ஒன்று. வெறும் பத்துமாத வாழ்க்கை. ஆனால் எழுத்துலகில் அது எனக்குப் பெரிய வெற்றியாக அமைந்தது. ஞானசேகரனுடன் நெருங்கிப் பழகிட அது வாய்ப்பளித்தது. தினந்தோறும் மாலையில் ஒன்றாக இருந்து இலக்கியம் பற்றிப் பேசிய அனுபவம் அதற்கு முன்பும்சரி பின்னாலும் சரி எனக்குக் கிடைக்க வில்லை."(43) எனக் குறிப்பிட்டுள்ளார்.

சாரல்நாடன் புசல்லாவை நியூபீகொக் தோட்டத்தில் இருந்த பத்தே மாதத்தில் அவரின் தூண்டுதலால் ஒரு நாவலையும் ஒரு குறுநாவலையும் எழுதியிருக்கிறேன் என்பதை இப்போது எண்ணிப் பார்க்கும்போது பெருவியப்பாக இருக்கிறது.

அடுத்த வருடத்தில் கவ்வாத்து குறுநாவலை நூலாக்கும் சந்தர்ப்பம் எனக்கு ஏற்பட்டது.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் அதனது ஆண்டுவிழாவொன்றினைப் பெரிய அளவில் கொண்டாட ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தது. அந்த விழாவுக்கு இந்திய சாகித்திய அகடமி விருதுபெற்ற நாவலாசிரியர் பொன்னீலன், தமிழகத்தின் மூத்த எழுத்தாளர் வல்லிக்கண்ணன், தாமரை ஆசிரியர் எஸ். மகேந்திரன் ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர். அதே காலப்பகுதியில் மலையகக் கலை இலக்கியப் பேரவை யினர் தமது பதினைந்தாவது ஆண்டுவிழாவைக்

கண்டியில் கொண்டாட ஆயத்தங்களை மேற்கொண்டிருந்தனர். அந்த விழாவுக்கு மேலே குறிப்பிட்ட எழுத்தாளர்களையும் அழைப்பதென முடிவு செய்திருந்தனர். அந்த விழாவிலே கவ்வாத்து நாவலை மலையக வெளியீட்டகத்தின் பதினைந்தாவது வெளியீடாக வெளிக்கொணரவேண்டுமென மலையக வெளியீட்டகத்தின் அமைப்பாளர் அந்தனி ஜீவா விரும்பினார்.

அத்தோடு மேலும் ஒரு விருப்பத்தை அவர் தெரிவித்தார். கவ்வாத்து குறுநாவலுக்கு பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களிடம் முன்னுரை வாங்கினால் சிறப்பாக இருக்கும் என்றார்.

நான் சிறிது தயங்கினேன். பேராசிரியருடன் அக்காலப்பகுதியில் எனக்கு முகப்பழக்கம்கூட இருக்கவில்லை. எனவே முடிந்தால் நீங்களே அவரிடம் முன்னுரையை வாங்கி நூலில் சேர்த்துக்கொள்ளுங்கள் என அந்தனி ஜீவாவிடம் அந்தப் பொறுப்பை விட்டுவிட்டேன்.

கவ்வாத்து குறுநாவலுக்கு பேராசிரியர் எழுதிய முகவுரையின் முக்கிய பகுதி பின்வருமாறு அமைகிறது:

திரு. ஞானசேகரன் மலையகத்துக்கு அப்பாலானவர் என்றாலும் கடந்த முப்பது ஆண்டுகள் காலமாக மலையகத்துக்குள்ளேயே இருப்பவர். அவர் நோக்கு இயல்பான "உள்நிலை"ப் பார்வையாக மாறியுள்ளது.

திரு. ஞானசேகரனின் இந்தக் குறுநாவல், மலையகப் பெருந்தோட்டத் தமிழர் எதிர்நோக்கும் ஒரு முக்கிய பிரச்சினையை நோக்குகிறது. அது தொழிற் சங்கங்களின் பயன்பாடு என்பதாகும். எந்தத் தொழிற் சங்க இயக்கம் அவர்கள் சமூக – பொருளாதாரத் தனித்துவங்களை உணர்ந்து அவர்களின் "நல்" வாழ்க்கைக்குப் போராடிற்றோ, இன்று அதே அந்த மக்களின் ஒற்றுமையின்மைக்கு வழிவகுக்கும் சமூகக்கருவியாக மாறியுள்ள நிலைமையை இந்தக் குறுநாவலிலே காண்கிறோம்.

மலையகப் பெருந்தோட்டத் தமிழ் மக்களை எதிர்நோக்கி நிற்கும்(இன்றைய) மிகப்பெரிய சவால் இது. இந்த நிலைமை தொழிற் சங்கங்கள் சுயவிமர்சனத்தில் ஈடுபடவேண்டிய ஒரு தேவையை முன் வைக்கிறது.

இத்துடன் இன்னுமொரு சிக்கலும் உள்ளது. மலையகத் தமிழரிடையேயுள்ள "மேலோங்கிகள்" (elites) எவ்வாறு நடந்துகொள்கிறார்கள் என்பது. அந்த மேலோங்கிகள் கங்காணி மட்டத்தினராக இருக்கலாம். அல்லது உத்தியோக மட்டத்தினராக இருக்கலாம்.

இந்தப் பிரச்சினையின் ஒரு வெட்டுமுகத்தை, ஒரு வன்மையான முனைப்புடன் இப்படைப்புத் தருகின்றது"(44) என எழுதிச் செல்கிறார்.

இந்தக் குறுநாவலின் வெளியீட்டுவிழா 13-07- 1996 அன்று மலையகக் கலை இலக்கியப் பேரவையின் பதினைந்தாவது ஆண்டு விழாவின்போது இடம்பெற்றது. கலாசார சமய விவகார அமைச்சர் மாண்புமிகு லக்ஷ்மன் ஜெயக்கொடி அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மூத்த எழுத்தாளர் வல்லிக்கண்ணன், தாமரை ஆசிரியர் எஸ். மகேந்திரன் ஆகியோர் முன்னிலையில் இந்திய சாகித்திய அகடமி விருதுபெற்ற நாவலாசிரியர் பொன்னீலன் இந்தக் குறுநாவல் பற்றிய விமர்சன உரை நிகழ்த்தி வெளியிட்டு வைத்தார்.

பொன்னீலனின் விமர்சன உரையின் முக்கிய பகுதி பின்வருமாறு அமைகிறது:

"கவ்வாத்து என்ற குறுநாவல் மலையக மக்கள் – பெருந்தோட்டத் தொழிலாளர்கள் எப்படிச் சிறைக்குள்ளே எலிகளைப்போல சிக்கித் தவிக்கிறார்கள் என்பதைச் சொல்லுகின்ற ஒரு நாவலாக அமைந்திருக்கிறது. இதனைப் படித்தபோது எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.

இந்த நாவலின் இரண்டாவது கட்டம் ஒரு தொழிற்சங்கம் பல சங்கங்களாக உடைந்துபோகும் போது மக்கள் எப்படி அல்லற்படுகிறார்கள் என்பதை அற்புதமாகச் சொல்கிறது. ஒரு சங்கம் இருந்த இடத்தில் இப்போது மூன்று சங்கங்கள் தோன்றிவிட்டன. ஒரு சங்கம் நிர்வாகம் சார்ந்த சங்கம். ஒரு சங்கம் உதவாக்கரைச் சங்கம். ஒரு சங்கம் ஆளில்லாச் சங்கம். இப்போது எதைவைத்துப் போராடுவது? என்னசெய்வதென்று தெரியாமல் தொழிலாளர்கள் திகைக்கின்றனர் என்ற இரண்டாவது கட்ட யதார்த்தத்தை இந்த நாவல் அருமையாகச் சுட்டிக் காட்டுகிறது. இந்த நாவலில் நான் ரசித்த பல அம்சங்கள் இருக்கின்றன. இந்த நாவலில் பேச்சு மொழி – மக்கள் மொழி உயிர்த்துடிப்புடன் கையாளப்பட்டிருக்கிறது. அடுத்தது நாவலில் எவ்வித வக்கிரத்தனமும் இல்லாமல் நாவல் செய்தி அற்புதமாகச் சொல்லியிருக்கிற சிறப்பு. இந்த நாவலில், 'மாட்டிக் கிட்டமே என்ன பண்ணிறது, எங்கே போறது, அகப்பட்டுக் கிட்டமே என்று திணறிக்கொண்டிருக்கிற தொழிலாளி வர்க்கத்தைக் காண்கிறோம். இது அருமையான நாவல். சிறந்த நாவல்."(45)

அந்த விழாவில் நான் வல்லிக்கண்ணனைச் சந்தித்ததைப் பெரும் பேறாகக் கருதுகிறேன்.

அவர் 67 வருடங்களாக ஓயாது எழுதிக் கொண்டிருந்த இலக்கிய ஞானி. சாகித்திய விருது பெற்ற எழுத்தாளர். "சிற்றிதழ்களின் செவிலித்தாய்" எனப் புகழ் பெற்றவர். சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள் ஆராய்ச்சிக் கட்டுரைகள், நாடகம், வரலாறு, மொழிபெயர்ப்புகள் எனப்பல துறைகளிலும் தடம் பதித்தவர். ஈழத்து எழுத்தாளர் பலருடன் நீண்ட

உறவினைக் கொண்டவர். பல எழுத்தாளர்களின் நூல்களுக்கு முன்னுரைகள் தந்தவர்.

விழாவுக்கு முதல்நாளே வல்லிக்கண்ணனும் பொன்னீலனும் கண்டிக்கு வந்துவிட்டனர். அவர்களுக்கு எனது இல்லத்தில் இரவுப் போசன விருந்து அளிப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தோம். ஆனாலும் கடைசி நேரத்தில் சிறிது சுகவீனம் காரணமாக வல்லிக்கண்ணனால் அன்று எனது இல்லத்திற்கு வரமுடியாமல் போய்விட்டது. பொன்னீலனை நீர்வைப் பொன்னையனும் அந்தனி ஜீவாவும் அழைத்து வந்திருந்தனர்.

வல்லிக் கண்ணனின் எளிமைக்கும் பந்தாக்கள் ஏதுமில்லாத தன்மைக்கும் சான்றாக ஒன்றை இங்கு குறிப்பிடவேண்டும் "நான் வராததையிட்டு ஞானசேகரன் ஏமாற்றமடையக்கூடும். அவருக்கு நிலைமையை விளக்கிக் கூறுங்கள். எனக்குரிய உணவைப் பார்சல்பண்ணிக் கொண்டுவந்துவிடுங்கள்" என்று பொன்னீலனிடம் கூறி அனுப்பியிருந்தார். விழாவில் என்னைச் சந்தித்தபோது தான் எனது இல்லத்திற்கு வரமுடியாமைக்கு வருத்தம் தெரிவித்தார். பொன்னீலனிடம் முதல்நாள் இரவே கவ்வாத்து நாவலைப் பெற்று வாசித்திருந்தார். அந்த நாவல் பற்றிய தனது விமர்சனத்தை என்னிடம் கூறிப் பாராட்டினார். முதுபெரும் எழுத்தாளரான அவரது பாராட்டு எனக்குப் பெரிதும் மகிழ்ச்சியைக் கொடுத்தது.

எனது லயத்துச்சிறைகள் நாவலையும் கவ்வாத்து குறுநாவலையும் தனது மலையக வெளியீட்டகத்தின் மூலம் வெளிக்கொணர்ந்த அந்தனிஜீவாவைப்பற்றி இவ்விடத்தில் குறிப்பிடுதல் அவசியமாகிறது.

மலையகக் கலை இலக்கிய வளர்ச்சிக்காக மிகுந்த ஈடுபாட்டுடன் உழைத்துவருபவர் அந்தனிஜீவா. அவருடன் நான் முதன் முதலில் சந்தித்து உரையாடிய நிகழ்வு என் மனதில் இன்றும் பசுமையாக இருக்கிறது. 1991ல் கண்டியில் நடந்த இலக்கியக் கூட்டமொன்றுக்கு நான் சென்ற பொழுது என்னைச் சந்தித்த ஜீவா, "உங்களுடைய குருதிமலை நாவலை தமிழக அமெரிக்கன் கல்லூரியில் எம். ஏ. வகுப்புக்குப் பாட நூலாக்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த நாவலின் பிரதிகள் தேவைப்படுகின்றன. அவற்றைத் தேடி அனுப்பும் படி எனக்குக் கடிதம் அனுப்பியிருக்கிறார்கள். உங்களிடம் பிரதிகள் இருந்தால் தாருங்கள். பேராசிரியர் சந்திரசேகரம் சமீபத்தில் தமிழகம் செல்லவிருக்கிறார். அவர்மூலம் அனுப்பிவைக்கலாம்." என்றார்.

அந்தனிஜீவாவுக்கும் தமிழக கலை இலக்கிய வாதிகளுக்குமிடையே மிக நெருக்கமான தொடர்புகள் இருந்தன. மலையகத்திலிருந்தும் ஈழத்தின் ஏனைய பகுதிகளிலிருந்தும் வெளிவருகின்ற சிறந்த நூல்களை அவர்களுக்கு அனுப்பி அறிமுகம் செய்வார். தமிழகத்தில் இலக்கிய விழாக்கள் நடைபெறும் சந்தர்ப்பங்களில் அங்கு சென்று விழாக்களிலே பங்குபற்றித் தனது உறவினைப் பலப்படுத்திக் கொள்வார். அதேபோன்று தமிழகத்திலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் எழுத்தாளர்கள் இலங்கைக்கு வரும்போது அவர்களை மலையகத்தின் பல இடங்களுக்குக் கூட்டிச் சென்று இலக்கியக் கூட்டங்களில் பங்குபற்றச் செய்து ஏனைய எழுத்தாளர்களையும் கலைஞர்களையும் சந்திக்க வைத்து மகிழ்வது அவரது வழக்கம்.

இந்தத் தொடர்புகள் காரணமாகவே அவரிடம் குருதிமலை நாவலின் பிரதிகளைச் சேகரித்து அனுப்பும்படி கேட்டிருந்தார்கள். மலையக வெளியீட்டகத்தின் பதினைந்தாவது ஆண்டு விழாவுக்கு பொன்னீலன், வல்லிக்கண்ணன், தாமரை மகேந்திரன் ஆகியோரைப் பங்கு பற்றச் செய்ததும் இத்தகைய தொடர்புகளினாலேதான். சமீபத்தில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டிற்கு முதல்நாள் சிற்றிதழ் மாநாட்டினை இங்கு நடைபெறச் செய்ததோடு எழுத்தாளர் மாநாட்டிலும் நாற்பத்தைந்து சஞ்சிகையாளர்களைப் பங்குபெறச் செய்ததும் இத்தகைய தொடர்புகளினாலேதான்.

அந்தனி ஜீவா ஒரு சிறந்த நாடகக் கலைஞர் பதினான்கு நாடகங்களை நெறியாள்கை செய்து மேடையேற்றியுள்ளார். அவருடன் எனக்கிருந்த தொடர்பு காரணமாக அவரது 'அக்கினிப் பூக்கள்' என்ற நாடகத்தை 'ஞானம்' பதிப்பகத்தினூடாக வெளிக்கொணர்ந்தேன். அந்த நாடக நூல் 1999ஆம் ஆண்டிற்கான இலங்கை தேசிய சாகித்திய விருதினைப் பெற்றுக்கொண்டது.

எனது ஞானம் சஞ்சிகையின் ஆரம்பகாலந் தொட்டே அந்தனிஜீவா அதனுடன் தொடர்பு வைத்திருந்தார். ஞானம் சஞ்சிகையில் பல தொடர் கட்டுரைகளை எழுதியுள்ளார். சிலகாலம் ஞானம் சஞ்சிகையின் துணையாசிரியராகக் கடமையாற்றியுமுள்ளார்.

அந்தனி ஜீவா ஒரு இலக்கியப் போராளி. அவரிடம் சில குறைபாடுகள் இருக்கலாம். ஆனாலும் அந்தக் குறைபாடுகளையும் மேவி அவரது பன்முக கலைஇலக்கியச் செயற்பாடுகள் அவரைத் தவிர்க்க முடியாத ஒரு முக்கிய கலை இலக்கியப் பிரமுகராக உயர்த்தியிருக்கிறது. ஈழத்தின் இலக்கிய முன்னெடுப்பிலே மலையக இலக்கியத்திற்கு ஒரு கணிசமான பங்குண்டு என்பதைப் பரந்துபட்டரீதியில் நாட்டின் உள்ளேயும் நாட்டின் எல்லைகளைத் தாண்டியும் எடுத்துச் சென்றவர்களில் முன்னணியில் இருப்பவர் அந்தனி ஜீவா. அவரது இலக்கியப் பணிகள் பற்றிய விபரமான கட்டுரை ஒன்றை ஞானம் 52ஆவது இதழில் எழுதியுள்ளேன். ஞானம்109 ஆவது இதழில் அவரை

அட்டைப்பட அதிதியாகக் கௌரவித்திருக்கிறேன். இங்கு அந்தனி ஜீவா பற்றி எனது இலக்கியத்தடத்தில் இடம்பெறவேண்டிய பகுதிகளை மட்டுமே தந்துள்ளேன்.

கவ்வாத்து குறுநாவலின் அறிமுக விழா 14-07-1996ல் புசல்லாவை சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் அதிபர் தமிழ்ச்செல்வன் தலைமையில் இடம்பெற்றது. தெளிவத்தைஜோசப், அந்தனிஜீவா, சாரல்நாடன், கவிஞர் முரளிதரன், கவிஞர் குறிஞ்சித் தென்னவன் ஆகியோர் விமர்சன உரை நிகழ்த்தினர்.

இந்தக் கவ்வாத்துக் குறுநாவல் 1996ல் வெளிவந்த சிறந்த நாவலுக்கான மத்திய மாகாண அமைச்சின் சாகித்தியப் பரிசினைப் பெற்றது.

தமிழ் சிங்கள எழுத்தாளர் ஒன்றிணைந்த 'விபவி' என்ற அமைப்பு சிலகாலம் சிறந்த பணிகளைச் செய்துவந்தது. அந்த அமைப்பு ஒவ்வொரு ஆண்டிலும் வெளிவந்த சிறந்த நூல்களுக்குப் பரிசளித்தும் வந்தது. 1996ல் வெளிவந்த சிறந்த நாவலாக அந்த அமைப்பு கவ்வாத்தினைத் தெரிவு செய்தது. 21-11-1998ல் நடைபெற்ற சுதந்திர இலக்கிய விழாவில் இதற்கான பணப்பரிசு, சான்றிதழ், தங்கச்சங்கு விருது ஆகியவை எனக்கு வழங்கப்பட்டன. 1996ன் சிறந்த நாவலாக வேறொரு நாவல் தேசிய சாகித்திய விருதினைப் பெற்ற போதிலும், விபவி அமைப்பினர் அந்த ஆண்டின் சிறந்த நாவலாக கவ்வாத்தைத் தெரிவு செய்தமை இங்கு கவனிக்கத்தக்கது. இந்தப் பரிசுத்தேர்வுக்கு நான் நாவலை அனுப்பாதிருந்த போதிலும் அந்த அமைப்பினரே அந்த ஆண்டில் வெளிவந்த நூல்களைத் தேடிப் பெற்று பரிசளித்தமையும் இங்கு குறிப்பிடத் தக்கது.

இந்த அமைப்பின் மதிப்பீட்டுக் குழுவின் சார்பாக சான்றிதழில் கையொப்பமிட்டிருக்கும் பிரபல எழுத்தாளரும் ஊடகவியலாளருமான விஜயன் கவ்வாத்து பற்றிய விமர்சனக் குறிப்பொன்றில் பின்வருமாறு எழுதியுள்ளார்:

150 வருடங்களுக்குப் பின்னரும் மலையக தோட்டத் தொழிலாளர் சமூகத்தின் வாழ்வு இத்தகைய அவலத்திற்கு ஆட்பட்டிருக்கிறது என்பது கதையின் இருதயமாகவிருக்கிறது. பெரியதொரு வரலாற்றினை அதன் நகமும் சதையுமான உண்மைகளை ஒரு குறுநாவல் அமைப்பிற்குள் அடக்கிவிடும் அரிய ஆற்றல் ஞானசேகரனுக்கு உள்ளது. ஒரு பெரிய காவியத்திற்கான அக்கினிக்குஞ்சு இக் குறுநாவலுக்குள் உறங்கிக் கிடக்கிறது (46).

(இனி அடுத்த இதழில்)


உசாத்துணை:

(39) வீரகேசரி 13-07-1996 பக்: 2

(40)ஞானம் மே2010 தெளிவத்தை ஜோசப் பவளமலர் பக்:51

(41) தினகரன் வாரமலர் 16-5-2010

(42) ஈழத் தமிழ்ச் சிறுகதை மணிகள் 1973 -செம்பியன் செல்வன் பக்:72

(43)ஞானம் மே2002 -24ஆவது இதழ், பக்20

(44) கவ்வாத்து குறுநாவல்- மலையக வெளியீட்டகம் - பக் 6

(45) தினகரன் வாரமஞ்சரி 11-8-1996 பக்6

(46) வீரகேசரி 11-2- 1996 பக் :6




# நிழல் யுத்தம்

நீண்ட நாட்களாய்
என்னோடு நீ
நிழல் யுத்தம் புரிகிறாய்.
விபரமறியாது
நானும் உன்னோடு
நிழல் யுத்தம் தான்
தொடுத்தேன்.
நாடசெல்ல -
என்னை நீ வெறுப்பதாய்
உணர்வு உந்தித்தள்ள
உன்னை நான்
[illegible]சீனம் செய்தேன்.
நீ நிலை குலைந்தாய்.
உன் நிழல் யுத்தம் விடுத்து
என்னவோ போல் ஆனாய்.
நிதமும் -
என் அன்புக்காய் ஏங்கினாய்.
உன் நிழல் யுத்தம் நிஜமல்ல
உன் அன்பு தான் நிஜமென்று
நானும்
தெரிந்து கொண்டேன்.
நிஜத்தை உணர்த்தவா
நிழல் யுத்தம் புரிந்தாய்?
நிழல் யுத்தம் வேண்டாம்
நிஜம் தான் வேண்டும்.

- மகிழ்னன்



# மனவைரம்

**அரியாலையூர் சி.சிவதாசன்.**

நான் கொழும்பிலிருந்து வந்து மூன்று நாட்கள் ஆகின்றன. அப்பா இனிமேல் பிழைக்க மாட்டார்... என் வைத்திய அனுபவத்திலிருந்து அது எனக்கு நன்கு தெரியும். அம்மாவும் தங்கச்சியும் அப்பாவின் தலை மாட்டில் ஒவ்வொரு பக்கமாய் அமர்ந்திருக்கிறார்கள். இடையிடையே அப்பாவின் இருமல் சத்தம். அவர் உடலில் இன்னமும் உயிர் ஒட்டி உறவாடுகிறது என்பதைப் பறை சாற்றிக் கொண்டிருக்கிறது. எங்கள் உறவுகளும் சிலர் அப்பாவைப் பார்க்க வந்துள்ளார்கள். அப்பா கட்டிலில் படுக்க விரும்பவில்லை முன் வராந்தாவில் ஒரு பக்கமாக பாயில் அவரைப் படுக்க வைத்துள்ளோம்.' நான் இருந்த பக்கமாய் பெரியப்பா என்னருகே வந்தார். வந்தவர் 'தம்பி! அவன் இனிமேல் பிழைக்கமாட்டான். அவன்ரை கடைசி அலுவலுக்கு பணம் எதும் கொண்டு வந்தனியே?... அவரின் கேள்வியின் அர்த்தம் எனக்குப் புரிந்தது. செலவு தன்னில் பொறுத்திடுமோ? என்ற ஆதங்கம் அவருக்கு. எனக்கு என்ன சொல்வதென்றே தோன்றவில்லை. என் மனம் என்னை அறியாமல் குமுறுகின்றது. என்னை நான் சுதாகரித்துக் கொண்டேன் நாதமுதமுக்க அதற்கெல்லாம் ஆயத்தமாக வந்திருக்கிறேன். தங்கச்சியின்ரை புருஷனும் பணம் வைத்திருக்கிறார், என்றேன். பெரியப்பா மறுபேச்சு எதுவும் பேசாமல் என்னை விட்டு அகன்று சென்றார்.

என்ன மனுஷன் தன்னிடம் பணம் கேட்டுப் போடுவேன் என்று நினைத்தாரோ? என என் மனதில் கவலை ஏற்பட மறுபுறம் திரும்பிப் பார்க்கிறேன். அப்பாவின் இரண்டாவது சகோதரன் ஆசையப்பா. அவர் மனைவியோடு ஏதோ குசுகுசுத்துப் பேசுவதும் அவர் மனைவி ஆசையம்மா முகம் சுளித்துக் கோபப்படுவதும். ஆசையப்பா ஆசையம்மாவைச் சமாளிக்க முற்படுவதும் என் கண்களுக்கு நன்றாகத் தெரிகின்றது. சிறிது நேரத்தில் அவர் கோபத்தோடு ஆசையம்மாவின் கைகளைப் பற்றிப் பிடித்து இழுபறிப்பட்டு எமது கேற்றைத்தாண்டி வெளியே போய்க் கொண்டிருந்தார். அவர்களின் பிரச்சினைக்கும் தாம் செலவு செய்ய வேண்டிவருமோ? என்ற பயப்பீதி தான் காரணம். எனக்கோ அப்பாவின் நிலையை எண்ணிக் கவலை ஒரு புறம். அப்பாவின் சகோதரர்களை எண்ணி சிரிப்பு மறு புறம். இது அவ்வாறிருக்க... இதுவரை அங்கு அமர்ந் திருந்த அப்பாவின் மற்றைய இரு அண்ணன்மாரும் எழுந்து நின்றவர்கள் எப்படி அவ்விடத்திலிருந்து மாயமாய் மறைந்தார்களோ? தெரியவில்லை. இதற்கெல்லாம் காரணம் அப்பா கண்ணை மூடிவிட்டால் செலவுகள் தம்மீது திணிக்கப்பட்டுவிடுமோ? என்ற தப்புக் கணக்குத்தான். நான் எதுவும் பேசவில்லை. என் உள்ளத்தில் வேதனை என்னும் தீ இரட்டிப்பாக கொழுந்து விட்டு எரிகின்றது. மனம் தடம் புரள்கின்றது. என் நினைவுகள் கடந்து போன அந்தக் காலத்தை நோக்கி பின் நகருகின்றது... எப்படி அவற்றை என்னால் மறக்க முடியும்? அப்பாவின் உடன்பிறப்புகளின் வீட்டிற்கு அம்மா போய் வந்தால் அவரின் முகத்தில் சந்தோசத்தைப் பார்க்க முடியாது. அம்மாவின் முகம் கவலை தோய்ந்ததாகவே இருக்கும். அப்போது எனக்குப் பத்துவயது. தங்கச்சிக்கு எட்டு வயது. எதையும் புரிந்து கொள்ளக் கூடிய வயதாக இருந்தாலும் அர்த்தங்கள் என்ன என்பது தெரியாது. நானும் தங்கச்சியும் அம்மாவின் கண்களிலிருந்து வடியும் கண்ணீரைக் கண்டு கண்கலங்கி அழுவதைத்தவிர அம்மாவிடமிருந்து எதையும் அறிய முடியாது. அவரின் மௌனம் எம்மையும் ஊமையாக்கி விடும்.

அப்பா! ஒரு அப்பாவி. நன்றாகப் படிக்காது போனாலும் உலக அனுபவம் அவருக்கு நிறையவே இருந்தது. அம்மாவின் நிலை அறிந்து அம்மாவைச் சமாளித்து விடுவதிலும் அவர் பலே கெட்டிக்காரர் அம்மாவும் குடும்ப நிலை காரணமாகப் படிக்கவில்லை. இருந்தாலும் குடும்பப் பொறுப்புள்ள பெண்ணாகவே இருந்தார். அப்பா மீது அம்மாவிற்கு அளவு கடந்த பாசம். அதனால் அப்பா சொல்வதை அம்மா என்றும் தட்டிக்கழிப்பதில்லை. அதற்கு காரணங்கள் பலவுண்டு. அம்மாவீட்டுச் சுகதுக்கங்களில் முன்னின்று செலவுகள் செய்து செயலாற்றி அவர்கள் குடும்பத்துக்கு உதவி வந்தவர் அப்பா!...

அப்பா ஒரு நாள் என்னைத் தன்னருகே அழைத்தார். அப்பொழுது நான் கல்விப் பொதுத்தராதர வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன், தன்னருகே என்னை அழைத்த அப்பா! எனக்குச் சொன்ன விடயங்கள் தனது சகோதரங்களையும், அவர் மனைவிமார்களைப் பற்றியதுமே ஆகும். நான் டாக்டர் ஆகும் நிலைக்கு என்னை உருவாக்கியது அப்பாவை ஒரு சாதனையாளராகவே எனக்கு இப்பொழுதும் நினைக்க வைக்கின்றது.

தன்னால் இயலாததை அவர் என்னைக் கொண்டு சாதித்துக் காட்டிவிட்டார். ஒருவன் மனதில் எழுகின்ற "வைராக்கியம்" ஆனது அவன் வாழ்க்கைப் பயணத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியே தீரும். ஒருவன் நல்லவன் ஆவதற்கும், தீயவன் ஆவதற்கும் அதுவே காரணியா கவும் அமைகின்றது. இது அப்பாவின் வாழ்விலும் இடம் பெற்றது. ...மீண்டும் அப்பா சொன்னவற்றை என் நினைவுத்திரையிலிருந்து மீட்டுப் பார்க்கின்றேன். அப்பாவோடு அப்பாவின் குடும்பத்தில் ஐந்து பேர் சகோதரங்கள். ஐந்து பேரும் ஆண்பிள்ளைகள். இவர்களில் அப்பு கடைக்குட்டி. அப்பாவின் மூத்த அண்ணரின் பெயர் முத்துலிங்கம். இரண்டாம் அண்ணருக்குப் பெயர் இராமலிங்கம். மூன்றாம் அண்ணர் மருதலிங்கம், நான்காம் அண்ணர் நாகலிங்கம், அப்பாவின் பெயர் பஞ்சலிங்கம். அப்பாவின் தந்தையார் பிள்ளைகளுக்குச் சூட்டிய பெயர்கள் இவை.

அப்பாவின் தந்தையார் நீர்வேலிக் கிராமத்தில் பெரிய வாழைத்தோட்டம் வைத்திருந்தவர். அதனால் சுமாரான வருமானம் அவருக்குக் கிடைத்தது. பிள்ளைகளைப் படிப்பிக்க வைப்பதில் அவர் அதீத அக்கறை காட்டினார். மூத்த சகோதரர்கள் படிப்பதில் காட்டிய அக்கறையும், ஆர்வமும் அப்பாவால் காட்ட முடியவில்லை. படிப்பு என்றாலே அவருக்கு பாகற் காயாய் கசந்தது. அப்பாவின் அப்பு எடுத்த முயற்சிகள் பயனளிக்காத நிலையில் அப்பு அப்பாவை தண்ணீர் பம்பி உழவுயந்திரம் திருத்தும் பணியை பழக வைத்தார். அப்பா அத்துறையில் மிகவும் கெட்டிக்காரராக விளங்கினார். நீர்வேலியில் பெரிய கராச் ஒன்றை அமைத்து நாலைந்து பேரை வேலைக்கமர்த்தி இள வயதிலேயே அப்பா உழைத்து நல்ல வருமானம் ஈட்டினார். அப்பாவின் மூத்த சகோதரர்கள் இருவருக்கு கண்டி பல்கலைக் கழகத்தில் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அப்பாவின் அப்புவிற்கு அவர்களை படிப்பிக்கவும், குடும்பத்தின் செலவுகளைப் பார்ப்ப தற்கும் அவரின் வருமானம் போதாமல் இருந்தது. அதனால் அப்பாவின் வருமானம் பலவகைகளில் அவருக்குக் கைகொடுத்தது. அப்பாவின் அண்ணன்மார் களில் மூத்தவரான முத்துலிங்கமும் இரண்டாமவரான இராமலிங்கமும் பட்டப்படிப்பு முடித்து பாடசாலை அதிபர்களாக இருந்து ஓய்வும் பெற்றுவிட்டார்கள். மற்றைய இரு அண்ணன்மாரில் மருதலிங்கம் என்பவர் செயலகக் கணக்காளராக பணி புரிந்து வருகின்றனர். இவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்துக்கெல்லாம் அடித்தளம் அமைத்தவர் அப்பாவே. தங்களின் படிப்புத் தேவைகளுக்கெல்லாம் அப்பாவைச் சுற்றி வந்த சகோதரங்கள் வசதியும் வாய்பும் கிடைத்த பின்பு அப்பாவை புறக்கணிக்கத் தொடங்கினார்களாம். அப்பா வின் அப்பு கெட்டிக்காரர். எனது அப்பா படிக்காமல் இருந்ததால் ஒருவேளை மூத்த சகோதரங்கள் புறக்கணிக்கவும் கூடும் என்று முன்னமே சிந்தித்தமை யால் தோட்டக் காணியையும், வீடுவாசல் கொண்ட தனது அனைத்துச் சொத்துக்களையும் அப்பாவின் பெயரில் எழுதிவிட்டு இறந்து போனார். அதனால் அப்பாவின் சகோதரங்களுக்கும், அவர்களின் மனைவிமாருக்கும் அப்புவின் மீது பொல்லாத கோபமாம். அவர்கள் நல்ல வசதி படைத்தவர்களாக இருந்தபோதும் அப்பாவையும் அம்மாவையும் மதிப்பதில்லையாம். 'அறுந்த கிழவன் தன்ரை சொத்தையெல்லாம் படிக்காதவனுக்கு எழுதிப் போட்டான்." என்று அப்பாவின் அப்புவை சாகும்வரை திட்டிக்கொண்டேயிருந்தார்களாம். கிழவன் இறந்த போது கொள்ளி வைக்கவும், கடைசிக்கடன் செய்யவும் மூத்தவர் முத்துலிங்கம் மறுத்துவிட்டார். ஊர்ச்சனங்கள் தங்களைப் பற்றித் தப்பாக எண்ணக் கூடாது என்பதற்காக சுடலை வந்த சகோதரர்கள் பின்னிகழ்வுகளுக்கு வந்து கலந்து கொள்ளவில்லையாம். அப்பாதான் எல்லாக் கடமைகளையும் செய்து முடித்தாராம். அன்று தொட்டு அப்பாவின் சகோதரங்களின் மனைவிமார் அம்மாவைக் கண்டால் குத்தலாகக் கதைப்பார்களாம். அதனால் பலமுறை அம்மா அவர்களால் பாதிப்புக்குள்ளாகி வீடுவந்து அழுதுதீர்ப்பார். அதனை நானும், தங்கச்சியும் பலமுறை கண்டிருக்கிறோம். அப்பா சொன்ன இந்தக் கதைகளைக் கேட்ட பின்னர்தான் அம்மாவின் அழுகைக் கான காரணம் எனக்குத் தெரிந்தது. மேலும் பெருமூச்சு விட்டபடி.... தம்பி! நீயெண்டாலும் படித்து முன்னுக்கு வரவேண்டும். அந்தக் காட்சியைக் கண்டுதான் இந்தக் கட்டை வேகவேண்டும்" என்று நாதளுதளுக்கக் கண்ணீருடன் கூறினார். அன்று அப்பா சொன்ன வார்த்தைகள் தான் என் மனதில் வைரத்தை ஏற்படுத் தியது. அப்பாவின் வேண்டுதலை நான் மட்டுமல்லாது எனது தங்கையும் நிறைவேற்றிவிட்டாள். அவள் பல்கலைக்கழகப் பேராசிரியராகக்கடமை செய்கிறாள். நான்... டாக்டர் ஆகிவிட்டேன். தங்கைக்குத் திருமணமும் செய்து வைத்து விட்டேன். நான் மேலும் படிப்பைத் தொடர வேண்டும் என்பதற்காகத் திருமணம் செய்ய வில்லை. என்னைத் தங்கள் பகுதிக்குள் மாப்பிள்ளை யாக எடுத்துவிட வேண்டும் என்பதற்காகவே அப்பாவின் சக உதிரங்கள் இன்று வந்து போகிறார்கள் என்பது எனக்கும் அம்மாவுக்கும் நன்றாகவே தெரியும் அப்பா அடிக்கடி சொல்லுவார். "ஆறு கடக்கும் வரை தான் அண்ணன் தம்பி அங்காலை நீயாரோ? நான் யாரோ?" இது தான் அண்ணன் தம்பி உறவு... அப்பாவின் இந்தப் பழமொழி வார்த்தைகள் என் மனம் எடைபோட்டு சிந்தித்திருந்த வேளை... அம்மாவும் தங்கச்சியும் பெருங்குரலில் அழுவது என் காதுகளில் கேட்க.... அப்பா போய்விட்டார்... என்ற துயரம் மேலிட அப்பா கிடத்தப்பட்டிருந்த இடத்தை நோக்கி நான் ஓடுகிறேன்...

பேருவளை றபீக் மொஹிடீன்

# ஜாஹிலிய்யாக்கால அறேபியக் கவிஞன் இம்ரஉல் கைஸ்

திருவள்ளுவரைத் தெரியாத தமிழுலகம் இல்லை. அவ்வாறே கம்பரை, இளங்கோவைத் தெரியாத தமிழர்களும் இல்லை. அதேபோன்று இருபதாம் நூற்றாண்டின் ஈடிணையற்ற கவிஞன் பாரதியைத் தெரியாதவர்கள் யாரும் இன்று தமிழர் களாக இருக்க முடியாது. அந்த அளவுக்கு இவர்கள் தமிழ் இலக்கிய உலகில் மிகப்பெரும் சாதனைகளை நிலைநாட்டியுள்ளார்கள். இவர்கள் தமிழ் நாட்டிலே பிறந்து வளர்ந்து தமிழர்களாகவே வாழ்ந்து தமிழ் இலக்கிய உலகிற்கு மிகப்பெரும் வளம் சேர்த்திருப் பதனால் இத்தகையோரைப் பற்றி அறிந்திருப்பது தமிழர் ஒவ்வொருவரினதும் கடமையாகும். இவர்களைப் போன்று இவர்களின் வழிவந்து தமிழ் இலக்கியத்தை வளப்படுத்திய சாதனையாளர்களை அறிந்து வைத்திருப்பதும் அவசியமாகும். அவ்வாறே பிறநாட்டு, பிறமொழியாளர்களைப் பற்றியும் இலக்கிய உலகில் அவர்களது சாதனைகள் பற்றியும் அறிந்து வைத்தி ருப்பதும் நலம் பயப்பதாகும். அந்த வகையில் மாக்ஸிஸம் காக்கியிலிருந்து, லியோ டோல்ஸ் டோயிலிருந்து, சார்ள்ஸ் டிக்கனிலிருந்து, எட்கார் எலன்போவிலிருந்து, உருதுக் கவிஞன் அல்லாமா இக்பாலிலிருந்து, பாரசீகக் கவிஞன் உமர் கையாமிலிருந்து நம் தமிழ் இலக்கிய உலகம் அறிந்து வைத்திருப்பதானது மகிழ்ச்சிக்குரியதும் பாராட்டப்படக் கூடியதுமாகும். ஆனால் நம் தமிழ் இலக்கிய உலகம் தெரியாத, தமிழைத் தாய்மொழியாக பிறமொழி பேசும் முஸ்லிம்களில் கூட பலரும் அறியாத விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரே அறிந்திருக்கக்கூடிய ஒரு கவிஞன் இருக்கிறான். அவன் தான் அன்றைய அறிவுலகம் ஈன்றெடுத்த ஜாஹிலிய்யாக்கால அரேபியக் கவிஞன் இம்ரஉல் கைஸ்.

இம்ரஉல் கைஸையும் அவனது கவிதை களையும் பற்றி அறிவதோடு அவன் வாழ்ந்த காலசூழ் நிலைகளைப் பற்றி அறிவதும் பிரதானமானதாகும். இம்ரஉல்கைஸ் முஸ்லிம் கவிஞனல்ல. அவன் ஓர் அறபுக் கவிஞன். அதாவது ஜாஹிலிய்யாக்கால அறேபியக் கவிஞன் அன்றைய அறேபியாவிலே. இன்று முஸ்லிம்கள் பெரும்பான்மையாக பரந்து வாழ்வதற்கும் இஸ்லாம் சமயம் நிலைத்து ஓங்குவதற்கும் காரணமாக இருந்த இஸ்லாத்தின் இறுதி நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் பிறப்பதற்கு முன் வாழ்ந்து மறைந்த கவிஞனே இம்ரஉல்கைஸ். ஜாஹிலிய்யாக்காலம் என்பது இஸ்லாமிய வரலாற்றில், நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் பிறப்பதற்கு முன்பிலிருந்து அவர்கள் பிறந்து நாற்பதாவது வயதில் 'சபுவ்வத்' எனும் 'நபித்துவம்' கிடைக்கப் பெற்ற வரையிலான காலத்தையே குறித்து நிற்கிறது. 'அய்யாமுல் ஜாஹிலிய்யா' என்றும் இதனை அழைப்பர். அறபியில் 'அய்யாம்' எனும் சொல் 'நாட்கள்' அல்லது 'காலத்தைக்' குறிக்கும். 'ஜாஹிலிய்யத்' அல்லது 'ஜாஹிலிய்யா' என்பது அறியாமைத்தனத்தை, முரட்டுத் தனத்தைக் குறிக்கும். எனவே, அய்யாமுல் ஜாஹிலிய்யா் எனும் தொடர் தமிழில் 'அறியாமைக்காலம்' அல்லது 'முரடர்களின்காலம்' என்னும் பொருளில் பயன் படுத்தப்படுகிறது. இதற்குக் காரணம் இக்காலப் பகுதியில் வாழ்ந்த மக்கள் பெரும் முரடர்களாகவும் நன்மை, தீமை எது என்பதை அறியாதவர்களாகவும் வாழ்ந்திருந்தமை யேயாகும். மது, மாது, விபசாரம், சூதாட்டம் முதலான ஒழுக்க வீழ்ச்சிகள் தலைவிரித்தாடிய இக்கால கட்டத்தில் வாழ்ந்த மக்கள் கொலை செய்வதிலும், கொள்ளையடிப்பதிலும் தம் வாழ்வை ஈடுபடுத்தினர். ஒருவனின் ஒட்டகம் தனக்குச் சொந்தமான நீர்நிலை யில் நீரருந்தினால் அதற்காக பரம்பரை பரம்பரையாக சண்டையிட்டு பழிக்குப் பழி வாங்கிய காலம் குல, கோத்திர வெறி படைத்த காலம். தம் தந்தையின் இரண்டாவது மனைவியை தமக்கு உரிமையாக்கி அனுபவித்து வாழ்ந்தகாலம் பெண் குழந்தைகளை உயிரோடு புதைத்தகாலம் ஏககாலத்தில் ஒருவன் பல மனைவியரையும், ஒரு பெண் பல கணவர்களையும் மணந்த அறியாமைக்காலம். சுருங்கச் சொன்னால் மக்கள் மாக்களாக வாழ்ந்த காலம் இதுவே, 'அய்யாமுல் ஜாஹில்யா' எனப்படும் 'அறியாமைக்காலம் ஜாஹிலிய் யாக்காலம்' இக்காலப்பகுதியிலேயே இச்சமூகத்திலேயே எல்லா குல, கோத்திரங்களும் உயர்வாக மதிக்கக்கூடிய 'குறைஷ்' எனும் குலத்திலே கி.பி 571ம் ஆண்டு நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் வந்துதித்து இச்சமுதாயத்தினை உயர்ந்ததொரு சமுதாயமாக மாற்றிக் காட்டினார்கள். அவர்களிலிருந்து உருவானவர்களே இன்று உலகளா விய ரீதியில் பரந்து வாழும் முஸ்லிம்கள். இம் முஸ்லிம் சமூகத்தின் உருவாக்கத்தின் முன்பே, அதாவது நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் பிறந்த நபியாக அனுப்பப் படுவதற்கு முன்பு இருந்த காலமே இந்த ஜாஹிலிய்யாக் காலமாகும். இக்காலத்தில் வாழ்ந்த கவிஞனே இம்ரஉல் கைஸ்.

மேலும், ஜாஹிலிய்யாக்காலமென்பது அறியா மைக்காலம் என அடையாளப் படுத்தப்பட்டாலும்.

இக்காலம் கவிதைத்துறையில் சிறப்புற்று விளங்கிய ஒருகாலம் என்பதனை ஆய்வாளர்கள் ஏற்றுக்கொள் கின்றனர். ஜாஹிலிய்யாக்கால சமூகம் பல குழுக்களாக பாலைவனத்தில் பிரிந்து வாழ்ந்த சமூகமாக இருந்துள்ளதோடு அது ஒரு நாடோடி சமூகமாகவும் இருந்துள்ளது. உலகில் இரண்டு வகையான சமூகங்கள் இருந்து வந்துள்ளன. ஒன்று Simple society எனப்படும் சாதாரண சிக்கலற்ற சமூகம். மற்றது Complex society எனப்படும் சிக்கலான சமூகம் அன்றைய கால சமூகங்களில் ஒன்றான ஜாஹிலிய்யாக்கால சமூகம் சாதாரண சிக்கலற்ற சமூகங்களின் வரிசையில் அடங்குகிறது. சிக்கலற்ற நிகழ்ச்சிகளால் செறிவற்ற ஒரு சமூக அமைப்பாக இருப்பதே இதற்குக் காரணம் சிக்கலான சமூகம் என்பது நவீன கால சமூக அமைப்பு போல சிக்கலான நிகழ்வுகளால் செறிந்த சமூகமாகும். ஜாஹிலிய்யாக்கால சமூகம் சிக்கலற்றசெறிவற்ற சமூகமாக சாதாரண சமூகமாக அமைந்ததனால் இச்சமூக அமைப்பில் காதல், போர் என்பன இரு முக்கிய நிகழ்வுகளாக அமைகின்றன. பல்வேறு குழுக்களுக் கிடையே இன உணர்வும் குல கோத்திர உணர்வும் மிகைத்து காணப்பட்டதால் அவற்றுக்கிடையே அடிக்கடி போர்கள் இடம்பெற்றன. ஒரு குழு மற்றொரு குழுவுடன் போராடுவதும் அவர்களின் சொத்துக்களை சூறையாடுவதும் அன்றைய சமூகங்கள் மத்தியில் சாதாரண நிகழ்வுகளாக காணப்பட்டன. அத்தோடு பாலைவன பசுந்தரைகளில் கூடாமடித்து தங்கும் வேளைகளில் ஒரு குழுவின் பெண் இன்னொரு குழுவின் ஆணைச் சந்தித்து காதல் கொள்ள வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன. எனவே சிக்கலற்ற சாதாரண அச்சமூக அமைப்பில் போரும் காதலும் அன்றாட நிகழ்வுகளாயின. இந்நிகழ்வுகளால் போர், காதல் என்பன அவர்களின் இலக்கியத்தில் கருப் பொருள்களாயின. இதனை நாம் சங்கால சமூக அமைப் போடு ஒப்பிட்டு நோக்கலாம். சங்ககால சமூகமும் காதலுக்கும் போருக்கும் முக்கியத்தவம் கொடுத்த சமூகம். ஆதலால் இக்கால இலக்கியங்களும் அவற்றையே பாகுபொருளாகக் கொண்டன. இவை முறையே அகம், புறம் எனப்பட்டன. இலக்கியமென்பது தான் தோன்றுகின்ற காலத்திற்கும் அக்கால சமுதாயத்திற்கும் ஏற்ப அமைவதால் இக்கலை இலக்கியங்கள் அவற்றைப் பொருளாகக் கொண்டி ருந்தன. அவ்வாறே அன்றைய ஜாஹிலிய்யாக் கால அரபுக் கவிஞர்கள் காதலையும் போரையும் பொரு ளாகக் கொண்டு இலக்கியம் படைத்திருக்கிறார்கள்.


ஜாஹிலிய்யாக்கால அறபுச் சமூகத்தில் கவிஞன் மிக முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறான். ஒவ்வொரு குழுவும் அதன் பாரம்பரியம் பற்றி மிகுந்த உணர்வுடன் செயற்பட்டதால் ஒவ்வொரு குழுவிலும் ஒரு கவிஞன் இருப்பதை அக்குழு பெருமையாகக் கண்டது ஒரு கவிஞன் தனது குழுவைப் போற்றி அதன் வெற்றிகளை மேம்படுத்திப் பாடுவதும் ஏனைய குழுக்களை இகழ்ந்து பாடுவதும் அவனது முக்கிய பங்காக இருந்தது. ஒவ்வொரு குழுவினதும் வீரதீரச் செயல்களையும் அதன் பாரம்பரியங்களையும் அழியாது பாதுகாத்து தம் சமூகத்தின் அடுத்த பரம்பரை யினருக்கு அவற்றை வழங்கும் பெரும் பணியை அக்கவிஞன் ஆற்றி வந்தான். இத்தகைய கவிஞர்களுள் முக்கியத்துவம் பெறுபவனும் முதன்மையானவனுமாக இருப்பவனும் இம்ரஉல்கைஸ் அன்றைய ஜாஹலிய் யாக்கால கவிதைகளில் மிகச் சிறந்த ஏழு கவிஞர்களின் கவிதைகள் 'ஸப்உல் முஅல்லகாத்' என்ற பெயரால் அழைக்கப்பட்டன. இவற்றுள் முதலிடம் பெறுவது இம்ரஉல்கையின் கவிதையாகும்.

ஜாஹிலிய்யாக்கால மக்கள் ஆண்டுக்கொரு முறை கரம்பாவைத் தரிசிக்க வருவது வழக்கம் இக்காலப்பிரிவில் 'உக்கான்' எனும் இலக்கியச்சந்தை மக்காவில் இடம்பெறும். அது வெறுமனே பொருட்களை மட்டும் பரிமாறும் சந்தையாகவன்றி கவிதைகளைப் பரிமாறும் இலக்கிய மன்றமாகவும் இருந்தது. இங்கு இடம்பெறும் கவிதைப் போட்டிகளில் பல கவிஞர்களும் கலந்துகொள்வர். அவர்கள் தமது கவிதைகளைச் சமர்ப்பிப்பர். இவற்றுள் மிகச் சிறந்தவை என கருதப்படும் கவிதைகள் தங்க எழுத்துக்களால் பொறிக்கப்பட்டு சுஃ பாவின் சுவரில் தொங்கவிடப்படும். இவ்வாறு தொங்கவிடப்பட்ட ஏழு கவிதைகளின் தொகுப்பே 'ஸப்உல் முஅல்லகாத்' என அழைக்கப்பட்டது. அத்தொகுப்பிலுள்ள கவிதைகளை எழுதிய கவிஞர்கள் 1. இம்ரஉல்கைஸ் 2. தர்பத் இபீனுஜத் 3. ஸஹைர் இப்னு அபீ ஸ்ல்மா 4. லபீத் இன்புறபீஅத் 5. அன்தரா 6. அம்ரிப்னு கல்ஸாம் 7. நாபிய்யா இப் ஸபிய்யான் ஆகியோராவர். இவர்களுள் முதலிடம் பெறுபவன் இம்ரஉல்கைஸே.

ஜாஹிலிய்யார் காலத்தில் 'அல்கிந்தி' எனும் சிற்றரசை ஆண்டு வந்த ஹஜர் என்பவரின் இளைய மகனே இம்ரஉல்னாஸ் உயர் குடும்பத்தில் பிறந்த இவன் சிறு வயது முதல் தீய நண்பர்களுடன் பழகி மோசமான வழிகளில் நேரத்தைக் கழித்தாலும் ஆரம்பம் முதல் கவியாற்றல் மிக்கவனாக விளங்கினான். மதுப்பிரிய னாகவும் மங்கையர்களின் பின்னால் சுற்றும் வழக்கமுடையவனாகவும் இருந்த இவன் விரசமான கவிதைகளை ஆரம்பம் முதல் இலக்கிய நயத்துடன் பாடினான். அவனது 'முஅல்லகாத்' எனும் கவிதைத் தொகுப்புக்களில் அவன் பாடிய பல கவிதைகள் அவனது ஆரம்ப கால வாழ்க்கை எந்தளவு கீழ்த்தரமானதாக, ஒழுக்கச் சீர்கேடுகள் நிறைந்ததாக அமைந்திருந்தது என்பதனை விளக்குகின்றன. தன் தந்தை 'பனூஅஸத்'

கோத்திரத்தினாரால் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து தன் தந்தைக்காகப் பழிவாங்குவதை வாழ்வின் இலட்சியமாக மாற்றிக்கொண்டான். எனவே, அவனது வாழ்வின் போக்கில் சில திருப்பு முனைகள் தோன்றிய அதேவேளை அவனது கவிதைகளின் போக்கிலும் மாற்றம் தென்பட்டது. இறுதி காலகட்டத்தில் அவன் பாடிய கவிதைகள் தன் பலவீனத்தையும் தனது தீய நண்பர்களின் மோசடிகளையும் நினைத்துப் பாடியவையாக அமைந்தன. ஆரம்பம் முதல் மக்காவில் நடைபெற்ற இலக்கிய மன்றங்களில் கவிதைப் போட்டி களில் பங்குபற்றி வெற்றியீட்டி தன் கவியாற்றலை வெளிப்படுத்தி பாராட்டும் பரிசில்களும் பெற்ற இவனது கவிதைகள் தங்கத்தினால் பொறிக்கப்பட்டு கல்பாவின் சுவரில் தொங்கவிடப்பட்ட 'ஸப்உலீ முஅல்லகன்' தொகுப்புக்களில் முதலிடம் வகித்துள்ளன. மோசமான கருப்பொருளை மையமாக வைத்து கவி இயற்றிய போதிலும் உயர்ந்த இலக்கியவளம் படைத்த கவிஞனாக விளங்கியுள்ளார். மோசமான, விரசமான கவிதை களைப் பாடி மக்களின் கீழான உணர்வுகளை தூண்டக் கூடிய வகையில் இவனது கவிதைகள் அமைந்திருந்த தனால் இவனைப் பற்றி நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் தாம் வாழ்ந்த காலத்தில், "மோசமான கவிதைகளைப் பாடக்கூடிய கவிஞர்களை நரகத்திற்கு அதிகமாக கொண்டு செல்லக் கூடியவர்" எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

அன்றைய ஜாஹிலிய்யாச் சூழலில் கவிதை இலக்கியமே மகத்தான இடத்தைப் பெற்றிருந்தது. அன்று இம்ரஉல்கைஸ்தான் பல புதிய வழிமுறைகளையும் வர்ணனைகளையும் கவிதைகளில் புகுத்தினான். அவனது கவிதைகளில் கையாளப்பட்டுள்ள உவமை களும் வருணனைகளும் மிகவும் நுட்பமானவை. இத்தகு வருணனைகளையும் உவமைகளையும் இவனுக்கு முன் வேறு எந்தக் கவிஞர்களும் பயன்படுத்தியதில்லை. ஜாஹிலிய்யாக் கால கவிதைகளை ஆராய்ச்சி செய்த மேற்கத்தேய அறிஞர்களுள் குறிப்பிடத்தக்கவரான Shilinger என்பவர் இம்ரஉல்கையின் கவிதை களை Modern Artsக்கு ஒப்பிட்டுக் கூறியுள்ளார். அதாவது சுருக்கமான ஓரிரு கோடுகள் வரையப் பட்டிருக்கும், அதனை இரசிக்கும் இரசிகனே அதன் பின்னனி பற்றிக் கற்பனை செய்ய வேண்டும். அது போன்றது தான் இம்ரஉல் கைஸின் கவிதைகள். தன் விரிந்த கற்பனைகளை சுருக்கமான ஓரிரு வசனங்களில் அடக்கியுள்ளான். இம்ரஉல் கைஸின் கவிதைத் தொகுப்பின் பெரும்பகுதி அவன் தன் காதலியோடு கழித்த நாட்களை, அவன் அனுபவித்த இன்பங்களை சுவைபடப்பாடுவதாக அமைந்துள்ளது. மேற்கத்தேய இலக்கிய ஆய்வாளர்களும் ஜஹிலிய்யாக் கால கவிஞர்களில் இம்ரஉல் கைஸிற்கே முக்கிய இடத்தை வழங்குகின்றனர். நவீன இலக்கிய ஆய்வாளர் கூட இம்ரஉல் கைஸின் உயர்ந்த கவியாற்றலைப் பற்றி மிகவும் புகழ்ந்துரைத்துள்ளனர். இவ்வாறு பல வகை யிலும் ஜாஹிலிய்யாக் கால அறவிலக்கிய காலத்தில் மகத்தான இடத்தைப் பெறும் இம்ரஉல் கைஸ் தனது ஆழ்ந்த கவி இலக்கிய ஆற்றலின் காரணமாக ஜாஹிலிய் யாக் கால கவிஞர்களின் முன்னோடியாகத் திகழுகிறான்.



# வெறுமைதின்னும் பகல்

கனத்த வெளிகளாக நிரம்பிப் போயிக்கிறது
எமது எதிர்காலம் பற்றிய வெறுமைகள்.
இரங்கமுடியாத முகங்களோடு
இன்னமும் புன்னகைத்தபடியே இருக்கிறோம்
எமக்கான இடுகைகளில் பாதியைக்கூட தரமறுக்கிறார்கள்.
ஆடைகள் கேட்டபோது கோவணம் கிடைத்தது
இருக்கைகள் கேட்டபோது கோவணம் கிழிந்தது
இனி எல்லோருக்கும் எல்லாமாக எல்லாம் எரிந்த பிறகும்
கரித்துண்டங்களில் தீமுளுமென இன்னமும் காத்திருக்கிறார்கள்
அவர்கள் விரக்திகளையே விருந்தாகத் தருகிறார்கள்
நாங்கள் சவக்குழிகளை நேசிக்கவில்லை
எங்களை அவைகள் நேசித்ததால் எல்லாக்குழிகளிலும்
இறங்கிக்கொண்டுதான் இருக்கிறோம்
எங்கள் பகல்களை வெறுமை தின்றுகொண்டிருக்கிறது
இருளின் விழிப்பு அகன்றுகொண்டிருக்கிறது
தீக்குச்சி உரசல்கூட தீவிரவாதம் என்றதால்
இருளின் பள்ளத்தில் இறங்கிக்கொண்டிருக்கிறோம்.

[illegible]

# உணர்வுகளினூடாக 1940களுக்கு அழைத்துச் சென்ற யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் 'உடையார் மிடுக்கு'

க.பரணீதரன்

இரு தசாப்பதங்களாக பல நல்ல நாடகஙங்களை ஆற்றுகை செய்து வரும் யாழ்.பல்கலைக்கழக நாடகமும் அரங்கக் கலைகளும் கலைப்பிரிவு மாணவர்களால் 2011-03-18 அன்று மேடையேற்றப்பட்ட பேராசிரியர்



க.கணபதிப்பிள்ளையின் 'உடையார் மிடுக்கு' நாடக ஆற்றுகையை கைலாசபதி கலைஅரங்கில் கண்ணுற்ற பின்னர் மனதில் எழுந்த உந்நத உணர்வுகளின் வெளிப்பாடாக இவ் இரசனைக் குறிப்பு அமைகின்றது.

29 நடிகர்கள் இந்நாடகத்தில் பங்கு பற்றியிருந்தனர். ஒவ்வொரு பாத்திரத்திற்கும் பொருத்தமான நடிகர்களை அப்பாத்திரத்தோடு



ஒன்றித்து நடிக்க வைத்திருப்பது சிறப்பாக தென்பட்டது. உடையாராக நடித்த மாணவனது உடற்தோற்றமும், வசனங்கள் பேசும் திறனும் உடையார் என்றால் இப்படித்தான் இருந்திருப்பார் என்ற எண்ணப் படத்தை மனக்கண்ணில் கொண்டு வருவது போல் இருந்தது. பெண் நடிகர்களும் சரி ஆண் நடிகர்களும் சரி அனைவரும் தமது பாத்திரத்தை விளங்கிக் கொண்டு சிறப்புற செயற்பட்டமை ஒவ்வொரு பாத்திரத்தின் வெற்றிக்கும் காரணமாக அமைந்தது என நம்புகின்றேன்.

மேடைப் பொருட்கள், காட்சியமைப்பு



என்பன யதார்த்த பூர்வமாக இருந்தன. உடையாரின் வீடு, அன்ன பாக்கியத்தின் வீடு, கள்ளுக் கொட்டில் என்பன சிறப்புற மேடையில் அமைக்கப்பட்டிருந்தன. காட்சி மாற்றங்களை விரைவாக செய்து ஒவ்வொரு காட்சியையும் சிறப்பாகச் செய்தனர். முக பாவங்களின் ஊடாக உணர்வுகளை வெளிப்படுத்திய விதம், அசைவுகள், வசனங்களை பேசிய முறைகள் என்பன நீண்ட பயிற்சியின் பின் ஆற்றுகை செய்யப்பட்ட நாடகம் என்பதை புடமிட்டுக் காட்டியது.

பொருளாதார நிலமை, சாதி, காதல், சமூக அந்தஸ்து என பலவற்றின் கலவையாக இந்நாடகம் தயாரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு மனிதரின் வாழ்விலும் அன்று தொட்டு இன்று வரை இவ் நான்கு விடயங்களும் செலுத்தும் ஆதிக்கம் இந்நாடகத்தினூடே சிறப்புறக் காண்பிக்கப்பட்டது.

ஒளி அமைப்பு இந்நாடகத்தின் சிறப்பிற்கு

பெரும் பங்காற்றியது எனக் கருதுகின்றேன். காட்சிகளுக்கு தகுந்தால் போல ஒளி அமைப்புச் செய்ததன் மூலம் மன உணர்வுகளை காட்சியோடு ஒன்றித்திருக்கச் செய்தனர். அதேபோலவே ஒலி அமைப்பும் சிறப்பாக இருந்தது.

நாடகம் ஆரம்பித்தது முதல் முடியும் வரை மிகவும் விறுவிறுப்பாக காட்சிகள் நகர்ந்து சென்றன. மனம் சிதையாமல் நாடகத்துடன் மனதை ஒன்றித்து உணர்வு ரீதியாக ரசிக்கும் படி செய்த இந்நாடக நடிகர்கள் அனைவரும் பாராட்டிற்குரியவர்கள். கடைசி காட்சிகளில் சிறிது கவனம் எடுத்தல் அவசியமாகும்.

1940ஆம் ஆண்டு எவ்வாறு இருந்திருக்கும் என்பதை உமது கண்கள் முன்பாக கொண்டு வந்து எம் அனைவருக்கும் நல்லதொரு ஆற்றுகையை வெளிப்படுத்தியிருந்த இந்த ஆற்றுகையை நெறியாள்னை செய்த விரிவுரையாளர் க.ரதிதரன் அவர்கள் பாரட்டிற்குரியவர்.

இன்று நவீன முறையில் வெளிப்பாட்டுத் திறனுடன் கூடிய ஆற்றுகைகள் நிகழ்த்திக் காட்ட முடிகின்றமைக்கு, இன்றைய தொழில்நுட்ப சாதன வளர்ச்சியும் நாடகமும் அரங்கியலும் எனும் பாட ஒழுக்கத்தின் மீதான பலரினது ஆர்வ அதிகரிப்புமே காரணங்கள் எனலாம். இவற்றைச் சாதகமாகப் பயன்படுத்தி, எமது பாரம்பரிய நாடகங்களையும் கதைகளையும் இன்றைய வசதி ஏற்பாடுகளுடன் நாடகமாக ஆக்கி அளிக்கை செய்கின்ற போது, எமது வரலாற்றின் வேர்களை எமது இளந்தலைமுறையினர் தரிசனம் பெற வாய்ப்பு ஏற்படும். 'உடையார் மிடுக்கு' நாடக அளிக்கை இத்தகையதொரு சிறந்த முயற்சியாகும்.

# பேசும் இதயங்கள்

1) டாக்டர் ஞானசேகரன் எழுதும் "எனது இலக்கியத் தடம்" ஒழுங்காக வாசிக்கின்றேன். மலையகத்தவர் அல்லாதவர்கள் மலையக இலக்கியம் படைப்பது பற்றிய ஒரு குறிப்பு அதில் காணப்படுகின்றது. மலையகப் பாட்டாளிகள் லயத்துச் சிறைகளில் பணயக் கைதிகள் போல் வாழ்பவர்கள். சிந்திப்பதற்கே நேரம் இல்லாமல் ஓடாக உழைப்பவர்கள். இக்காரணங்களால் தான் அவர்களின் சார்பில் இலக்கியம் படைக்கும் அவசியம் வெளியாருக்கு ஏற்பட்டது. இதே போலத்தான் வன்னி மக்கள் செட்டிகுளம் முட்கம்பி முகாமில், அடைபட்டுக் கிடந்த காலங்களில், அவர்களுக்காக இலக்கியம் படைத்தவர்கள் வன்னிக்கு வெளியே வாழ்ந்த இலக்கியவாதிகளே ஆவர். பெண்விடுதலை பற்றிப் பெண்கள் மட்டுமல்ல ஆண் இலக்கிய வாதிகளும் இலக்கியம் படைக்கின்றனர். தலித் மக்கள் விடுதலை பற்றித் தலித் அல்லாதவர்களும் எழுதுகின்றார்கள். 'சிறுவர் துஷ்பிரயோகம்" தொடர்பாகச் சிறுவர்களல்லா, வயது வந்தவர்களே எழுதுகின்றார்கள். நாட்டில் என்னென்ன பிரச்சினைகள் இருக்கின்றனவோ அத்தனை பிரச்சினைகளையும் இழுத்துப் போட்டு இலக்கியம்படைக்கும் உரிமை எல்லா இலக்கியவாதிகளுக்குமே இருக்கின்றது. என்ற எனது கருத்தை இவ்விடத்தில் பதிவு செய்து கொள்ள விரும்புகின்றேன்.

– *கா.தவபாலன் (பேராதனை)*

(2) சென்ற ஜனவரியில் எனது மூத்த மகள் – மருமகன் விடுமுறையில் ஸ்ரீலங்கா சென்று (யாழ்ப்பாணம் செல்ல முடியவில்லை) திரும்பும் பொழுது, மல்லிகை, ஜீவநதி என சில தமிழ் சஞ்சிகைகளும் வாங்கி வந்தார்கள். 'ஜீவநதி' யின் ஆசிரியர் குழு, பொருளடக்கம் என்பன பார்த்து மகிழ்ச்சியும், பெருமிதமும் அடைந்தேன். சிறப்பான சிற்றிலக்கிய ஏடாக அமைந்திருந்தது. தந்தை, மகன் முயற்சி சேவைகளைப் பாராட்டவும், வாழ்த்தவும் இச் சிறு குறிப்பை எழுதுகின்றேன்.

கட்டுரைகள் தரம் மிக்கவை. கவிதைகள் சிலவற்றின் பதிப்பில் மை அமுந்தி விட்டது. சிறுகதைகளில் போரின் பாதிப்பு தொக்கி நிற்பது எதிர்பார்க்கப்பட வேண்டியதுதான். பரணீதரனின் 'மீண்டும் துளிர்ப்போம்" என்னை மிகவும் பாதித்தது. எனது சொந்த அனுபவத்தை அப்படியே பிரதிபலித்து, கண்ணீர் வரவைத்தது. வாழ்நாள் உழைப்பின் சேமிப்பு முழுக்க செலவழித்து கட்டிய வீடும் சேகரித்த பொருட்களும், நூல்களும் ஒரு சிறு துண்டு கூட மிஞ்சாது அழிந்தொழிந்தன. கனடாவுக்கு முன்பும் எங்களுக்குஒரு வாழ்க்கை இருந்ததற்கான சான்றுகளான குடும்பப் படங்கள் எல்லாம் அழிந்து, மறைந்து போயின.

இறுதியாக, 'ஜீவநதி' கடைசிப் பக்கத்திலிருந்த 'அவை' இலக்கிய வட்ட 31 ஆவது நிகழ்வுச் செய்தி மேலும் களிப்பூட்டியது. ஆக்கபூர்வமான தொடர் நிகழ்வு, எம் மக்களின் பாராட்டுகளுக்கும், நன்றிகளுக்கும் கூறியது. படத்தில் தெரியும் வீட்டு மதிலும், முற்றத்தில் கூடியிருக்கும் கலை இலக்கிய ஆர்வலர்களின் தோற்றமும், எனக்கு யாழ் மண்ணின் மலரும் நினைவுகளாயின. தங்கள் முயற்சியும், சேவையும் நிலைக்க, நீடிக்க எங்கள் வாழ்த்துக்கள்.

– **சி. நடராஜா (கனடா)**

# கவிப் பெருமை

கவிஞன் இவனுக்குக் கட்டளை இடுவது யார்?
கவிஞன் எழுதுவதைக் கையால்
மறிப்பது யார்?
"கவிஞா இதைத்தான் கவியாக்கு"
எனச் செடிலைப்
பிடித்துத் தமக்கேற்ப ஆட்ட நினைப்பவரார்?
என்னிடம் அனுமதி எடுத்தே
எழுதுவது உன் கடமை என்று
உறுக்குகிற ஆழ்பவரார்?
கவிஞன் இவனுக்கே கட்டளை இடுவது யார்?
கவிஞனை ஏதோ....
கைக்கூலி, எடுபிடி,
எனஎய்த்து மேய்ப்பவர் யார்?
எவராய் இருந்தாலும்
இவர்களது பேச்சு ஏச்சு உறுக்கலுக்கும்
பணியாது...
அடங்கிப் படுக்காது கவிஞனுளம்!
எவர்க்கும் அடிமையற்று,
எவரையும் அடிமையாக்கும் மனமுமற்று,
வாழும் மண்ணில் சுயம்பாக...
நிமிரும் சுயக்கவிஞன் எவர்க்கும் அடங்கானாம்!
தனக்குச் சரியென்ற
தர்மத்தை எடுத்தியம்ப எவரின் அனுமதிக்கும்
ஏங்கிக் கிடக்கானாம்!
உடலைச் சிறையிடலாம்:
அவனுள்ளச் சிந்தனையை
தடுக்க நினைப்பவர்க்குத் தலை வணங்க
மாட்டானாம்!
கவிஞன் சுதந்திரக் காற்று:
கனற்கங்கு!
இதனை அறியாது....
கையிரண்டில் விலங்கிட்டு,
வாயினிலே பூட்டிட்டு,
உடலைச் சிறையிலிட்டால்
பொறுக்காது இப்பூமி, ஏனென்றால்
கவிஞனொரு
இயற்கையின் குறியீடு!
இயற்கை அவனுக்குத்
துணைநின்று ஏவல் செய்யும் துரோகம்
புரியாது!
தன் பிரதி நிதியை
தனதடையாளந் தன்னை,
தன்னுணர்வை மொழிபெயர்க்கும் தலைமகனை,
பெறுமதியே
கணிக்க முடியாக் கவிஞனை அடக்குவோரை
செல்லாக்கா சாக்கிவிட்டுச்
சிரிக்கும் வரலாறு!

- த.ஜெயசீலன்



# சும்மா இருத்தல் பற்றி

மனித வாழ்வின் இருப்பினுள்
எதிர்காலம் குறித்த கேள்விகளும் பீதியும்
நெஞ்சினுள் நிறைந்து கொள்வது
சும்மா இருத்தலின் போது
இருத்தலுக்கான அடையாளங்கள்
தொலைக்கப்பட்டனவான உணர்வு
தொற்றிக்கொள்வது
சும்மா இருத்தலின் போது,
'என்ன செய்கின்றாய்' என்னும்
கேள்விச்சரங்கள்
ஏடா கூடம் கொள்வது
சும்மா இருத்தலின் போது
சும்மா என்னும் சொற்பதம்
அன்றாட வாழ்வினூழ்
உதட்டு வழி அழியா மந்திரமாய்
தொடர்ச்சி கொள்கிறது.
களிம்புகள் பூசமுடியாத
ஆறாத காயங்கள் - இதய
விளிம்புகளில் அடைபட்டு அந்தரம் கொள்வது
சும்மா இருத்தலின் போது
ஏளனங்கள் எழுச்சி கொண்டு
சமாளித்துக் கொள்ளலின்
அடிநாத வார்த்தையாய் அலங்காரம் கொள்வது
'சும்மா' என்னும் வார்த்தையன்றோ...?
சுமைகளின் இருப்புகள் - எம்
இமைகளின் வழியே நீர் சொரியும்
இச் சும்மா இருத்தல் கூட
ஒரு வகையில்
அணு அணுவாய் மனதைக்கீறிடும்
சுகம் தரும் சுமை தான்.

- வெ.துஷ்யந்தன்

# நூல் அறிமுகக் குறிப்புகள்

## (1) அருள் தந்தை இராசேந்திரம் ஸ்ரலினின் 'ஆளுமை மலர உள ஆற்றுப்படுத்தல்'

அருள் தந்தை இராசேந்திரம் ஸ்ரலின் அவர்களால் எழுதப்பட்ட 'ஆளுமை மலர உள ஆற்றுப் படுத்தல்' (Counselling for personality development) எனும் நூல், யாழ்ப்பாணம் குடும்பவள நிலையமான 'அகவொளி' வெளியீடாக வெளிவந்துள்ளது. உள ஆற்றுப்படுத்தல் திறன்கள், தொடர்பாடற் திறன்கள், பிரச்சினை தீர்த்தல் திறன்கள், ஆகிய விடயங்களை விரிவாக உள்ளடக்கியதாக தமிழில் முதல் முதலில் வெளி வந்த நூல் என்ற வகையில் இந்நூல் சிறப்புப் பெறுகிறது.

யுத்தத்தினாலும் இயற்கை அனர்தங்களாலும் உள நெருக்கீடுகளுக்கு உள்ளாகி துன்பம் அநுபவித்து வரும் மக்களுக்கு, அவர்கள் ஆறுதல் பெறவும் அவர்களின் உளக்காயங்களைக் குணமடையச் செய்யவும் உள ஆற்றுப்படுத்தல் சேவையின் அவசியம் இன்று உணரப்பட்டுள்ளது. இதனால் இத்துறையில் பலர் இன்று ஈடுபாடு காட்டி வருகின்றார்கள். எனினும், 'உள ஆற்றுப்படுத்தல்' எனும் இச்சேவையில் ஈடுபடுவதற்கு ஆழமான அறிவும் பயிற்சியும் அவசியம். சாதாரணமாக, உள ஈற்றுப்படுத்தல் என்ற பதம் இன்று பலராலும் எடுத்தாளப்படுகின்றது. ஆயினும் உளக் குணமாக்கலில் ஈடுபட்டுள்ளோர்கள் பற்றிய பல்வேறு கருத்துக் குழப்பங்கள் நிலவி வருவதும் கவனத்திற்குரிய தாகின்றது. இந்நிலையில், இந்நூலில் உள்ளடக்கப்பட்ட விடயங்களும் நூலின் கட்டமைப்பும் சிறப்பாக அமைந்து, நூலின் பெறுமதியை உயர்த்தியுள்ளன.

பொது அறிமுகம், உள ஆற்றுப்படுத்துநரின் ஆளுமை அம்சங்கள், உள ஆற்றுப்படுத்தல் சூழல், ஆரம்பநிலைத்திறன்கள், தேர்ச்சிநிலைத் திறன்கள் பிரச்சினை தீர்த்தல் திறன்கள், இதர தேர்ச்சிநிலைத் திறன்கள் என அமையும் ஏழு அத்தியாயங்களில் இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ள விடயங்கள் நோக்கப்படுகின்றன. அதேவேளை, இந்த ஏழு அத்தியாயங்களும் மொத்தமாக அறுபத்துமூன்று பெரு ம்பிரிவுகளாக வகுக்கப்பட்டு, அப்பிரிவுகளின் கீழ் பல்வேறு உபதலைப்புகளில் விரிவாக விடயங்கள் அணுகப்பட்டுள்ளன. நூலின் நுழைவாயிலில் நூலின் உள்ளடக்கக் கட்டமைப்பும், ஒவ்வோர் அத்தியாயத்தின் தொடக்கத்திலும் மீண்டும் உள்ளடக்கக் கட்டமைப்பும் எண்ணக்கருப் படங்களாகத் தரப்பட்டிருப்பதும் கூட இந்நூலின் பால் வாசகரின் கவனத்தை ஈர்ப்பதாக உள்ளது.

உள ஆற்றுப்படுத்தற் சேவையில் ஈடுபடுவதற்கு அறிவுத்தளமும் பயிற்சியும் அத்தியாவசியம் என உணரப்பட்டுள்ள நிலையில், இச்சேவை குறித்த நூலொன்றை எழுதும் ஆசிரியரிடத்தும் இவை இரண்டையும் உள்ளடக்கிய தகைமைகள் வேண்டப் பட்டன. இந்நூலாசிரியர் அருள்தந்தை இராசேந்திரம் ஸ்ரலின் அவர்கள் இத்தகைமைகள் நிரம்பப் பெற்றவர். 'வழிகாட்டலும் உள ஆற்றுப்படுத்தலும்' எனும் துறையில் பிலிப்பைன்ஸ் நாட்டின் டீ லாசால் பல்கலைக்கழகத்தில் MSc பட்டத்தைப் பெற்றுள்ள நூலாசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் புனித சவேரியார் உயர்நிலைக் குருத்துவக் கல்லூரியிலும் விரிவுரை யாளராகவும் கடமையாற்றுகிறார். அதே வேளை, உள ஆற்றுப்படுத்துநராகத் தனது சேவையை வழங்கி வருவதோடு, உள ஆற்றுப்படுத்தற் பயிற்சி நிலையங்கள் பலவற்றில் வளவாளராகவும் செயற்பட்டு வருகின்றார்.



**நூல்** - ஆளுமை மலர உள ஆற்றுப் படுத்தல்
**வெளியீடு** - அகவொளி
**விலை** - 500/=

இந்நூலின் மொழிநடை எளிமையாகவும் ஆற்றொழுக்காகவும் உள்ளது. துறை சார்ந்த பதங்களுக் கான ஆங்கிலப் பதங்கள் அடைப்புக் குறிகளுள் தரப்பட்டுள்ளன. குறித்த விடயங்களை விளக்குவதற்காக உள ஆற்றுப்படுத்தற் சேவையின் போது பெறப்பட்ட உதாரணங்கள் துணைநாடுநருக்கும் உள ஆற்றுப்படுத்து நருக்கும் இடையே இடம்பெற்ற உரையாடலினூடாகத் தரப்பட்டிருப்பதும் விடயத்தெளிவை ஏற்படுத்துகின்றது. உதிரியாக, சில விடயங்களைப் பற்றி மட்டும் செல்லாமல், ஒரு பாடநூலை எழுதும் முறையில், சகல விடயங்களையும் உள்ளடக்கி இந்நூல் பரந்து விரிந்து செல்வது இந்நூலின் சிறப்பு எனலாம். இறுதியில் 13 பக்கங்களில் துறைச் சொற்களின் பட்டியலும் இணைக்கப் பட்டுள்ள இந்நூலின் விடய தானங்கள் 420 பக்கங்களில் இடம்பெற்றுள்ளபோதிலும் இந்நூலின் விலை ரூ.500 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. உள ஆற்றுப்படுத்தல் என்பது உளக்குணமாக்கற் செயற்பாட்டோடு பெருமளவு தொடர் புடையதென்னும், அச்சயற்பாட்டினூடாக துணைநாடுநர் களின் ஆளுமை மலரச் செய்வதனையே மைய

நோக்காகக் கொண்டிருக்கவேண்டும் என்ற செய்தியை வலியுறுத்துவதாக இந்நூலின் தலைப்பு அமைந்திருப்பது நூலாசிரியரின் அநுபவ தரிசனத்தின் விரிவையே சுட்டுகின்றனது. இந்நூலின் வரவு தமிழுலலுக்கு ஒரு பெரும் வரப்பிரசாதமாகும்.

– த.கலாமணி

## 2) கே.எஸ்.சிவகுமாரனின் "ஈழத்து சிறுகதைகளும் ஆசிரியர்களும் ஒரு பன்முகப் பார்வை (1962 – 1979)"

மணிமேகலைப் பிரசுரத்தின் வெளியீடாக கே.எஸ்.சிவகுமாரனின் "ஈழத்து சிறுகதைகளும் ஆசிரியர்களும் ஒரு பன்முகப் பார்வை" என்னும் நூல் வெளிவந்துள்ளது. 1962 – 1979 வரையான எழுத்தாளர்கள் பற்றியும் அவர்களது சிறுகதைகள் பற்றிய விளக்கங்களும், திறனாய்வுகளும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

இலங்கையர் கோன், செ.கணேசலிங்கன், வ.அ.இராசரத்தினம், டொமினிக் ஜீவா, காவலூர் இராசதுரை, நீர்வை பொன்னையன், வரதர், கே.டானியல், நாவேந்தன், எம்.ஏ.ரஹ்மான், செ.கதிர்காமநாதன், என்.எஸ்.ராமையா, செ.யோகநாதன், மு.தளையசிங்கம், மண்டூர் அசோகா, புலோலியூர் சதாசிவம், நெல்லை க.பேரன், அ.யேசுராசா, சாந்தன், மு.திருநாவுக்கரசு, நா.முத்தையா,பெனடிக் பாலன், லெ.முருகபூபதி, சுதாராஜ், மருதூர் மஜித், காவலன் எஸ்.ஜெ.ஜெகநாதன் முதலான ஈழத்து சிறந்த சிறுகதை ஆசிரியர்களின் படைப்புகள் பற்றிய வெளிப்படையான தன் கருத்துக்களையும் அப்படைப்புகளில் சிறந்தவற்றை இனங்கண்டும், குறைகளைச் சுட்டிக்காட்டியும் ஒளிவு மறைவு, முகஸ்துதி இல்லாமல் இத்திறனாய்வுகள் அமைந்துள்ளன.



**நூல்** - ஈழத்து சிறுகதைகளும் ஆசிரியர்களும் ஒரு பன்முகப் பார்வை
**வெளியீடு - மணிமேகலை**
**விலை** - 50/= (இந்திய விலை)

மேற்கூறப்பட்டவர்களின் கதைகளை நுணுகி ஆராய்ந்து பல விடயங்களை வாசகர்களுக்கு தெரியப்படுத்தி உள்ளார். 'தமிழிற் புனைகதைகள்' பற்றியும், 'மட்டக்களப்பு பிராந்திய பேச்சு வழக்குக் கதை' பற்றியும், 'கல்லூரிச் சிறுகதைகள்' பற்றியும், பரிசுச் முன்னைய சிறுகதைகள் பற்றியும், 'பெண்ணாக்கும் சிறுகதைகள்' பற்றியும் விரிவான பல விடயங்கள் தந்துள்ளார்.

சிறுகதைகளை படைக்கும் புதிய படைப்பாளிகள் இந்நூலை கட்டாயம் படிக்க வேண்டியது அவசியமாகும். நல்லதொரு சிறுகதையின் பலம் எது? பலவீனம் எது? என்பதை இந்நூலை வாசிப்பதன் ஊடாக அறிந்து கொள்ளலாம். ஆய்வு ரீதியாக அணுகும் மாணவர்களுக்கும் இந்நூல் மிகவும் பிரயோசனமானது.

–அர்ச்சுனன்

## 3) கே.எஸ்.சிவகுமாரனின் ஈழத்து சிறுகதைகளும் ஆசிரியர்களும் ஒரு பன்முகப் பார்வை (1980 – 1998)

மணிமேகலைப் பிரசுரத்தின் வெளியீடாக கே.எஸ்.சிவகுமாரனின் "ஈழத்து சிறுகதைகளும் ஆசிரியர்களும் ஒரு பன்முகப் பார்வை"யின் இரண்டாம் பாகம் வெளிவந்துள்ள. முதலாம் பாகம் போன்றே இந்நூலிலும், குப்பிளான் சண்முகம், க.சட்டநாதன், காவலன் ஜெகதாஸ், தெளிவத்தை ஜோசப், மு.கனகராசன், செ.யோகநாதன், முல்லைமணி, எஸ்.பொன்னுத்துரை, தாகூர் எப்கனி, முத்து ராசரத்தினம், க.தணிகாசலம், கோகிலா மகேந்திரன், எஸ்.வி.தம்பையா, கே.டானியல், சாந்தன், என்.சோமகாந்தன், உமா வரதராஜன், எம்.ஐ.எஸ்.முஸம்மில், சுதாராஜ், எல்.எல்.நிஹிமத், உடுவை தில்லை நடராஜா, அருண் விஜயராணி, மாத்தறை ஹலினா, ராமேஸ்வரன், ராஜ ஸ்ரீகாந்தன், அ.முத்துலிங்கம், மு.பொன்னப்பா, மாத்தளை சோமு, இரத்தினவேலோன், யோ.பெனடிக் பாலன், யூ.எல்.ஆதம் பாவா, ரஞ்சகுமார், கவியுவன் போன்ற வர்களின் சிறுகதைகளில் காணப்படும் சமூகம், பெண்ணியம், மனிதம், சிற்பிலியும், நுட்ங்கள், உளவியல், வார்த்தை பிரயோகம், கவித்துவம், அழகியல் பாங்கு போன்ற பல விடயங்களை தன் திறனாய்வுத் திறன் ஊடு தகுதியான திறனாய்வு ஒன்றை கே.எஸ். செய்துள்ளார்.



**நூல்** - ஈழத்து சிறுகதைகளும் ஆசிரியர்களும் ஒரு பன்முகப் பார்வை
**வெளியீடு - மணிகேலை**
**விலை** - 220/=

ஒவ்வொரு படைப்பாளியின் கதைச் சுருக்கங்களை கூறி, அதன் பின்னர் அவரது கதையில் தொனிக்கும் பண்புகளை எடுத்தியம்புவது சிறப்பு. ஒவ்வொரு படைப்பாளியின் கதைகளினூடும் வெளிப்படும் உணர்வுகளை கே.எஸ்.இன் இந்நூலை வாசிப்பதன் ஊடு அறிந்து கொள்ளலாம். பகக்ச்சார்பற்ற நடுநிலையான திறனாய்வை மேற்கொண்ட கே.எஸ்.பாராட்டிற்குரியவர்.

–அர்ச்சுனன்

## 4) அந்தனி ஜீவாவின் "பார்வையின் பதிவுகள்"

'கொடகே' வெளியீடாக அந்தனி ஜீவாவினால் ஞாயிறு தினக்குரலில் தொடர்ச்சியாக எழுதப்பட்டு வரும் "பார்வையின் பதிவுகள்" என்ற பத்தியில்

வெளிவந்திருக்கும் கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. ஈழத்து இலக்கியத்திற்கு வேண்டிய பல தகவல்களை உள்ளடக்கியதாக இந்நூல் வெளிவந்துள்ளது.

இந்நூலில் தனி மனிதர்களது எழுத்துத் துறை, நாடகம் என்பவற்றில் ஆழப்பதிந்த விடயங்கள் பற்றியும், படைப்பாளிகளின் ஆளுமை, இலக்கியங்கள், சிற்றிதழ்கள் போன்ற பல விடயங்கள் உள்ளடங்கியுள்ளன.



**நூல்** - பார்வையின் பதிவுகள்
**வெளியீடு** - எஸ். கொடகே சகோதரர்
**விலை** - 250/=

இப்பத்தி எழுத்துக்களில் பல ஆளுமைகளை தரிசிக்க முடிகின்றது. வெளிச்சத்துக்கு கொண்டு வரப்படாது, இருக்கும் பல படைப்பாளிகளை வெளிக் கொணர்ந்துள்ளார் அந்தனி ஜீவா. மலையகம் சார்ந்த பல இலக்கிய கர்த்தாக்கள் பற்றி இந்நூல் அறியத் தருகின்றது. கலைவேந்தன் ஸ்ரீசங்கர், கவைதா, எம்.சி. பிரேம்ஜீ, மலைநாட்டுக்காந்தி, சிங்கள இலக்கியத்தின் சிகரம், பிரேமிள், அ.ந.க. போன்றவர்கள் பற்றிய கட்டுரைகள் இலக்கிய உலகிற்கு புது விடயங்களாகும். பல அரிய தகவல்கள் தருவதாகவும் அமைந்துள்ளது.

அந்தனி ஜீவா தொடர்ந்து நடுநிலைமை தவறாது தன் சொந்த காழ்ப்புகளை வெளிப்படுத்தாது "பார்வையின் பதிவுகள் ஊடு" இன்றும் பல பத்திகளை எழுதி இலக்கிய உலகிகு வளம் சேர்ப்பார் என நம்புகின்றோம்.

– **அர்ச்சனன்**

## (5) பாலமுனை பாறூக்கின் கொந்தளிப்பு (குறுங்காவியம்)

கல்முனைப் பிரதேசத்திலிருந்து நாற்பது ஆண்டுகளாக கவிதை எழுதிவரும் பாலமுனை பாறூக் ஈழத்து இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்டவர். 1987இல் ' பதம்' எனும் கவிதைத் தொகுதியையம் 2009இல் 'சந்தனக்பொய்கை' என்ற கவிதை நூலையும் தந்த கவிஞர் பாலமுனை பாறூக் ஒக்ரோபர் 2010இல் ' கொந்தளிப்பு' ஏனும் குறுங்காவியத்தை நூலாக வெளியிட்டு வைத்துள்ளார்.

ஆழிப் பேரலையின் அனர்த்தங்கள் ஏற்படுத்திய துயரங்களின் பதிவாகவும் தென்கிழக்குப் பிரதேச முஸ்லிம் மக்களின் வாழ்வியற் கோலங்களின் ஒரு வெட்டுமுகமாகவும் 'கொந்தளிப்பு' எனும் இக்குறுங்காவியம் அமைந்து , ஈழத்து இலக்கிய உலகின் கவனத்திற் குரியதாகின்றது. உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த ஆதம் காக்கா எனும் ஒரு சாதாரண மனிதனின் எண்ணக் குமுறல்களினூடாக, தென்கிழக்குப் பிரதேச மக்களின் வாழ்க்கையையும் அவர்களது துயரக் குரலையும் சித்திரித்து, சமூக நோக்குடைய ஒரு தனி மனிதனின் உள்ளக் கொந்தளிப்பை ஒரு சமுதாயத்தின் குமுறலாக மாற்ற முனையும் ரசவாதத்தில் பாலமுனை பாறூக் வெற்றி கண்டுள்ளார் என்றே கூறவேண்டும். இதற்கு, அவரின் கவிதா உள்ளம் 1970 களில் முனைப்புப்பெற்ற இடதுசாரிச் சிந்தனைத் தளத்தில் வேர் கொண்டமை காரணமாயிருக்கலாம்.

மனதுக்கு இதமான கடற்கரைக் காட்சியுடன் 'ஆழிக் கடலெனும் அழகுப் பெண்ணாள் நீலச் சேலை அணிந்தே இருந்தாள்' என இக்குறுங்காவியம் அழகுற ஆரம்பிக்கின்றது. எளிய தமிழில், ஆற்றொழுக்காக, வாசகனை ஒரே மூச்சில் படித்துவிடத் தூண்டும் கவிநயத்தோடு காவியம் விரிந்து செல்வதும் இந்நூலின் மற்றுமொரு சிறப்பம்சமாகும். ஒரு சமுதாயத்தின் கலாசாரப் பரிமாணங்களை குடும்ப வாழ்வியலின் கோலங்களினூடாகத் தரிசனம் பெற முடியுமென்பதையும் சுனாமி போன்ற பேரவலம் ஒன்று நிகழும்போது அப்பரிமாணங்கள் யாவுமே சிதைந்து போய் விடுமென்பதையும் இக்குறுங்காவியம் தெளிவாக்கு கின்றது. ஒரு கிராமத்தின் ஆத்மாவுக்கு நகரமயமாக்கல் விளைவிக்கக் கூடிய துன்பங்களையும் கூட, அதன் சமூக, அரசியற் பின்னணியில் இக்காவியம் எடுத்துரைக்கின்றது.



**நூல்** - கொந்தளிப்பு
**வெளியீடு** - நல்றுறவு
**விலை** - 200/=

தென் கிழக்குப் பிரதேச மக்களுக்குரிய குழுக் குறியீட்டுச் சொற்களையும் வாழ்வியற் காட்சிகளையும் சித்திரிப்பினூடே பெய்து சென்றிருப்பது இந்நூலின் களத்தைச் சரியான முறையில் வெளிப்படுத்துவதற்கு ஏதுவாகின்றது. விவசாய வாழ்வும் மீனவ வாழ்வும் இணைந்து வேர் கொள்ளும் ஒரு சமுதாய வாழ்வை அறுபத்தொன்பது பக்கங்களில் அமைந்த நீண்ட கவிதையினூடாக சமூக அரசியல் தளத்தில் புலப்படுத்தியிருக்கும் வகையில் இந்நூல் சிறப்புக்குரியதாகின்றது. இது போன்ற குறுங்காவியங் களின் வரவை ஈழத்து இலக்கிய உலகு இன்று வேண்டி நிற்கின்றது. சொற்சிலம்பம் செய்து, கூற வந்த பொருளையே மறந்து, "எல்லோருக்கும் விளங்காத குறியீட்டுக் கவிதை என்னுடையது" என்று வீறாப்புப் பேசும் கவிதைச் சூழலில், எளிமையாக, எல்லோருக்கும் விளங்கும் படியாக உணர்வுகளைத் தொற்ற வைத்து கவிதை எழுத முடியுமென்பதை 'கொந்தளிப்பு' என்னும் இந்நூலினூடாக நிறுவியிருக்கின்றார்.


– **த.கலாமணி**

# கலை இலக்கிய நிகழ்வுகள்

1) அருள் தந்தை இராசேந்திரம் ஸ்ரலின் அவர்களின் "ஆளுமை மலர உள ஆற்றுப்படுத்தல்" நூல் வெளியீட்டு விழா யாழ்ப்பாண கலைத்தூது கலையக மண்டபத்தில் 28 – 02 – 2011 அன்று நடைபெற்றது. அருள் தந்தை A.J.யாவிஸ் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. வரவேற்புரையினை அருள் தந்தை M.V.E.இரவிச்சந்திரன் நிகழ்த்தினார். வாழ்த்துரையை அருள் கலாநிதி N.மரியசேவியர் அவர்களும், அறிமுக உரையை வைத்திய கலாநிதி S.சிவயோகனும், வெளியீட்டுரையை அருள் தந்தை S.J.இராசநாயகம் அவர்களும், நயப்புரையை கலாநிதி த.கலாமணி அவர்களும், ஆய்வுரையை அருள் தந்தை றெஜீனோல்ட் X.பிரான்சிஸ் ஆகியோரும் நிகழ்த்தினர். இந்நிகழ்விற்கு அருள் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் முதன்மை விருந்தினராக கலந்து சிறப்பித்தார். ஏற்புரையை அருள் தந்தை இராசேந்திரம் ஸ்ரலின் வழங்கினார். நன்றியுரையை அருள் தந்தை M.M.H.ஞானேந்திரன் நிகழ்த்தினார். 300இற்கும் அதிகமான ஆர்வலர்கள் கலந்து இந்நிகழ்வை சி



அருள் தந்தை
A.J.யாவிஸ்



கலாநிதி S.சிவயோகன் உரையாற்றுகிறார்,
ஏனைய பிரபலங்கள் அரங்கில்



அருள் தந்தை
றெஜீனோல்ட் X.பிரான்சிஸ்



அருள் தந்தை
இராசேந்திரம் ஸ்ரலின்

---

2) அவை(forum) கலை இலக்கிய வட்டத்தின் 33ஆவது ஒன்றுகூடல் கலை அகத்தில் 2011 – 03 – 13 அன்று எழுத்தாளர் தெணியான் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் வருகையாளராக கலந்து கொண்டு "இசையும் சமூக மாற்றமும் : ஓர் ஆக்க இசை அனுபவ தரிசனம்" என்னும் தலைப்பில் உரையாற்றினார். வரவேற்புரையை யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன் நிகழ்த்தினார். நன்றியுரையினை கலாநிதி த.கலாமனி நல்கினார். கருத்துரைகளை வேல் நந்தகுமார், த.தயாபரன் ஆகியோர் கூறினார்கள்.



எழுத்தாளர்
தெணியான்



விரிவுரையாளர்
இ.இராஜேஸ்கண்ணன்



பேராசிரியர்
என்.சண்முகலிங்கன்



கலாநிதி
த.கலாமணி



அவையினர்

---

3) கார்த்தியாயினி சுபேஸ் எழுதிய 'தாய் மடி தேடி...' சிறுகதை வெளியீட்டு விழா 06 – 03 – 2011 அன்று கொழும்பு தமிழ் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் டாக்டர் எம்.கே.முருகானந்தன் தலைமையில் நடைபெற்றது. வரவேற்புரையை ஆசிரியர் திரு.அ.சுபேஸ் நிகழ்த்தினார். வெளியீட்டுரையை மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் நிகழ்த்தினார். வாழ்த்துரைகளை திரு.டொமினிக் ஜீவா, திரு.வீ.தனபாலசிங்கம், டாக்டர் தி.ஞானசேகரன், திருமதி புஸ்பராணி நவரட்ணம் ஆகியோர் நல்கினர். ஆய்வுரைகளை திருமதி தேவகௌரி சுரேந்திரனும், திரு.மு.தயாபரனும் வழங்கினர். ஏற்புரையை நூலாசிரியர் கார்த்திகாயினி நிகழ்த்தினார்.



டாக்டர்
எம்.கே.முருகானந்தன்



எழுத்தாளர்
தெளிவத்தை ஜோசப்



திருமதி தேவகௌரி
சுரேந்திரன்





எழுத்தாளர்
மு.தயாபரன்





கார்த்தியாயினி
சுபேஸ்


# ஜீவநதி வெளியீடுகள்













இச் சஞ்சிகை கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த.கலாமணி அவர்களால் வெளியிடப்பட்டது.